உ

பொதிகைமலையி லெழுந்தருளியிருக்கும்

அகஸ்தியமகாமுநிவரருளிய

# வைத்தியவல்லாதி.

## அறுநூறு.

S117



இஃது

A. தீனதயாள முதலியார்

அவர்களால்.

சென்னை,

ஸ்ரீ ஆதிமூலம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1924.

பதினெண்சித்தர்களில்

# அகஸ்தியமகாமுநிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# வயித்தியவல்லாதியின் அகாராதி.


| பெயர். | பக்கம். |
|---|---|
| அமுர்தகெந்திக்குக்கில வல்லாதி, | ச |
| அவஸ்தைபத்து, | கங |
| அயனுதிவடகம், | கஅ |
| அமுர்தசஞ்சீவித்தயிலம் | உஎ |
| அதிகரணத்தயிலம், | உகூ |
| அரிதாரக்குளிகை, | சக |
| அதிசாரக்கிராணிக்குக் கபாடமாத்திரை | சங |
| அஞ்சுசுன்னக்குளிகை | அஉ |
| அயச்செமபு | கூகூ |
| இங்குளாதிக்குளிகை | சச |
| இதுவுமகு | சரு |
| இரச்சீனிச்சூரணம், | ருக |
| இதுவுமதுவாய்வுக் கெண்ணெய் | ருச |
| இதுவும்துரசபற்பம் | சாங |
| இரசபதங்கம் | சாசா |
| இச்சவேக்சாட்டிக்குக்கியாழம் | ” |
| இதுவுமதுபிள்ளை கடகுப்புகல | எங |
| உண்டிபிரிவு | கரு |
| உள்ளியெண்ணெய் | ஙங |
| உதிரநோய்க்கு | ருஅ |
| ஏரண்டத்தயிலம்நீராம் பல்மகோதாத்திற்கும் | ங0 |

| பெயர். | பக்கம். |
|---|---|
| ஏலாதிக்குளிகை | சசா |
| ஐயகிதானம் | க0 |
| கற்பகநவுற்பத்தி | கச |
| கன்னரோகத்திற்குத்தயிலம் | உஅ |
| சருங்குருவையரிசிசூரணம் | சஅ |
| கருங்கோழிச்சூரணம் வாதத்திற்கு | ருந |
| கருவளர்க்குமெண்ணெய் | ருங |
| கரப்பானுக்கெண்ணெய். | ருச |
| கடுக்காய்நொய் | ருகூ |
| களிம்பு | கூக |
| கப்பியுப்பு | எ0 |
| கல்லுப்பு | க0உ |
| கதியுப்பு | கூசா |
| காப்பு | க |
| காமாலை | கஅ |
| காசத்திற்குகண்டங்கத் திரிநெய். | சா0 |
| காசுகிறமெழுகு | கC0 |
| கிரிச்சுன்னங்களாறுக்கும் யெண்ணெய் | எஉ |
| குளிர்சுரத்திற்கு அரி தாரக்குளிகை | சக |
| குமட்டிக்காயக்கடுகு | ருஅ |
| குண்டலாதிக்குழம்பு | |
| குஷ்டத்திற்குமெண்ணெய் | கூ0 |

S117


குஷ்டத்திற்குமலைப் பரம்பெண்ணெய் சுசு
குப்பிவைப்புச்செந்தூரம் கoசு
கெந்தகவல்லாதி க
கெடிசூரணக்குளிகை சரு
கெவுரிமெழுகு அஅ
கெந்திமெழுகுசகல சரக்கும்வேதை அகூ
கெந்தகக்கட்டு கூசு
கெந்திபற்பம் கூஎ
கொம்மட்டிக்காய்குழம்பு ருஎ
சந்தனாதிதயிலம் உரு
சன்னிவாதத்திற்கு அமுர்தவல்லித்தயிலம் உச
சற்பங்கிவில்வாதிலேகியம் ருஅ
சண்டமாருதமை ருகூ
சகலசுரத்திற்குமாத்திரை சஉ
சண்டரசப்பற்பம் சுஉ
சத்துகள்செந்தூரம் எஉ
சலசரிமாற்கம் சுசு
சயத்திற்குயெண்ணெய் எரு
சகலவிபாதிகட்கு எச
சகலநோய்க்குமெணணெய் எரு
சகலரோகய்குட்டத்திற் குஎண்ணெய் எகூ
சகலகுட்டத்திற்கும் எகூ
சத்தியுப்புதீட்சை அரு
சவர்க்காரத்திற்குயெண் ணெய்விட அகூ
சவர்க்காரப்பூநீவழலை அஅ
சவர்க்காரத்தெதணணெய் கூ
சாரவல்லாதிக்குளிகை கஎ
சாரம்நிமனேக்காரச்சுன்னம் சுஉ
சாபம் கoச
சீனவல்லாதி ரு
சீதேவித்தயிலம் உகூ
சீதசிராங்கிஷக்குளிகை சo
சிஷன்மனருசோதிப்பு சுஎ
சுவாசத்தொகை கூ
சுரத்திற்குமிருத்துவாதிக்குளிகை
சுரத்திற்குஅஞ்சனமை சகூ
சூதவல்லாதிசகலவியாதிக்கும்
சூதசெந்தூரம்வேதை கூரு
சூதக்கட்டு கூஉ
சூதசெந்தூரம் கூஎ
செங்கொட்டைச்சுத்தி ரு
செம்பிராத்தயிலம் ருக
ஞானம் சகூ
தசநாடி அ
தசவாய்வு, கo
தங்கச்செம்பு கூஎ
தாளகற்பம் சுச
தாளகக்கட்டு சுரு
தராச்சுன்னமிருதாரசிக்கிசுன்னம கூஉ
தாம்பூரபற்பம் கூசு
தில்லுப்பல்லாதி சு
திரிநாவி கூ
திரிநாடிவிபரம் ,,
திரிலோகாகவட்சம் கசு
திருநேத்திரமை சஉ
திருநேதழரச்சூரணம் சகூ
திருமூலர்கொங்கணர் பேசியது கoரு
துருசுகுருசெயநீர் அக
துரிசிஅயச்சூததாம்பூரம் கூஎ
துரிசிகுருவு கoo
நவமூலத்திற்குநெய் ருரு
நவமூலத்திற்குஞ்சகல வியாதிகட்குஎண்ணெ எச
நாடிநிதானம் அ
நாடிநடை கo
நாடிமாத்திரைநிதானம் கக
நாக்குசூலைக்குத்தயிலம உச
நாசிகாபரணம் சஉ
நாளையென்பான் நாய்க்கன்குளிகை சரு
நாகக்கட்டு கூச
நீற்றின்சரக்குப்பரிட்கை அஎ
நூல்வரலாறு க
நூற்கோர்வை கo

நூற்சார்பு அஎ
நெய்க்கடுகு ருசு
நெல்லிமுள்ளிலேகியம் ௩எ
நோயவரும்வரலாறு அ
பத்தியபாகங்கூறுகின்றார் ௩
பவுதிரம்பிளவைக்
குத்மயிலம் ௩உ
பத்தியவுப்பு ரு௩
பரங்கிகுட்டத்திற்குவல்லாதி ,,
பாம்புத்தயிலம் எஅ
பாஷாணக்கட்டு க.ச
பித்தநிதானம் க0
பித்தத்திற்கு அமுர்தவல்
...லாதித்தயிலம் உசு
பீனிசத்திற்குநசியம் ௩ச
பூரணவல்லாதிதந்துக்
குச்சூரணம் கரு
பூசினியெண்ணெய் எஉ
பூவழலை சுஅ
பூபதி க0சு
மரணக்குறிப்பு க0
மகாசாரத்துலாதிகுளிகை கஎ
மகாசந்தனாதித்தயிலம் உ0
மகாநயனசஞ்சீவித்தயில்ம் உக
மகாதிரிபல்லாதிதயிலம் உ௩
மகாஏலாதித்தயிலம் உரு
மகாவில்லாதித்தயிலம் உஎ
மகாசிந்தாதிலேகியம் ௩சு
மகாசுராங்கிஷக்குளிகை ச௩
மகாயிங்குளாதிக்குளிகை சச
மகாநனலாவச் சூரணம் அ0
வாதத்திற்குப் சஎ
மகானலுருதச்சூரணம் சஅ
மாந்தநெய் சு0
முன்சவர்க்காரச்சுன்னம் சு0
முப்பூவின்விபரம் க0க
முப்புகுரு க0உ
மூலவாய்வுக்குப்பால் ருச
மூலத்திற்குநெய் ,,
மேகசூலைக்குயெண்ணெய் எ௩
யாகசாலை அ0
ராமதேவர் ஆயிரத்தில்
வகாரங்காணக் அசு
லிங்கமெழுகு அச
லிங்கமெழுகு க0ரு
லிங்கமெழுகுமால்
வேவிவங்க அச
வல்லாதி சூரணம்
பத்தியமில்லை எ
வலிக்குநசியம் ௩சு
வயிற்வியாதிற்குநெம் ருரு
வல்லாரைநெய் ருசு
வாதநிதானம் க0
வாய்வுகளுக்கு சஎ
வாரசூலை ௩ரு
வாதத்திற்குப்பிட்டு சஎ
விபாதிவரும்வரலாறு உ
வில்லாதிலேகியம் ௩ரு
வீரபற்பம் எக
வீரமெழுகு சுக
வெள்ளுள்ளிவுதிரநோ
ய்க்குப்பற்பம் ருஎ
வெண்காரக்கட்டு சுரு
மேற்படிசுரத்துக்கெல்லாப் ச௩

அகராதி-முற்றிற்று.

உ

சிவமயம்.

பதினெண்சித்தர்களில்
மஹா மகத்துவம் பொருந்திய

# அகஸ்த்தியமஹாமுநிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# வைத்தியவல்லாதி.

## அறுநூறு

காப்பு.

ஆதியாமகண்டபரிபூரணமாய்நின்ற அண்டபராபரமானவைங்கரனேகாப்பு, சோதியாமறுமுகவன்காப்பு துரியவெளிதனில்நின்றசுந்தரியேகாப்பு, வாதியாமென்குருவின்பாதங்காப்பு மகத்தானபெரியோர்கள்சரணங்காப்பு, பேதியாய்வயித்தியந்தானறுநூறுகப் பேசுகின்றேன்வாணிபதம்போற்காப்பே. (க)

நூல்வரலாறு.

காப்பென்றவல்லாதிசாற்றுமாதி கருவானவழலைசவர்க்காரச்சுன்னம், நாப்பென்றபற்பமொடுதயிலமெண்ணெய் நாடியொருவியாதிவரும்நாட்டந்தானும், தாப்பென்றசூட்சாதிமருந்துமல்லாற்சாற்றுகிறேன்வடகமொருகுளிகைதானும், கோப்பென்றயாகஞ்செய்சாலையோடு குறிப்பானகிரந்தங்கள் கூறுவேனே. (உ)

கூறுவேன்வேதியங்கள்சூரணங்கள் குறிப்பானசெந்தூரங்கைப்பாகங்கள், தேறுவேன்உலகத்தோர்பிணிகள்தீரச் செப்பினேன்தெரிந்துசெய்பத்தீரும்நோய்கள், சீறுவேன்பொருள்மேலேயிச்சைப்பட்டு தீருதவியாதிதன்னைதீர்ப்பபேனென்று, தூறுவேன்கைப்பொருளுக்கிச்சியாதே துன்பத்துக்காளாகிசுழன்றிடாதே. (ங)

சுழன்றலையும்பாவிக்கோசொன்னேனின்னூல் சுந்திரமேஞானநூல்துடர்ந்துபாரு, தெளிர்ந்துபலநூல்பார்த்து வயித்தியம்பாருதேசத்தின்நல்லவரோடிணக்கம்பண்ணு, வழிந்துவிடுங்காமநோய்

குள்ளாய்நின்று மங்கையர்கள்கற்பழிந்துமசிழ்ந்திடாதே, அழிந்து மனம்போகாமல்நிலையில்நில்லு அடக்கமாயின்னாலே அறையுதேனே

வியாதிவரும்வரலாறு,

அறையுதேன்விந்தழிந்தால்மேகமாச்சி அழுதளிந்தருடுகொண்டால்வாய்வுசேரும், பறையுதேன்சூலகுஷ்டங்கிரந்திப்புத்து பவுத்திரங்கள்பிளவைபொடுகண்டமாலே, அறையுதேன்அறையாப்புவெட்டியபபுண்ணும் அருங்கரப்பன்சிரக்குகுன்மமலநீர்க்கட்டுங் குறையறவேநீர்க்கொண்டுசயநோய்க்காசங் குடிலமாம்பேதியொடு திராணிப்பாண்டே. (ரு)

பாண்டுடனேகாமாலை பீனிசங்கள் பரிந்துவந்துசேருமடா பலநோய்யின்னம், தாண்டுமிந்தமேகத்திலேயபித்தந் தான்சேரில் நபனத்தில்சாரும்நோய்கள், மூண்டிடுமேவாதமெனில்நீரிழிவேயா குமுத்தமனேபித்தவலிற்சுரமேதோன்றும், கூண்தடுமாறுமலிருக்க மாட்டார் குரும்பரேமன்னுடலுங் குலைந்துபோமே. (சு)

குலைந்துவிடுமேகத்தாலெழுந்தரோகம் குடல்வாதந்திமிர்வாதங்குண்டலமாம்வாய்வு, உலைந்துவிடுந்தளவாதம்பச்சைவாதமஉள் நடுக்கல்நரித்தலையாம்வாதத்தோடு, துலைந்துவிடும்பலவாதமெல்லாந்தீரச் சூதவல்லாதியென்றுசொல்லக்கேளு, அலைந்துவிடுஞ்செங்கொட்டைபழுதுபோக்கி அப்பனேவிராகனிடையிருபத்தினாலே.

சூதவல்லாதி சகலவியாதிக்கும்,

பத்தியென்றகுரோசானிவிராகனிடைரண்டு பாருலர்ந்தசதாவேரிக்கிழங்குரண்டு, வெத்தியுள்ளநிலப்பனையின்கிழங்குரண்டுவெயிலுலர்த்திச்சூரணித்துசீலைவடிகட்டி, கத்திபொறக்கல்லுரலிலிட்டுப்பின்னே கட்டைபாறைத்தன்னாலேரண்டுசாமம், சித்தியென்ற செங்கொட்டைபொவவொன்றாகச் சேர்த்திடித்துச்சூதமதில் பூரம்ரண்டே, (அ)

இரண்டிட்டுசேர்த்திடித்து மைபோலானால் இருபத்திரண்டுருண்டைப்பிடித்துக்கொண்டு, உருண்டதனையரண்றனக்குவைத்துப்போற்றி யொன்றைவிட்டிருபத்தொன்றெடுத்துக்கொண்டு, திரண்டபிணியாளருக்குயேழுருண்டை தின்னவேபத்தியந்தான்செப்பக்கேளு, ரண்டசிறுபயறுடனேகோழிமுட்டை திறமானதுவரையென்றபருப்புநெய்யே. (கூ)

பருப்புடனேபாலாகுமைந்தாநாளில் பாலகனேவறுத்தவுப்புசத்தேகூடும், சுரப்புவாய்வழியோடுஞ்சூலைகட்டுசொல்லுவேன்முல்

லேவந்தநீரினாலே, கருப்பமாய்க்கொப்பளித்துவெள்ளாடெனறகன தலேதான்வெந்நீர்கியாழந்தன்னே, விருப்பமாய்க்கொப்பளித்துக் கரியுங்கூட்டில் விதமானவாய்ச்சூலேயேகுந்தானே. (௧௦)

ஏகுமேயெட்டாநாளேரண்டத்தெண்ணைய இட்டுநீமுழுகிட வேயேகும்நோய்கள், சாகுமேகிரந்திகுட்டம்சூலேயரையாப்புச் சந்தில்வரும்பவுத்திரங்கள்பிளவைபபத்து, ஏகுமேவிருப்புருதிகண்ட மாலேவிதனஞ்செய்வாதமெல்லாம்விரைந்துபேகுரந், தேகுமேபசித்துதடாபத்தியமேவேண்டுஞ் சீனவல்லாதியொன்றுதெளிந்துகேளே. (௧௧)

சீனவல்லாதி.

தெளிவானசீனமென்றபட்டையோடு செங்கொட்டவெள்ளுள்ளிபேரீச்சங்காய், சளிவானயெள்ளுவகைபலந்தானுலு சொல்லுகிறேன்மேல்மருந்துசுக்குவோமம், றெளிவானகுரோசானிமிளகு மஞ்சள் நிலமானமரமஞ்சள்சித்கரத்தைமல், ஒளிவானகும்மப்பூசித்திரமூலம் உயர்தேசவரக்கிராம்புசாதிக்காயே. (௧௨)

செங்கொட்டைச்சுத்தி.

சாதியென்றபத்திரியுங்கடுக்காய்சீரந்தான் தான்கரியசீரகமுந்தான்றிக்காயும், ஆதியென்றசிறுகுகஸ்தூரிதா மனுாவின்கோரோசனேயும் வகையொன்றுக்கு, நீதியென்றவிராகனிடைரண்டுந்தூக்கி நேராகவெடுத்துவஸ்திரகாயஞ்செய்து, வாதியென்றசெங்கொட்டைசுத்திகேளு வகையானசுண்ணம்புகல்லில்நீற்றே. ()

நீற்றுவதுகாடிவிட்டுநீற்றிர்க்கொண்டு நினைவாகக்குளிர்சலத்தாவுலம்பிப்போட்டு, ஆற்றுவதுமேதிபச்சாணிப்பாலி லடவான புளியிலேயங்கியாழந்தன்னில், மாற்றுவதுபுரசம்பூங்கியாழத்தோடு வகையோமக்கியாழத்திலாவின்பாலில் கொற்றுவதுகியாழம்பால் கொதிக்கையிலேவிட்டு குளிர்ந்தபின்புகழுவியெடுசுத்தியாச்சே.

சுத்திசெய்தவறுத்துக்கல்லுரலிட்டு துடியாகயிடிக்கையிலே முன்பொடிபைத்தூவு, வெத்தியதுபனேவெல்லம்பலந்தான்பத்து வெள்ளுள்ளியெள்ளுடனே பேரீச்சங்காய், பத்தியதுஆவின்னெய் படிகாலப்பா பரிவானதேனதுவும்படிகாலாகு முத்தியமேவீட்டாட்டிமயினம்போலாம் மும்மதத்தோன் மூன்னேவைத்துப் பூசை செய்யே. (௧௫)

பத்தியாபகங்கூறுகின்றார்.

பூசைசெய்துமண்டலந்தானெல்லிக்காய்வீதம் புகழாகவந்திசந்திகொள்ளும்போது தேசமெய்ச்சமருந்திதுதான்பயித்தியத்தைக் கேளுஞ் சிறுபயிறுபசுவின்பால்தயிர்நெய்யாகும்,வாசமொத்துத்து

வரையுடபருப்புமாகும் மைந்தனேபுடலங்காயவரைக்காயம், நேச மொற்றமுறுங்கக்காய்கிறுகீரையாகும் நெல்லிக்காய்தூதுவளைபரு ப்பாம்பாரே. (கரு)

பாரானவெள்ளாடுசுறுமீன்காடை பரும்விறுலுடும்புடனே முயலுமாகும், வாரானகரப்பனென்றவஸ்துவாகா மங்கையரைக் கூடாதே மிளகாய்மாத்து, போனசூலைபதினெட்டும்போகும் பெருங்கிரந்திப்பதினெட்டுகுட்டம்போகும், மோனகரப்பன்களி ருபத்தொன்றும் மேகத்தின்னூறலெலலாம் வெகுண்டுபோமே.

போமென்றவுபத்திரங்களுதிரவாய்வு பெல்லாதகுலைமுட்டும் பிளவைப்புத்து, ஆமென்றவாதமெல்லாமகன்றுபோக மப்பனே திரேகமதுயிறுகும்பாரு, தாமென்றதாதுநஷ்டமிந்திரியங்கட்டுஞ் சங்கையில்லாதோடுமடாதாக்கிப்பாரு காமென்றபராபரனுருரைக் கச்சொன்னார் நாட்டோர்க்குநாமுரைத்தோம்நபந்துபாரே. (கஅ)

அமுர்தகெந்திக்குக்கில்வல்லாதி.

பாரப்பாஅமுர்தகெந்திக்குக்கில்வல்லாதி பாடுகிறேன்மகந்த கந்தான்பலந்தானெட்டு, வாரப்பாபாண்டத்திலமுரிதன்னை வாய் தனிலேவேடுகட்டிகெந்திதனைப்பரப்பி, நேரப்பாமேல்மூடிச்சீலை மண் செய்து நிரந்தரமால்க்குழியில்வைத்துவாய்த்தெரியமூடி, சீ ரய்பாமணணிட்டுமேல் புடத்தைப்போடு சீதளமாய்க்குளிர்ந்த பின்பு யெடுத்துக்கொள்ளே. (கசு)

எடுத்ததனைக்குளிர்ந்தசலத்தாலம்பிப்போட்டு யீருள்ளிச்சாற் றில்முன்போற்புடத்தைப்போடு, அடுத்ததனைஆவின்பால்தன்னிற் போடு ஆனைக்குட்டித்தக்காளிச்சாற்றிற்போடு, விடுத்ததனை சிறு கீரைகாற்றிற்போடு;விளங்குமயிலாஞ்சிகைத்தபிரிற்சேர்த்துக், கடு த்ததனைமுன்போலே புடத்தைப்போடு கனகம்போல்கெந்தகந் தான் சுத்தியாச்சே. (உ௦)

ஆச்சப்பாகுக்கிலுமேபலந்தானென் அழகானவேம்புமுதற்ப ட்டைதன்னை, காச்சப்பநகியாழத்தில்குக்கிமுடிந்திட்டுக் கட்டுமது ஆறுமல்மூன்றுநாள்வை, பாசப்பாபின்னெடுத்துக்குளிர்ந்தசலம் விட்டுப் பதறுமல்மிசைந்துநன்றுயிறுத்துப்போட்டு, வீச்சப்பா ஆவின்மோர்படிதான்விட்டு விளங்கு பழச்சாற்றைதான்காடி கூட்டே. (உக)

காடிபடியென்றப்பாநாளேழுநீர்க் கசப்பெல்லாவாங்குமடா கழுவிப்போடு, நாடியேயாவின்பால்படியிற்போடு நலமாகக்கொதி க்கவைத்து யுலர்த்திப்போடு, தேடியேயாவினிடநெய்தான்விட்டு சி

சிவக்கவறுத்தெடுத்திடுவாய்பலமுநாலு, நாடியே அமுர்தசர்க்கரை தாநாலு!நல்லசுத்திசெய்துகொட்டைவறுத்துநாலே. (உஉ)

நாலுபலங்கழுவியெடுத்துலர்ந்தவெள்ளு-நல்லகெந்திசுத்திசெய்துநலமாய்க்கேள், பாலுஜறமானதொருபரங்கிப்பட்டை பாச்சடாவலையுமாண்டுபலந்தான்மூன்று, மேலும்வகையெழுகுபலமுப்பதாச்சுமேல்மருந்து சொல்லுகிறேன் விரைந்துகேளு, கோலமெனுங்கொடிவேலிவேரின்பட்டைக், குறையாமல்பலமிரண்டு கூறக்கேளே. (உ௩)

கேளப்பாவாலுளுவை யரிசிகோஷ்டங் – கொடிதானவால்மிளகுபேரீசங்காய், வேளப்பாசடமாஞ்சிசிவனார்வேப்பு – வெட்டிவேர்வெள்ளறுகுசங்கன்குப்பி, தாளப்பாதிரிகடுகுசிறுநாகப்பூதக்கோலஞ் சீரகமுந்தாளிசையும், நீளப்பாநன்னாரி நெரிஞ்சிமுள்ளுநிலப்பனையுந் தண்ணீர்மிட்டான்கொற்றமல்லியாமே. (உ௪)

ஆமடாகல்மதமுங்கல்னாரேல் - மப்பனேதிரிபலையுங் கருவாப்பட்டை, ஓமடாகார்போகஞ் சித்திரத்தை - யுற்றகருஞ் சீரகமும் வகையொன்றுக்கு, தாமடாபலமொன்று சூரணமேசெய்து தாக்கடாகல்லுரலிற்சாமநாலு, நாமடாபனைவெல்லம் பலத்தைக்கேளு-நாற்பத்திரண்டிட்டு யிடித்துக்கொள்ளே. (உ௫)

இடிக்கையிலேதேனாறு பலந்தானெட்டு-என்மகனே மயினம்போலெடுத்துக்கொண்டு, பிடிக்கையிலேதான்றிக்காயளவு கொள்ளுபிசகாதுமண்டலத்தில் தீரும்நோய்கள், படுக்கையிலே கிடந்தகைகால் முடக்கமெல்லாம்பறக்குமடாகிரந்திகுஷ்டம், குலைவாய்வு எடுக்கையிலேபுண்புரைகள்வாதமென்ற தெண்பதுடன் பவுத்திரங்களேகுந்தானே. (உ௬)

ஏகுமேஉட்குத்துமாரடைப்பு யென்னசொல்வேன்கரப்பனொடுயோனிப்புத்து, சாகுமேசூசிகாகிராணிகுன்மங் தரியாதுகெற்பத்திலெழுந்தரோகம், போகுமேகண்ணோதிகண்டமாலை பொல்லாத அரையாப்புருத்திரவாய்வு, வேகுபேனுசீகாபீடமல்லால் விப்புருதிபிளவையும்விட்டோடுந்தானே. (உ௭)

ஓடுமேபதிங்காதமார்பிலாணீ யுரைக்கவென்றால்முடியாதுவுயர்த்திமெத்த வீடுமேபிலத்துதடாபத்தியங்கேளு வெள்ளாட்டுவற்றலுடனவரைப்பிஞ்சு, தேடுமேமுருங்கக்காய்ச் சிறுபயறுமாகுஞ் சிறந்தபுடல்நெல்லிக்காயரைக்கீரையாகும், நாடுமேதுவரையுடபருப்புநெய்யு நல்லாவின்மோருகும்நாடிக்சாணே. (உ௮)

## கெந்தகவல்லாதி.

நாடியேயின்னமொன்றுநவிலக்கேளு நற்கெந்திவல்லாதிநாடிக் காணுங், தேடியேகெந்தகந்தான் பலமூன்றப்பா சிறப்பானசெங் கொட்டை பலமேரண்டு, சூடியேசெண்பகப்பூபரங்கிப்பட்டைச் சொற்காதிப்பத்திரியுங் கடுக்காயோமஞ், ஆடியேசங்கன்வேர்சிறு கிளாவேர் ஆடுதின்ணாமூலிசங்கன்குப்பிவேறே. (௨௯)

வேறானசிலவாகைகிரந்திதானு மிளகருணை அசுவகெந்தமிலவு ங்கப்பட்டை, பேறானதலைக்கருளி மிளகுசுக்கு பெருமருந்துப்பட் டைபிறாயன்பட்டைகோஷ்டம், சீறானகாட்டுமல்லிகொல்லங்கோ வைசீரகமுஞ்சித்திரத்தைஜாதிக்காயுந். தாறானநெல்லிமுள்ளிலவுங் கப்பத்திரிதவசியென்றமுருங்கவேர்தான்றிக்காயே. (௩௦)

காயாதிப்பிலியுஞ்சித்திரமூலங் கனத்தகோரோசனையுங் கரிய சீரகமுந் தீயானசிறுசெருப்படையும்வேறுஞ்செப்புவே னவமூலிப் பலமொன்றப்பா, ஓயாமலுவர்த்தியதை நிறுத்திக்கொண்டு வுத்த மனைகடைமருந்தரைப்பலமதாகுஞ், சாயாதேதயிடித்துவஸ்திர கா யஞ்செய்துதவறாமலிடித்திடுவாய்ச்சாமம்நாலே. (௩௧)

சாமமதுயிடிமயினமாகும்போது சர்க்கரைதா நாலுபத்துபல மேபோடு, சேமமதுதேன்படி தானொன்றுவிட்டுச்சேரவேயெடுத் துப் பீங்காணில்வைத்து, நேமமதுநெல்லிக்காய்வீதமாகயீசனுக் குப்பூசைமண்டலமே கொள்ளு, ஏமமதுபோலாகுந்திரேகந்தானு மென்னசொல்வேநோய்போகுப்போக்குத்தானே. (௩௨)

போக்குமேதிமிர்வாதமண்டைசூலை புத்துடனேவெடி சூலைக் கபாலசூலைத், தீக்குமேமருள்கிரந்திகரப்பான்குஷ்டங் திரண்டெழுந் தபிளவையுடன்சீழ்மூலங்கள், நீக்குமேபலவிதனங்கண்டபாலை நீங் காதவாதமொடுகெற்பசூலை, கேட்குமேயரையாப்பவுத்திரத்தைக் கேள்தண்டுசூலையோலிங்கப்புத்தே. (௩௩)

லிங்கத்திலெழுந்ததொரு ரோகமெல்லாம்பில்லாத பத்தியத் தைநிசமாய்க்கேளு, சங்கொத்தவுப்பதனை வறுந்துக்கூட்டுதவறா தேதுவரையுடபருப்புநெய்புங்கொத்தமாங்க்ஷங்களாகாதொன் றும்நாடாறுதகரப்பனென்றபதார்த்தந்தன்னை, சிங்கத்தைவெல்வ தற்கும்பிலனுண்டாகும் தீராதநோய்பலவுந்தீருந்தானே (௩௪)

## தில்லுப்பல்லாதி.

தானென்றதில்லுப்பல்லாதிகேளுதப்பா தேயெள்ளதுவும்பல ந்தானைந்து, தேனென்றசெங்கொட்டைபலந்தானைந்து சிறந்தநல்ல

வெல்லமதுபலந்தானைந்து, வேனென்றவுரலிலிடிமயினம் போலே வெருகடிதான்மண்டலமே கொள்ளுகொள்ளு, ஊரென்ற கிரந்தி யொடுசூலையெல்லா மோடுமேபத்தியந்தானுரைக்கக்கேளே. (௩௫)

கேளப்பாவாய் வானபதார்த்தந்தள்ளு கிருபையாய்மங்கைய ரைக்கூட்டிடதே, நாளப்பாமற்றதெல்லாமாகும் நாடாதேமிளகாயு துளகிநேடு, கேளப்பாகெட்டதுபோல்நோயைக்கொட்டுஞ் சிவன் சொல்ல ஆயிசொன்னாள்தெளிந்துகாணு, நீயப்பாசிந்துவல்லாதி தன்னைநீநன்றாய்கேளப்பா வினைவாய்த்தானே. (௩௬)

வினைவாகப்பழம்புளிதான்பலமோநாலு நிறையவேசெங்கொட் டைப்பலந்தானாலு, கனமானமுருங்கிலையின்றுளிநமூன்று சட்டா ணகரியுப்புப் பலமோரண்டு, கனமானவெண்காரம் பலமுமூன்று தப்பாதேவெடியுப்புரண்டுதாளுந், தினமாகவுரலிலிடிமயின்போலத் திரட்டிநீசுண்டக்கா யளவுகொள்ளே (௩௭)

கொள்ளவேநீரடைப்புபவுத்திரசூலை குடிகெடுத்தகல்லடைப் புகுண்மவாய்வு, மெள்ளவேகுடல்படுவன் அண்டவாய்வுவிழலான சதைபடைப்பன் வுதிரவாய்வு, கிள்ளவேமறைந்திருந்தபெருநீர்க் கோர்வை கேட்டுமடாசாந்தத்தைச் சேர்த்துக்கொள்ளு, துள்ள வேவந்த நோய்த்துலைந்துபோகுஞ்சுந்தரிக்குயீசனென்று சொன்ன வாறே. (௩௮)

வல்லாதிசூரணம்பத்தியமில்லை.

வாறானவல்லாதிசூரணத்தை மைந்தனேசொல்லுகிறேன்மகிழ் ந்துகேளு, பேறானதயணீர்மிட்டான்கிழங்கிநேடு பெருங்கிழங்கு நிலப்பனையுமுலர்த்திச்கொண்டு, கூறானபரங்கியிட தேசந்தன்னிற் குலாவுகின்றமுருங்கையுடப்பிசினுங்கூட்டி, ஆறானருமஸ்துயென்று சொல்வார் அதுவகைக்குவிராகனிடையீராமே. (௩௯)

ஆமென்ற செங்கொட்டை விராகனிடைகேளு அப்பனேவீ ரெட்டுவசடுபோக்கி, ஓமென்றநாய்க்கடுகுகுரோசானியோகம் முட மினுகிருமிகிருமானியோமம், நாரென்றவகையைந்து விராகனிடை யெட்டுரசமென்று பனைவெல்லங் நாலாறுகும், தாமென்றமருந்துவ கைபதினொன்றுந்தான் தாநூறு அன்பதுவிராகனிடையாச்சே. (௪0)

ஆச்சிந்தமருந்தையிடியாறுசாம மதிநேடுவெற்றிலையின்காம் பஞ்சாநூறு, மூச்சிந்தசூரணத்தை யெடுத்துக்கொண்டு மும்மதத் தோன்முனவைத்துபூசைபண்ணிப், பாச்சிந்தவெருகடிதான் வாயி லிட்டு பண்பாகக்குளிந்தமோர் குடிக்கச்சொல்லு, போச்சிந்தசூலை யொடுகிரந்திகுட்டம், பொல்லாததிமிர்வாய்வுபோகுந்தானே. (௪௧)

போகுமேயரையாப்பு மேகவாய்வு புத்துடனேகரப்பனுமேமி ளவைசெய்து, ஏகுமேபவுத்திரங்க ளாணங்களெல்லா மேழுநினங்

தானருந்தசுருக்குமெற்ற, ஆகுமேபத்திபங்களில்லையில்லை ஆகாத வஸ்துவெல்லாமருந்தவேண்டாம், நாகுமேதரித்தபிரானுமைக்குச் சொன்னார் நாரணனையுப்பொன்று நாட்டொணாதே. (சஉ)

### நோய்வரும்வாலாறு

நாடுவாய்நோய்வருவதேதென்றாக்கால்நவிலுமதிபோகயிச்சை யோகத்தால், சூடுவாய்மேகமுண்டாய் வாய்வுசேர்ந்து சேரவே நோயாச்சுதிடமும்போச்சு, கூடுவார்கெற்பத்திற்புணர்ச்சிமீறகொல் லுமடாநோய்ப்பாகங் கூறங்கேளு, கேடுவார்தேகமது வெண்சாணி எம், செப்புவோமங்குலந்தான் தொண்ணூற்றாரே. (சங)

### நாடி விதானம்.

தொண்ணூற்றறங்குலத்தின் மூலந்தன்னிற் சொல்நாடியெழு பத்தீராயிரந்தான், தண்ணூற்றுமிதில்நாடிபத்துமாகுந் தப்பாதுயி துமூன்று துாக்கிப்பாரு, விண்ணூற்றியெழுபத்தீராயிரந்தான் மிகுந் தநோய்தனிற் சுருக்கம்விலைறந்துபாரு, எண்ணூற்றித் தொண்ணூ றையஞ்சிலேற்ற யிதுதுகையிற் றசைநாடிப்பகுத்துக்காணே. (சச)

### தசநாடி.

காணுவாயிடைசுழினைபின்கலைபிரேடு காந்தாரிசிங்குசங்கினி யாசனியோடு, பூணுவாயலம் புருடன்சிங்குவையுமல்லாற் புகழுமி வர்செய்தொழிலும் பொருந்துமிடங்கேளு, காணுவாவிலதுகாலங் குட்டத்திருந்து கத்திரிமாறுவிலது நாசிதனிற்பாயும், பேணுவாய் பின்கலைதானிடதுகாலின்பெருவிரலிலிருந்துகத்திரிமாறலாமே(சரு)

ஆறானவலதுநாசியினிற்சாரு மப்பனேசுழிமுனை மூலத்திறந் துமேல்ல, ஆறான ஆக்கினையு மட்டும்பாய்ந்து விதுதானுமுச்சிலஞ் சிறுவாணியாகும், பேறானசிங்குவையுன்ணாக்கில்நின்றும பேணி புணணுமன்னத்தைகீழேபாய்ச்சுந், சோறானபுருடனது வலதுகண் ணிற் சோதியுடன்பார்வைகொடுந்தொழில்கண்டீரே. (சசு)

தொழிலானகாந்தரியிடதுகண்ணிற் சோதியுடன்பார்வைதரு ஞ்சூட்சமாகும், தெழிலான அசனையது வலதுகாதில் நிற்குமடாஅ லம்புருடனிடதுகாதில், குழலானசங்குனிலிங்கத்தில்நின்றுகொடு போலசுற்றுமடாகூறினேனன், எழிலானகுருதன்பானத்தைக்கொ ள்ளுமியம்பவேதிசைவாய்வையிசைந்துகேளே. (சஎ)

### தசவாய்வு.

இசைந்துகேள்பிராணனுடனபானந்தானு மெழிலானவியான னுமுதானன்கூற்மன், அசைந்துகேள்தேவதத்தன்சமானநாகன் ஆனதிரிகரணன்னஞ்செயனிவர்கள்பத்தாம், பிசைந்துகேள்பிராண

ன்மூலத்திருந்து, பின்கலையோடிடைநடுவாய்மைநயில்மட்டும், பசைந் துகேள்முடியாதுநாசியூடுபன்னிரண்டங்குலம்பாயும் பாழாம்நாலே

சுவாசத்தொகை.

நாலேதுபத்தெட்டுள்ளேபாயும் நாழிகைக்குமூந்நூற் றிருப தாகும், ஏலேதுநாளொன்றிற்சுவாசங்தானு மிருபத்தோராயிரத்த றுநூறப்பா, மேலேகும்பிராணநெஞ்சில்நின்றுபோகும் விளங்கு மேதிரிகன்றும்பலையுண்டாக்கும், காலேகுக்குறுநடனூன்பானனி ன்றுகழிக்குமேமலசலத்தைக் கருதிப்பாரே. (சசு)

பாரடாநாடிதனிற்சமானனின்று பருகியதோரன்னத்தைச் செரிக்கப்பண்ணும், ஊரடாவுதானகண்டத்தில்நின்று உண்டவன் னபானத்தைக்கீழேபாய்ச்சும், வீரடாநாகன்விக்கலையுண்டாக்கும் வியானன்மேலோங்கிவந்ததயிலமல்லால், வாரடாவிறுத்திதனையுறு ப்புக்கெல்லாம் வளமாகப்பாய்ந்துமேயிருக்கும்பாரே. (ருய)

பார்க்குமேகூர்மனதுகண்ணைமூடி பண்திறக்கச்சிமிட்டவுடன் பண்ணுவான்பார், ஊர்க்குமேதேவவத்தன்செயுங்கொட்டாவி யட ம்புமூறக்குண்டாகுமுண்மையாக, காக்குமேதனஞ்சயன்றானுயிர் போனக்காற் கபாலத்தில்நின்றுடம்பையூதப்பண்ணும், ஆர்க்குமே மண்டைதனைச்சீறிப்போவா னப்பனேசொல்லிவிட்டேனறிந்து கொள்ளே. (ருக)

திரிநாடி.

கொள்ளடாதிசைநாடிதன்னில்மூன்று கூறுவேனிடைசுழினை பின்கலைதானென்றும், விள்ளடாதிடைகலைதானிமிரமாறி மிருந்தாக் காலங்குட்டத்திருந்துஏறி, கள்ளடாகண்டத்தில்மாறியோட்டிக்க பாலவரைதனில்மூடிமார்பிற்பாய்ந்து, தள்ளடாவலதுகரம்பின்கலை தானேடுடுந் தனித்துவிடையிடதுகரஞ் சாருந்தானே. (ருஉ)

சாருமடாசுழிமுனைதானடுமையத்தில் தாதுவிதுமூன்றுலேதா க்கிப்பாரு, பேருமடாவிடையதுதான்வாதமாச்சு பின்கலைதான்பி த்தமடாபேணிப்பாரு, சேருமடாசுழிமுனைதானையமாகுஞ்செப்பு த்திசைவாய்வில்மூன்றுவாய்வு, ஊருமடாவாதபித்தஞ்சேத்துமத்தி னேடுவொன்றாகச்சேர்ந்திருக்க வுரைக்கிறேனே. (ருங)

திரிநாடிவிபரம்.

உரைக்கிறேன்அபானனதுவாதஞ்சேரு முற்றுப்பார்பிராண னதுபித்தஞ்சேரும், நிரைக்கிறேன் சமானனதுஐயஞ்சேரும் நேர் வாதம்வாய்வுபித்த நெருப்பதாகும், கரைக்கிறேன் சிலேட்டுமமது

தண்ணீராகுஞ்சாணுமுதலுந்திமட்டும்வாதம்விடு,விரைக்கிறேன்வுந்தியின்மேல்மார்புமட்டும்மிக்கபித்தமிருப்பிடமாய்விளங்குந்தானே.

தானென்றமார்பின்மேலுச்சிமட்டுந் தான்கபமேயிருக்குமடா சல்லிபோலே, வானென்றவாதமது தாவக்கிற்சேதி மயிலோணன் கோழியன்னமாதுபோலுந், தானென்றபித்தத்தை நோக்கிமேவே சென்றேறிச்சாயலன்றித்தெளிவாய்கிற்கும், நானென்றபித்தநடை யாமையட்டைநல்லபுறுபோற்சாயல்நாடிப்பாரே. (ருரு)

நாடிநடை.

நாடிப்பார்வாதத்தைநோக்கிப்பாயும் நன்றாகச்சிலேட்டுமந் தானைம்போலுஞ்,சூடிப்பார்மண்டூகம் போலேயேறிச் சுருக்கில்லை கனமில்லைமெலிந்துநிற்கு , ஆடிப்பார்வாதமொன்றுபித்தம்பாதிஐ யங்காற்பங்காலுஞ்சடமோவில்லை, தேடிப்பார் மூவிரலுஞ்சமன யோடிற்றீராதுபிணைசன்னிவாதந்தானே. (ருசு)

வாதநிதானம்.

தானென்றவாதமது கோழிபோலேசாவலைப்போல்பித்தமது தாண்டுமாகில், கோனென்றவாதபித்தந்தொந்திபாகுங்குறியாய் வாதமதுவோணன்போலுங், கானென்றஐபமதுசர்ப்பம்போலுங் கதித்திடுமேவாதமையந்தொந்திப்பாகும், ஊனென்றபித்தமது ஆமைபோலுமோடுமேஐபமண்டூகமெனமே. (ருஎ)

பித்தநிதானம்.

எண்ணுமேபித்தமையந் தொந்திப்பென்றுஇருக்குமே அளவி டைதானின்னங்கேளு, பின்னுமேமணிக்கட்டுங்கீழதாகப்பெருவி ரலங்குலத்திலப்பா மூவிரலைவைத்து, மண்ணுமேமூ விரளிலிடையி னெல்லைவைக்குமிடவிட்டுநாடிப்பாரு, முண்ணுமேமணிக்கட்டுத னக்குமேலே மூன்றுவிரற்கிடையளவில்துடித்தாற்காணே. (ருஅ)

ஐயநிதானம்.

காணுநீவாதத்தின்கோபமாகக் கருதுநால்விரற்கிடைதான்பி த்தகோபம், ஆணுநீஐந்துவிரற்கிடையில்தாண்டிஐயத்தின்கோப மனவறிந்துகொள்ளு, பேணுநீ மயிலதுபோல்வாதமாடில் பெருஞ் சாரைப்பாம்பதுபோலையமேறில்,ஊணுநீபித்தமது அட்டைபோலு முட்சுருங்கற்சாவரசமென்றுரைத்திடாயே. (ருகூ)

மரணக்குறிப்பு.

உரைத்திடவேவாதமதுபித்தத்தை நோக்கிஓடவேபித்தமந்த ஐயத்தேறில், நிரைத்திடுமேஐயமதுகண்டத்தேறிநின்றுமேயுண்ணு

ச்கின்வழியையூடி, விரைத்திடுமேவாகலேந்துமடைத் துக்கொள்ளு மேலானசிவகனோமெலிக்துபோம், மரைத்திடவே கடிகைஇலந்தில்மரணமாவார்மழுவெடுத்தானுமைக்குரைத்தவசனந்தானே. (கூ0)

வசனமென்னவாதமோடு சிலேட்டுமம்ரண்டும் வலுவாகிப்பித் தமதுமாய்ந்துபோகும், அசனமென்ன தொண்ணூறுகடிகைதன்னி லமர்மரணமாவதுண்மையறிந்துகொள்ளு, பிசனமென்னவாதமொடுஐயம்பாய்ந்துபித்தந்தான் புருவென்னத்தனிந்துநின்றால், விசனமென்னநாதிநாழிகையிற்சாவார்மெய்யென்று புலத்யனேவறிந்துகேளே. (கூக)

கேளடாவாதபித்தங் கீழேநோக்கிற் கெடியானதுடிநாதம் வீணைநாதம், நாளடாபயப்பமணை வாலுபோலேநடுங்கி னும்நாயெனும்புகலைக்கவ்வியோடிச், சூளடாகிழிடடுக்கடிக்கும்போலுஞ்சுத்திவரும்போலவுமேசுழன்றிட்டாலுந், தேளடாபித்தஞ்சேத்துமதினாலேறிச்சினத்திட்டால்மெய்குளிர்ந்துதெரிக்குந்தானே. (கூஉ)

தெரிக்குமேவயிற்றுவலி நெஞ்சுவீக்கஞ்சிவந்திருக்குமஞ்சள்நிற்குங்கருகும்நாக்கு, எறிக்குமேமுகங்கோணுமிரவுக்கம்பாளரிச்சலுண்டாய்ப்பல்குளிருந்திரேகந்தானு, முருக்குமேயடிக்கடிதான்பெறுமூச்செய்துமுழிபுரட்டுந்தாநுமாறுகப், பார்க்குங்குறிக்குமே யுள்ளங்கையுள்ளங்காலுங்குளிர்ந்திருக்குமுகணுக்குகுறிப்பைப்பாரே. |

குறிகேளுமேற் சுவாசந்தானும்பாயும் குளிர்ச்சிகண்டுமூக்கன்றிவாயிற்பாயும், மறிகேளுமுடலடுக்கு மறிவழிக்கு மையாமைந்தனேவாடாதிருக்கிலசையுண்டாகும், வெறிசேளுவுச்சிதனிற்சூடுண்டாகுமீள்வதில்லைவீழ்ந்திடுதல் மெய்யென்றெண்ணு, தறிகேளுபொதியாறவந்தரித்துவீசன்சுந்தரிகுச்சொன்னதிகதசூருதிதானே (கூச)

நாடிமாத்திரைநிதானம்.

தானென்ற விரதமாத் திரைதான் ரண்டு தப்பாது பித்தமதுதானொன்றேறில், வேனென்றவாதபித்தந்தொந்திப்பாகுமிகுவாதமிரண்டுஞ்சிலேட்டுமமொன்றுகில், ஊரென்றவாதமையந்தொந்திப்பாகுமுற்றபித்தம்ரெட்டித்துவாதமொன்றுசேரில், கோனென்றபித்தமுடன்காதஞ்சேர்த்துகொண்டதிந்தரோகமெனக்கூறுவாரே.

கூறுவேன் பித்தமாத் திரைதிண்டாகில் கொடியசிலேற் பனமொன்றுகுதிக்குமாகில், தூறுவேன்பித்தசிலேட்டுமந்தானென்றுந்

துலங்குசிலேட்டு மிரண்டு வாதமென்றுர், தேறுவேன் சிலேட்டும
லந்தானென்றுஞ் சிலேட்டுமமேநாடிபித்த பென்றுசேரி,ல்வேறுநீ
மினையாதே செலுத்தும்பித்த மிகுந்திடுமே சுரம்பேதிமிகுதிதானே

திகுதியென்ற ஐயத்தில்வாதஞ்சேரில் மேலெலும்புநாகத்தின்
பிணைச்சல்போலே, தகுதியென்றவாதமுடனையஞ்சேரில்சேற்றிலூர்
வளையொடுஅட்டைபோலாம்,திகுதியென்றஐயத்தில்பித்தஞ்சேரில்
நீடரவுவாயிற்பட்டதவலியுமாமே. (சுஎ)

ஆமப்பாவாதமதுதனித்தபோது அப்பனேமயிர்சாயலாகிநிற்
கும்,தாமப்பாபித்தநடையெருகலோடுந்தனித்துநின்றஐயமது அம
ர்ந்துமீளும் ஒமப்பாமூவிரலுஞ்சரியேயாசி,லுயர்ந்துநின்றவாதபித்
தமுற்றுப்பாரு,வேமப்பாமலசலங்கள் கட்டேயானல்மிச்சமடாவா
தமதுவிளங்கக்கேளே. (சுஅ)

கேளடாசூடெழும்பிற் பித்தமிச்சக் கெடியாகக்குளிர்ச்சிகண்
டாலையமிச்சம், தாளடாவாதமது பித்தஞ்சேரில்தப்பாதுசிலேட்டு
மத்திற்பித்தஞ்சாரும், வேளடாஐயமதுமேலேயேறில்மேலவத்தை
க்கடையாளமார்புமூக்கு, கேளடாபுறங்கைகள் செவிகளோடுகுளிர்
ந்துபேவெதும்பியையமீறுந்தானே. (சுசு)

மீறிலோசுடிகையைந்தில்மரணமாவார்வெடிவெடுத்தபித்தமது
மீறினுக்கால், கூறுவேன்வாதமையங்குளிர்ந்ததானுல்கொள்ளுமடா
பித்தசன்னிஅறிவுபோகும், வாறுகேள்வாதமைய மீறிற்றனல்வகு
த்தபித்தமழிந்ததானுல்மரணசன்னி, சீறியேயுட்குத்துபிறவீச்சாகி
ச்செனத்திலேயிசுவுவருந்திண்ணர்தானே. (எ0)

திண்ணமுன்னையத்தில்வாதஞ் சேரில்செப்புவேன் சன்னியொ
டுதோஷமுண்டாம், என்னமுடன்மெய்ப்பிக்குஞ்சோபமுண்டாம்எ
றில்மூர்ச்சைசோகையுடன்பாண்டுகாணும், வண்ணமுடன்பித்தத்தி
ல்வாதம்வந்தால்வரும்வாறுபீனசங்கள் மண்டைக்குத்து,பண்ணும
டாபவுத்திரங்க ளரையாப்புண்டாந் தப்பாதுவமூலஞ் சாருந்தா
னே. (எக)

சாருமடாபித்தமந்த வாதத்தேறில் தளஞ்செய்யும்பாண்டுகா
மாலைதானுஞ், சேருமடாநீராம்பலம்கோ தாங்கவுசி;செப்பரியமக
வைவெப்புப்பகர்வைதானும்வாருமடாஐயமது பித்தஞ்சேரில்வா
யூரல்சுரம்பேதிவாந்திகாணுஞ்சோறும்டா!ஐயமதுமீறிற்றனல்தோ
ன்றுமடாசயகாசஞ்சுருக்குத்தானே. (எஉ)

அவஸ்தைபத்து.

சுருக்கான அவஸ்தைபத்துஞ்சொல்லக்கேளு திடியான முத லவஸ்தைபிணமேதாறு, முறக்கானவிரண்டுநலம் வேற்றுமையேகூ றுமூன்றுக்குந்தெளிவதுதா நாற்றமாகும், அருக்கானநாலிலேமேலி ளைப்புகாணுமைந்துக்குமும்வேற்குமாறுக்கப்பா, நறக்கானயுட ம்பதுவுங்களிருமேழில் நன்றுன அன்னத்தை நாமேம்பாரே. (எங)

நாடுமேயிருநான்கில்கண் பஞ்சாடும் நலமாகவொன்பதிலேவுட ம்புவேர்க்கும், ஓடுமேபத்துக்குமரணமாவார்உத்தமனே அவத்தை பத்துமுரைத்தேன்பாரு, தேடுமேபலநூலுமறிந்துகொண்டு தேசத் தில்வயித்தியந்தான்செய்யவேணடும், கூடுமே அசாத்தியமாசாத்தி யத்தின் குணங்குறியுங்கண்டுமே கூறினேனே. (எச)

நூற்கோர்வை

கூறினேன்வயித்தியமாயிரத்தைந்நூறு குணமாடுமறுநூறுகர் மகாண்டம், ஏறினேன்பரிபூரணந்தானப்பாயிருபத்தோராயிரத்தி யறுநூறுக, தேறினேனுயிரத்திலிருநூறுகசெப்பினேன்முன்னூற்றி முப்பத்தாறு, வேறுதான்குணம்பன்னீராயிரத்தில் விரித்திட்டேன் நூறுமன்பதுள்வந்தானே. (எரு)

தானென்றவகைவகைக்குநாலுகாண்டந்தான் சிந்தாமணிநாலா யிரம்வெண்பாவாய், காணென்றபலபூண்டுமூலிகையின்சக்குங்க டைமருந்துபாஷாணங்கடல்மீனுப்பு, கோனென்றசீவசெந்துமிருக வங்கமிகுபரவைவெண்ணெய்தண்ணீர்வேணுமெல்லாம், நானென்ற நிகண்டுபன்னீராயிரத்தில்நானுரைத்தேனதைகுறுக்கிநாட்டுள்ளோ ர்க்கே (எசு)

நாட்டினேனதைக்குறிக்கி பதார்த்தமெல்லாம்நன்றுகஆயிரத் திருநூறுக,சூட்டினேன்பொசிப்புக்குபாகமார்க்கம்சொன்னேனுன் பன்னிரண்டுநூறிலப்பா, காட்டினேன்கைப்பாகமருந்தின்பாகங்க ணமானநூல்தோறுங்கண்டுபாரு, மாட்டினேன்வாதநூல் லட்சங் காப்புவைத்திட்டேனறிந்துகொண்டுமருந்துசெய்யே. (எஎ)

மருந்ததனுல்கைம்முறைபாய் செய்யவேணடு மானிலத்தில்கூ ரறிந்துபார்க்கவேண்டுங்,திருத்தவேயுடலறிந்து நோயுங்கண்டுசெப் புமவர்மொருகேட்டுதாதும்பார்த்து, பொருந்தவேபொசிப்பறிந்து பலமும்பார்த்துப்பொருளேவல்புண்ணியவானெனவறிந்து, அருந் தவேமருந்துசெய்தாய் நோய்போம்பாரு அப்பனேகருதரிக்குமா ண்மைகேளே. (எஅ)

### கற்பகருவுற்பத்தி.

ஆண்மையென்றுமங்கையர்கள்பூர்க்குங்கால மன்றுமுதல்பதி ஞறுநாளுமந்த, தாண்மையன்றிப்பதிஞறுயிதழாய்நின்ற தாமரை போல்மலர்ந்திருக்குஞ்சாற்றக்கேளு காண்மையன்றிதினமொன்று யிதழ்தானென்று கருவானகருக்குழிதான்மின்ஞட்குள்ளே, பாண் மையென்றவிந்தங்கேயூறும்போது பாயுமடாவன்னியொடு வாய்வு தானே. (எசு)

வாய்வோடுவிந்துசென்று மலர்க்குட்சேர்ந்தால்மலரிலுள்ளயி தழ்களெல்லாமூடிக்கொள்ளும், தேய்வோடுவாய்வுநின்று திரட்டும் பாருசெப்பெரியதினமொன்றில்கடுகபோலாம், சாயுமடாநாளிரண் டில்மல்லிபோலாந்தப்பாமல்நாள்மூன்றில்மிளகுபோலாஞ், சேயும டாநாலாநாள்வரைவிரைபோலாகுஞ் சேர்வைந்தானைந்துமளிபோ லாகும்பாரே. (அ0)

ஆகுமேஆறுநாள்நெல்லிக்காய்போ லாஞேள்யேழுக்குப்பின் னேக்காய்போல், ஏகுமேயெட்டாநாள்பஞ்சபூதமிதிலுண்டாம் பஞ் சவர்னமிதிலேதோன்றும், போகுமேநவதினத்தில் காக்கைமுட் டைபோலாகும்பத்துமுதலேந்துநாளும், வேகுமேகோழியண்டவடி வதாகும்விள்ளுகிறேன்திங்களொனறில்வாழைப்பூவே. (அக)

பூவிலேயிரண்டுதிங்கள் கழுதநண்டாகும் புகழ்சிரசுமூறுப்பா குமூன்றுந்திங்கள், தாவிலேசந்துக்கால்கையுண்டாகிசட்டகம்போ ல்வடிவாகிவிரலுமுண்டாம்,நாவிலேவாய்நாக்குமூக்குமுண்டாம்நவி லுகிறேன்மாதமைந்தில்செவியுண்டாகும்,பாலிலேயாறுதிங்கள்குய் த்துவாரம்பாலுச்குமேழுக்கும்நரம்புதானே. (அஉ)

நரம்புதானெழுபத்திராயிரந்தான்நாடியெட்டான் திங்களுக்கு மபிருண்டாகும், உரம்பமேதாய்பொசிக்குமன்னசாரமுச்சிவழிதா னிறங்கியுடல்பெருக்கும், வரம்பெறவேயொன்பதிலேஉயிருந்தான் வந்துமறைஞானமுண்டாகுமுச்சிவழிமூடும், நிரம்பவேதசைமாத ம்சென்றுலிந்தநெருப்போடுவாய்வுமிஞ்சிக்கவுழ்த்துந்தானே (அந)

தானடாசிரந்திரும்பிபிறந்தபிள்ளை தனக்குபிர்மசிருஷ்டநூரா ண்டுதன்னில், ஏனடாவாலேயதுவோனுந்தாகு மிறுபதுதாஞகும ட்டும்வளரும்பிள்ளை, நாண்டாவொளிபோகும்முப்பதாண்டில் நா ற்பதுக்குளழகுபோநாடிப்பாரு, வேனடாஅன்பதுதாண்வயதுதன் னில்விரைந்துபிரிதிவிலப்புமேவும்பாரே. (அச)

மேவையிலேயுடல்தளராமப்புச் சென்றுவிளங்குமணல்தனே நோக்கிவெளுக்கும்ரோமம்,தாவையிலேயறுபதாழ்வயதுதன்னில்த

ண்ணீருமண்ணுடனேசார்ந்துகொள்ளும், பாவையிலே கண்ணொளி யுங்குறைந்துகாட்டும் பாலகனேநடக்கில் வெகுதடைதான்பண்ணு ம், கூவையிலேயெழுபதென்றவயதிற்றேய்வு. கொண்டலைத்தானெ ருக்குமணல்தாதிற்கானே. (அரு)

காணவேதராதலருமறிவுகுன்றும்கருதிப்பா ரெல்பதென்றவய திற்றனும், தோணவேவீய்வுவந்துவெளியிற்பாயுஞ்சுவாச மேல் நோக்குமடாதொண்ணூற்றண்டில், பூணவேயாகாசஞ்சீவனோடு பு லன்களைந்துவசமாகப் பொருந்திக்கொள்ளும்' நாணவேயிருந்திரிய மற்றுப்போகும் நலமில்லை நூராண்டில் மரணந்தானே. (அசு)

தானென்றபிர்மசிருஷ்டிவயநூறில் தந்தைதாய்தான்செய்தக ருமந்தன்னால், வேனென்ற அபமிருத்துவந்து கூடிவிஷகடிகள்வெட் டுகுத்துமிகவுண்டாகி, கானென்றமிருகத்தால் நஞ்சைதின்றுகனவ யதுகுன்றுமப்பா கருதிப்பாரு, நானென்றபிர்மசிருஷ்டி காண்பிக் கவில்லை நாதனுருமைக்குரைத்தார் நாம்சொன்னோமே (அஎ)

உண்டிபிரிவு.

சொன்னோமேயின்னமொருசூட்சங்கேளு சொல்லுவேன்பொ சித்ததெல்லாமாறுபங்கா, முன்னேதான்மலத்திலொன்றுமூத்திரத் திலொன்று மீளுமேதசையிலொன்று வித்திலொன்று, தன்னேதான் மூளைதனிலொன்றுசேரும் சார்ந்திடுமேவுதிரத்திலொன்றுமாகம், அன்னேதான்சயகாசயேகரோகிவான அதிசாரம்வந்தபேர்க்கே.()

வந்தபெருங்கிறுணிகுன்மம்யெலும்புருக்கி வாங்காதசுரத்தோர் களசாத்தியரோகிப், பந்தமுறத்தின்றதொன்று ஆறிலப்பாபாலக னேநோயிருந்தும் பாருபாரு, உந்தனிடவிந்துதின்கால் யெல்லாம் போச்சு வுண்டதெல்லாம்பாழாச்சு யுறவும்போச்சு, விந்துபிலநீங்கி பெரும் பிணிக்குள்ளாகி மெலிந்துகெட்டுப் போகாமல் விள்ளு றேனே. (அசு)

பூரணவல்லாதிதாதுக்குச்சூரணம்.

விள்ளுறேன்பூரணவல்லாதிதன்னை மேன்மைபெறச் சுத்திசெ ய்தசெங்கொட்டைதானும், அள்ளுவேன்பலம்ரண்டுநிறுத்துக்கொ ண்டுஅமுக்குராதான்பலமொன்றுபாலிற்சுத்தி, எள்ளுமேகழுனியெ றிபலமிரண்டு யிதமானபாக்குபலமிரண்டுபோடு, கொள்ளுமேநாயு ருவிரத்தைச்சூரிக் குணமானகிரந்தையொடுகஞ்சாவித்தே. (கூ0)

வித்தானதுளசிவிரைதுத்தி வித்துமேலான அரசுஅத்திஆலம் வித்து, சத்தானமுருங்கவிரை நீர்முள்ளிவித்து தான்பூனைக்காலி விரையாவாரையின்வித்து, முத்தானதிருநீற்றுப்பச்சைவித்து முள்ளிருக்குங்கருவேலன்வித்துங்கூட்டி, சித்தானசிறுகீரைப்பொன்னுவாரைதேத்தானவித்துடனே நிம்பதினெண்வித்தே. (௬௧)

பதினெட்டுவகைக் கிரண்டுகழஞ்சிதூக்கி பாலகனேதிப்பிலியுமிளகுசுக்கு, துதியிட்டஜாதிக்காய்கிராம்பு பத்திரிசோம்புகருவாடுபட்டைச்சாரப்பருப்பு, விதமிட்டவான்மிளகுமதனப்பூவும்வேண்டு சிறுநாகப்பூவுபினுந்தானும், மதமுட்டும்கசகசாயேலமோமம்வாலுளுவை கோஷ்டம் வகையொன்று வாங்கே. (௬௨)

வகையொன்று கழஞ்சிடைதான் மூன்றுதூக்கி மைந்தனேரவியில்வைத்துச்சூரணித்து, துகையென்றபேரீச்சு முந்திரிகைப்பழமுந் தூக்கடா பலமொன்று சொல்லக்கேளு, புகையென்றகோரக்கர்மூலிதன்னை போக்கன்றிபலம்நாலு வறுத்துக்கொண்டு பகையென்றகுண்டாவில் கடையதாளம் பக்குவமாய்ப் பின்வருத்துக் கடைந்திடாயே. (௬௩)

கடைந்தபின்புவறுத்தபின்கடைந்துவாங்கு கருகாமல்யெழுதிரங்கடைவறுயப்பாது, திடர்ந்தசெங்கொட்டையொடுயெள்ளுஞ்சேர்த்து சூரணமாயிடிமுந்திரிபேரீச்சோடு, படர்ந்ததொருகல்லுரவில்சாமம்நாலு பக்குவந்தான்மயினம்போலானபின்பு, அடர்ந்தயிருவகைபொடியுமுறவுசெய்து வதில்சீனிக்கற்கண்டுகழஞ்சிநூறே

நூறுமேபொடிசெய்துக்கூடச்சேர்த்து நண்மைபெறப்பீங்கானிலடைத்துக்கொண்டு, தேறுமேயரைக்கழஞ்சிசூரணத்தில் சேர்த்திடுநீரூதபற்பம்பணத்திற்பாதி, கூறுமேயந்திசந்திப்பாலிவீய கொடியபிணிதீருமடா விந்துகட்டும். ஏறுமேதாதுமிகவலுக்கும்பாருயெளிதல்லாசூரணந்தானியம்பினேனே. (௬௫)

இயம்பினேனந்திசந்திகொள்ளும்போது யேறுமேபோதைகொண்டுமயங்கிவீழ்ந்தால். இயம்பினேநீருள்ளிச்சாற்றினொடு யெலுமிச்சம்பழச்சாறுங்கூடச்சேர்த்து, இயம்பினேன்குடிமயக்கமொழியும்பாரு யேதேனுங்குடிக்கலாம்பத்தியமேயில்லை, இயம்பினேன்லகிரிகொண்டாய்நத்திகூட்டு யென்மகனேகாற்கழஞ்சி யீந்திடாயே, (௬௬)

ஈயாதேயிந்நூலைமடையர்கையி லீய்ந்திடுவாய்வாமிக்கும்ஞா
ணிக்கப்பா, நோயானசண்டாளர்க்கீய்ந்தாயானல் நொடியிலேகொ
லைசெய்வார்நுவலக்கேளு, தியானபாவிகளையகலத்தள்ளு செப்பா
தேதொழில்முறைகள்கைப்பாகந்தன்னை, பேயாகிக்குண்டாவிற்க
டையும்பாகம் பேசாதேவெகுபதனம்பேணிச்செய்யே. (கூஎ)

செய்கையிலேயேபாகஞ்சிதறிடாதே திருடாதேபொய்சொல்லித்
திரிந்திடாதே, மையலிலேநினமயங்கியலைந்திடாதே வார்த்தைமெத்
தப்பேசாதேவுலுச்செய்பாதே, பையவேவாடிணங்காதேபாம்படா
தே பத்தினிமேலிச்சைகொண்டால்பாழாம்பாரு, கொய்மையையி
லேதிரிகின்றசண்டாளர்க்குக் கூறினல்நரகமென்றுகூறினேனே. ()

சாரவல்லிக்குளிகை.

கூறுகிறேன்வாய்வென்றதனைத்தும்போகக் சொடியசாரக்குளா
திக்குளிகைதன்னைப், பீறியதோர்பெருங்காயம்கழஞ்சுநாலொன்று
பேரானசீரகமோகழஞ்சிரண்டு, தேறியதோர்வாய்விளங்கம்கழஞ்சு
மூன்று செப்பரியசொத்துமல்லிகழஞ்சுநாலு, ஆறியதோர்செவிய
மைந்துசுக்குமாறு அப்பனேமிளகேழுதிப்பிலியெண்கழஞ்சே(கூகூ)

வாய்வுகளுக்கு

கழஞ்சுவொன்பதாங்கோஷ்டங்கடுக்காய்பத்து கடுஞ்சித்ரமூல
மதுபதினொன்ருகும், விழஞ்சியீராறுமடாவோமந்தானு மிதமாகச்
சூரணஞ்செய்திதற்குரெட்டி, தழைஞ்சவெல்லஞ்சேர்த்துநீவுபலி
விட்டுத் தானிடித்துமைபோலேசாற்றக்கேளு, குழைஞ்சபின்னக்
காய்போலுருட்டிகொண்டு கூசாமலந்திசந்திகொடுத்திடாயே .()

கொடுத்திடுவாய்வாய்வென்றயிருபத்தாறும் குண்ணவேவேர்
பறிக்குங்குன்மமெட்டும், எடுத்திடவேமார்படைக்கும் ருத்திரவாய்
வு வெண்ணசொல்வேன்தமரகமுமேகும்பாரு, அடுத்திடவேபத்தி
யந்தானிச்சாபத்தியம் ஆகாதுவாய்வென்றபதார்த்தமெல்லாம், க
டுத்திடவேமகாசாரத்துலாதிதன்னைக் காணமக்காள்சொல்லுகிறே
ன்கருத்திக்கேளே. (௧௦௧)

மகாசாரத்துலாதிகுளிகை.

கருதியேவசம்புசுட்டகரிதான்ரண்டு காயதுமூன்றுவாய்விளங்
கம்நாலு, தருதியேசீரகமைந்துடனேமல்லிதானறு மிளகேழுதிப்
பிலியுமெட்டு, சுருதியென்றசுக்கொன்பானே மம்பத்துஞ்சொல்லும்

வரிக்காயும்பதினென்றாகும், பருதியேகொடிவேலியனிரண்டாகும் பண்பாகமகாமேதைபதின்மூன்றெண்ணே. (௧0௨)

எண்ணவேகோஷ்டமதூரேழப்பா வேகமாம்வெள்ளுள்ளிப தினைந்தென்று, உன்னியேபழுத்துலர்ந்ததேங்காயீரெட்டுஉயர்ந்தா சகற்பூரம்விராசனிடைபொன்று, பன்னியேசூரணித்துவைத்துக் கொண்டு பாறையுப்புஇந்துப்புபேதியுப்பு, வன்னியேவளையலுப்பு கல்லுப்பல்லால் மாசற்றஆடுப்புகெந்திவெடியுப்பே. (௧0௩)

உப்பெல்லாம்வகைக்கு அரைபலமேதூக்கியுடனரைக்கவெருக் கன்பால்கள்ளிப்பாலே, செப்பிலேவைத்துமொருசெப்பில்மூடிச் சீலைமண்செய்துலர்த்திப்புடத்திற்போடு, தப்பில்லாதெடுத்துநீபொ டித்துக்கொண்டு தணிவானவிருகழஞ்செடுத்துச்சேரு, மெய்பல்ல காந்தமிருகருஞ்சுசேர்த்து மேலானவிலைக்கள்ளிப்பாலைவாரே. ()

வார்த்திடுவாய்பொடிகளையவுலர்த்திக்கொண்டு மைந்தனேம ருந்துரெட்டிவெல்லஞ்சேர்த்து, மார்த்திடுவாய்சூரணத்தைத்தூவித் தூவி வலுவாகச்சாமந்தானிடிக்கும்போது, கூர்த்திடுவாய்மயினம் பேலானபின்பு குளிகைசுண்டைக்காயைப்போலுருட்டிக்கொண்டு, ஏர்த்திடுவா யுதையாதி யுண்டையொன்று ஏகுமேமலசலக் கிருமி போமே. (௧0௫)

போகுமேமகாவைவைப்புப்பார்வைவாய்வு பொல்லாதபீலிகை யுமகோதரநீராம்பல், சாகுமேகவுசிகுலேமுடக்குவாதம் தானேகும் வாய்வுகுடலவாதந்தீரும், ஆகுமேபத்தியந்தானபுளிப்புமேறுதரை க்கீரைவழுதலம் பிஞ்சவரைப்பிஞ்சு. தாகுமேவெந்நீர, மெற்றொன் றக தப்பாதுஅயனாதி வடகங்கேளே. ௧0௬

அயனாதி வடகம்.

கேளப்பா அயப்பொடிதான் பலமோரண்டு கெடியானபழச் சாற்றில் சுத்திசெய்து, நாளப்பாமாதளையின் பழச்சாற்றிலிட்டு நாள்மூன்று நிழலில்வைத்து ரயுவிங்போடு, கேளப்பாகுமரியது நீறிப்போகுங் குறிப்பானகரு நாயிப்பட்டைச்சாற்றில், ஆளப்பா மூன்றுநாளூறப்போடு அப்பனேயரைத்துவில்லை ரவியிற்போடே.

காமாலை.

போடப்பா கெஜப்புடந்தா னறவிட்டுப் புகழாகக்கரிசலாஞ் சாற்றில்விட்டுத், தேடப்பாகொதிக்கவிட்டு மயினம்போல்வாங்கித்

திறமான மிளகுபலமிரண்டினோடு, நாடப்பா வோமமது பலந் தானிரண்டு நலமானதேங்காயிற்குள்ளேயிட்டு, சூடப்பாரவிபாலே நிரம்பவிட்டுத் துவாரத்திலாப்படிறைந்து சீலேசெய்யே. (௧௦அ)

செய்துமேகுக்கிடமாய்ப்புடத்தைப்போடு சிரட்டைவந்தப்ப தத்தெடுத்துக்கல்வத்திட்டு, எய்துமேமுன்னையமுங்கூடப்போட்டு விளங்குகையான்சாற்றிலரைநாலுசாமம், நையவேயரைத்துருட்டிச் சுண்டைக்காய்போல் நலமாகநிழலுலர்த்திவைத்துக்கொண்டு, எய்யவேயொருகுளிகைமேதியிடத் தயிரிலேழுநாளந்திசந்தி கொடுத்திடாயே. (௧௦௯)

கொடுத்திடவேபாண்டுகாமாலேபத்தங் குணமாகும்பத்தியத் தைக்கூறக்கேளு, தடுத்திடவேயெருமைமோரருப்பிடாமற் றூனருந் தியேழுநாள் தாண்டிப்பின்பு, கடுத்திடவேயெட்டாநாள்வறுத்துக் கூட்டு கனமானவொன்பதிலே தலைமுழுக்கு, தடுத்திடவேவெகு நீராயிறக்கும்பாரு தானேழுதினமதிலேயகன்றுபோமே. (௧௧௦)

## திரிலோகவடகம்.

போமென்றதிரிலோகவடகந்தன்னைப் புகலுவேன்மாணுக்காள் புகழ்ந்துகேளு, தாமென்றகாந்தமொடுஇருப்புச்சிட்டம் தன்னோடு வரப்பொடியுஞ்சமனுய்க்கூட்டி, நாமென்றபழச்சாறுகாடிமோரில் நலமாகச்சுத்திசெய்துகல்வத்திட்டு, ஊமென்றகாட்டுவாமணக்குஞ் சாற்றில் உழுதிபாயிருசாமமரைத்திடாயே. (௧௧௧)

அரைத்துநீயில்லேதட்டிக் காயப்போடு அப்பனேயோட்டில் வைத்துப்புடத்தைப்போடு, விரைத்துநீயிப்படியேயாறுபுடம்போடுவிதமானசெந்தூரமாகும்பாரு, நிறைத்துநீதிரிகடுகுவிளங்குமோமம் நேரானவெள்ளுள்ளிபலங்கால்வீதம், திரைத்துநீகள்ளிப்பால் கழஞ்சுநாலு திரிலோகமபலமொன்றுசேர்த்துஆட்டே. (௧௧௨)

ஆட்டுநீயிருசாமங்கருப்பஞ்சாற்றி லப்பனேதூதுளங்காயளவதாக, நாட்டியேகுளிகைகட்டியுலர்த்திக்கொண்டு நலமானமிளகிலிட்டுவெந்நீராட்டு, மாட்டுமேயிஞ்சிநீர்சுக்குநீரில் வகையாகபாண்டாறுங்குன்மமெட்டும், நீட்டுமேகாமாலேபத்தும்போகும் நீராம்பல் மகோதரமுங்கவுசிபோமே. (௧௧௩)

## சந்தனுதித்தயிலம்.

போகமதுமிகுந்தவர்க்குநாபிற்சூடாய்ப் புண்ணுக்கிக்கபாலமது வெந்துகீழாம், ஆகமதில்கிரந்திபதினெட்டுமுண்டா மடங்காதசூலே யதுயறுமூன்றுகி, மேகமதுமூவேழுதிரிச்சன்னிகளாறும் வெந்துவரு

கின்றகெந்தகத்தாளிமூன்றும், தாகமேபருத்தபீனசங்களாறுந்தலை நோயும்பிடரிவலிசயங்களைந்தே. (கக௪)

சயகாச்சிலேற்பனங்கள்தொண்ணூற்றாறுந் த சையடப்பு நீர டைப்புதேகங்காந்தல், பயமொப்பாய்நொந்தவிந்து தாதுநஷ்டம் பணைத்தெழுந்தசுரங்களறுபத்துநாளும், துயந்தந்தவாய்வோடுரத்த பித்தந் துடிவாதந்திமிர்வாதந்தீர்வதற்கு, தயவுகந்துசொல்லுவண் டாதயிலமொன்று சந்தனம்பலாச்சாதிதன்னைக்கேளே. (ககரு)

மகாசந்தனாதித் தயிலம்.

சாதியென்றசந்தனந்தான்பலமும்பத்து தானமிர்தகூவிளம் வேர்முத்தஞ்சீரம், சீதமென்றசகாதேவியசுவகெந்தி சிற்றாமுட்டிப் பேராமுட்டிவெறுகின்மூலம், பேதமென்றகுருந்தொட்டிவகைபல ந்தான்பத்து, ஆதியென்றஅருகம்வேர்மந்து பேரானகொம்பரக் குப் பலந்தான்பத்து, ஆதியென்ற அருகம்வேர்பதுரங்கோஷ்ட மகிலோடு நன்னாரிதாரமாமே. (கக௬)

ஆமென்றவிலாமிச்சு வெட்டிவேரும் அரிசியுட தேக்குடனே சிறுகாஞ்சோரி. நாமென்றவகையொன்று பலந்தானாலு நறுக்கியே யிடித்ததனைப் பாண்டத்திட்டு, காமென்றசுத்தசலங்கலந்தான்வாரு காட்டமது ஒருவிறகாலெரியாறாமல், வேமென்றஆறுபடி குறுக்கி வாங்கி விரிந்தவாய் தாளிதனில விட்டிடாயே. (ககஎ)

விட்டிடுவாயெள்ளெண்ணெய்படி தானாறு வெண்பசுவின்பால துவும்படி தானாறு, அட்டியில்லாயறக்கினிடக்கியாழமூன்று அப்ப னே தாளிக்காய்புகட்டியேதான், இட்டநெருப்பாறாமல் பிழிந்திடா மலியம்புகிறேன்கற்கவகையியல்பாய்க்கேளு, மட்டில்லாசந்தனமு மஞ்சளேல மண்திஷ்டிகொத்துமல்லிமகரபபூவே. (ககஅ)

பூவானநாகப்பூசித்தரத்தை பொன்மெழுகுபூலாவேர் மதுரங் கோஷ்டம், காவானசெண்பகபூவெட்டிவேருங்கடுகுரோகணிதகர மிலாமிச்சம்வேர், தாவானபச்சிலைகச்சோலமாஞ்சில் தக்கோலம், சதைகுப்பைசாஸ்திரபேதி, தேவானதாரமகிலவங்கப்பத்திரி சிவ ந்தகெந்தம்சாதிக்காய் கிராம்புதானே. (கக௯)

தானென்றபத்திரியுமிலவங்கப்பட்டை கரும்பிசினுநறுமிளகு வெள்ளிலோத்திரம், கானென்ற அஸ்வகெந்திவேரினோடு கடிகான நன்னாரிசெவ்வள்ளிதானும். யானென்றவகைக்கிரண்டுகழஞ்சுவீத மாட்டியரைமைபோல ஆட்டுப்பாலிற், கோனென்றகலக்கவிட்டுக் கொதித்தாறாமல் குளிராமலைந்துநாள்வைத்துப்பாரே. (க௨0)

தப்பாதேஆறுநாள்மயனர்தன்னிற் சார்ந்தபச்சைக்கற்பூரம்பு னுகுசட்டம்,செப்பாதேகோரோசனையுங்குங்குமப்பூ திறமானகோஷ்டம்வகைக்கழஞ்சிரண்டு, மெய்ப்பாகப்பொடித்துவடிகலசத்திட்டு விமலரொடுகணபதிக்குப்பூசைசெய்து, அப்பாகேள்வடித்திறுத்துதானியந்தன்னி லழகாகதிங்களொன்றுவைத்திடாயே. (௧௨௧)

வைத்தொருதயிலத்தைதமுழுகும்போது மைந்தனேசீய்க்காய்வென்னீராகும், மைத்தொன்றுமாகாதுதீரும்நோயை வழுத்துகிறேன்மாணாக்காள் மகிழ்ந்துகேளு, அஸ்திசுரம்வுள்ளுநச்சி தாபசோபம் அரோசிவிஷசுரமாந்தமுள்ளுருக்கி, சத்தியொடுபெரும்பாடுபீனிசங்கள் சயகாசம்கிருச்சிசுரம்தாகம்போமே. (௧௨௨)

போமப்பாமேகத்தினொலும்புருக்கி பொல்லாதகிரந்திவட்டைச்சூலைவாய்வு, தாமப்பாபித்தசிலேற்பனந்தொந்திரப்பு சந்திசிங்கிகுற்றமுதல்புத்துத்தீரும், ஆமப்பாவிஞ்ஞேகியன்னப்புத்தை அடிநாவிற்சூலைபுத்துகண்டமாலை, நாமப்பாகைகண்டவறு நூறுகநவின்றிட்டதினமொன்றுநவிலக்கேளே. (௧௨௩)

நவிலக்கேள்நீர்ச்சூலைரத்தசிங்கி நயனமதில்தோஷங்கள்தொண்ணூற்றுறுந், தவிறுமேதாதுநஷ்டந்திமிர்வாதங்கள் தளர்ச்சியுறவாடமொடுசந்துவாதம், புலியதனில்பிரவிகண்டபனிபோல்நீங்கும புண்ணியரேயித்தயிலம் புகழ்ந்துசெய்வார், குவிமுலையாள்வயித்தியற்குவயித்தியபாகங் கொடுத்தாய்வெகுமானங்கொடுத்திடாயே ()

கொடுத்தாக்காலவன்றனக்குவியாதிதீருங் குவலயத்தில்பெரும்பிணிகள்கூடிப்போம்பார், கடுத்தாக்கால்கர்மவினை தீருமோசொல் கனமானவயித்தியற்குமனம்நோகாமல், தடுத்துரைகள்சொல்லாதேவிசுவாசமாகத் தான் வணக்கர்மவினைசமுத்தி மேபுக்கும், மடைத்தனமாய்த்திரியாதேபிணிதீராது வல்லமைகள்பேசாதேவணங்கிக்காரு. (௧௨௫)

(மகாநயன சஞ்சீவித்தயிலம்.)

வணங்கவேசொல்லுகிறேன்மாணாக்காளே மகாநயன்சஞ்சீவித்தயிலந்தன்னை, இணங்கவேசிறுகீரைபொன்னாங்காணி யெலுமிச்சம்நன்னாரிமுத்தக்காசு, மணங்கமழும்நந்தியாவட்டை யின்வேற் வாதத்

தையடக்கிவேற்சங்கங்குப்பி, உணங்கவேமுடக்கொற்றான் முசுட்டைநொச்சி வுத்தமனேகருத்தக்தாள்கணத்தின்வேரே. (௧௨௬)

வேரானஅமுக்கறுசெந்தித்தண்டு விரைவானவிருவேலிவிலாமிச்சம்வேற், நீரானதாமரையின்தண்டியுங்கையா னெய்தலென்றகிழங்கரத்தைசவுரிக்கொத்து, பேரானபேர்முட்டியாலம்பட்டை பேய்ப்பீர்க்கு அதிமதுரம்தேவதாரம், சீரானவேற்வகையுந்தான்றிக்காயுஞ் செப்புகிறேன்வகையொன்றுபலமுமூன்றே. (௧௨௭)

மூன்றோடுசந்தனமும்பலந்தானெட்டு மொளிசிற்றாமுட்டிவேற்பலமுமைந்து, தோன்றுதேவகையனைத்துமுடித்துக்கொண்டுசுத்திசெய்து தாளிதனிலிட்டுமைந்தா, வான்றானஆற்றுநீர்படிஎண்ணான்குவடிவிட்டடுப்பிலேற்றிடாய்நீ, ஈன்றானசிறுதீயிட்டெரித்துவைத்து எட்டொன்றாய்நாலுபடி யிறுத்திடாயே. (௧௨௮)

இறுத்திட்டக்கியாழமதிலெள்ளிலெண்ணெ பிருமூன்றுபடியாவின்னெய்தான்ரண்டு, முறைதிட்டந்தப்பாதேதாளிதனிலிட்டுமுடக்கொற்றான்முசுட்டைநொச்சிபொன்னாங்காணி, கமைத்திட்டகரிசாலைசீந்திற்றண்டு கற்றாழைதண்ணீர்மிட்டான்வாதங்கொல்லி, நிறைத்திட்டவகையொன்றுக்கரைப்படிச்சாற்விட்டு நேரானவாவின்மாப்படிதானாலே. (௧௨௯)

நாலானமிளகுநீர்தான்கூட வாரு நாகனப்பூலாக்கிழங்குலவங்கப்பத்திரி,மாலாகும்அகில்கந்தந்தேவதாரமண்திஷ்டிவான்மிளகுபாஞ்சியேலம்,மேலாகுஞ்சாதிக்காய்கிராப்புகோஷ்டம்வெட்டிவேரஞ்சனக்கல்விலாமிச்சம்வேற்,கோலாகுமரமஞ்சள்கொத்தமல்லி குக்கிலுடன் அதிமதுரஞ்செவியந்தானே. (௧௩௦)

தானென்றசெண்பகப்பூலவங்கப்பட்டை தக்கோலஞ்சதகுப்பைநெல்விமுள்ளி,தேனென்றதிப்பிலியுங்கடுகுரோகணி சிறுநாகப்பூதேசாவரத்தினோடு,மானென்றபச்சிலையும்வகையொன்றுக்கு மைந்தனேமுக்கழஞ்சிப்பாலாலாட்டி, ஊனென்றகியாழத்திற்கலக்கிவிட்டு வுத்தமனேசிறுதீயாயெரித்திடாயே. (௧௩௧)

எரிக்கையிலேயடிபத்தாறிளகக்காய்ச்சி யிறக்கிடுவாய்மெழுகுபதந்தன்னிற்கேளு, திரிக்கையிலேயபின்புழுகுசவர்க்காரத்தோடு சேருங்கோரோசனைக்ஸ்தூரிதானும், விரிக்கையிலேபச்சைகர்ப்பூரமப்பா வீதமொன்றுக்கழஞ்சொன்றுபொடியேசெய்து, சரிகையிலேவடிகலசந்தன்னிற்போட்டு தானிறுத்துதயிலமதுமுழுகும்போதே. (௧௩௨)

முழுகவேசீய்க்காயரப்புவென்னீர் முழுக்கநவுமொன்றைவிட்டொருநாள்மூழ்கு, கழுகவேதீ நம்நோய்கவிலக்கேளு நயனத்தில்காசமொடுப்படலம்பில்லம், ஒழியுமேமீர்ப்பாய்ச்சல்பில்லிவெட்டு முத்தமனேதிமிர்தமொடுகுவளைவீக்கம், கழியுமேபுழுவெட்டுவெரிச்சல்பித்தம், கண்பூவுங்கண்குருடுங்கடுகப்போமே. (கருரு)

மகாதிரிபல்லாதிதயிலம்.

கடுகியேநயனநோய்தொகைணூற்றுறும், காணுமலோடுமடாகண்டுதேறு, முடுகியேவருஞ்சிரசுரோகமல்லால் முழிமுறுக்கிகட்டுகிறசூலைவாதம், படியவேமகாதிரிபல்லாதிதன்னை பாடுகிறேன்மாணுக்காள்பணிந்துகேளு, மிடியவேதிரிபலையும்வேங்கைகாத லிபல்பானமுடக்கொன்றன் வில்வவேறே. (கருச)

வேரப்பாஆமணக்குசீந்திற்றண்டு விளங்கவேதாழையுடன் விழுதினேடு, பாரப்பாவகையொன்றுப்பலந்தான்பத்து, பாலகனேகுருந்தொட்டிப்பலமுமைந்து, காரப்பாஅதிமதுரந்தேவதாரங், கனமிளகுஅமுக்குறாதன்னின்மேதை, சீரப்பாஅகில்வகைக்குப்பலந்தானைந்து, சேரவேபிடித்தொன்றாய்பாண்டத்தூற்றே. (கருரு)

ஊட்டியேயறுநான்குபடிநீர்விட்டு வுத்தமனேஎட்டொன்றாய்குறிக்கிவாங்கி, கூட்டுவாய்ரண்டுபடியாவின்பாலைக் குறைபாமல் நல்லெண்ணெய்படிதான்ரண்டு, சூட்டியேதாளிக்குட்கொதிக்கும்போது சொல்லுவேன்கற்வகைதலக்கமாக, நாட்டுவாயதிமதுரமிலவங்கமேலம் பாகப்பூப்பின்னைப்பூகோஷ்டந்தானே. (கருசு)

தானனயிருவேலிகொழுந்துபச்சை தகரமொடுவிலாமிச்சுமுத்துச்சிப்பி, நானைஅப்பிரேகம்பவளம்புத்து நாகணமுங்குர்திருக்கம்நூணியாக, வானனமும்மஞ்சள்சாம்பிராணி மாஞ்சியொடுகுங்கிலிமஞ்சனக்கல், தேனனகற்பூரஞ்சித்தரத்தை செஞ்சிறந்தவிருசந்தன்முகிலுமாமே. (கருஎ)

அகிலமொடுமருஞ்கிருஷ்டிதேவதார மப்பனேமதிமுகமும்வகையொன்றுக்கு, குகிலாதேவிராகனிடைரண்டுபோடு கொம்பரக்குரண்டுபலம்கியாழம்வாங்கி, புகலாதேபால்தேனிலரைத்துக்சேர்

த்துப் புண்ணியனேபதமறிந்துவடித்துக்கொண்டு, நிழகாதேசியக் காயரப்புவென்னீர் நீழுமுகில்தீரும்நோய்நிகழ்த்துவோமே. ()

நிகழுமேகன்ஞேசிக்கன்னப்புத்து நீர்ச்சூலைக்கபாலவலிமண் டைக்குத்து, இகழவேவருப்பீனிசைநாவிற்சூலை இருசெவிக்குற்ற லொடுயேங்கும்வாய்வு, அகலவேவாதமொடுசூலைதானும் மப்பனே தந்தவலியக்கரங்கள், புகலவேசிரசுநோயெல்லாந்தீரும் புண்ணிய ரேயித்தயிலம்புகழ்ந்துசெப்பே. (கஙகூ)

சன்னிவாதத்திற்கு அமுர்தவல்லித்தயிலம்.

செய்பவே் அமுர்தவல்லித்தயிலமொன்று செப்பக்கேள்சன் வாதப்சுரங்களுக்கு, பையவே அமுர்தவல்லிப்பெரியதாகப் பல மிருபதிடித்துநீ பதக்குரண்டு, உய்யவேசிறுதீபாயெரித்துவாங்கி யுறுதியாய்படியாக்கிவடித்துக்கொண்டு,நையவேகாடிபடிரண்டுசேர் த்து, நல்லெண்ணெய்ப்படிரண்டுகூடவாரே. (கச0)

வாரப்பாதாழிக்குள்கொதிக்கும்போது மைந்தனே அமுக்கி ராவேறுவிதம், சேரப்பாபதினறுகழஞ்சரைத்து சேர்த்துநீபதம் பார்த்துவடித்துக்கொண்டு, நேரப்பாதயிலமிட்டு முழுகவென்னீர் நேரறப்புச்சீய்க்காய்கினைவாய்க்கேளு,காரப்பாபுளிமோரைத்தள்ள வேண்டுங் கடுஞ்சன்னிவாதசுரங்கழன்றுபோமே (கசக)

நாக்குசூலைக்குத்தயிலம்.

போமப்பாபலசுரங்கள்மாறல்தானும் பொல்லாதவிஷசுரங்க ளெல்லாந்தீரும், காமப்பாவிதனத்தைதத்தள்ளவேண்டுங் கருநாக் கிற்சூலைக்குத்தயிலஞ்சேளு, ஆமப்பா ஆற்றுநீர்படிதானெட்டு ஆள ந்துவிட்டுக்குறிக்கியதைப்படிதானொன்று, தாமப்பாபொடிதலைத் தனித்திடித்து தனிச்சாறுபடியொன்றுதாக்கிடாயே. (கசஉ)

தாக்கியெகண்கறுத்ததேங்காய்நாலு தானுடைத்துமெல்லின மாய்த்திருகிச்சேரு, நோக்கியேயடுப்பேற்றிஎரிக்கும்போது நுக லுவேன்மெழுகுபதந்தன்னில்வாங்கி,தேக்கியேகோணிதனிலிட்டுக் கொண்டு, சணத்திலேகிட்டிகட்டிப்பிழிந்தாயாகில், பாக்கியேயில் லாமல்தயிலமெல்லாம் பதறுதேகும்பிதனிலடைத்துக்கொள்ளே.

கொள்ளவேசழஞ்சியொன்றுயங்கிசந்திக் குடித்திட்டால்நாக் கில்வருஞ்சூலைதானும்,மெள்ளவேநாக்கரிக்குங்கிரந்திபுண்கள் மேல்

வாயைப் பற்றிவருமொடுவைப்புண்ணுங், குள்ளவேயேகரிக்குங் கிரந்தியோடு தொடர்ந்துவருப்புண்ணுக்குக்கிரந்தியல்லால் விள்ளவேவாயில்வரும்விரணகூல விரண்டோடும்பத்தியமாய்வேண்டு வேண்டே. (கசச)

மகாஏலாதித்தைலம்.

வேண்டிமகாஏலாதித்தயிலஞ்சேளு மிகுந்தபித்தகாசமொடு சிரசநோய்க்கும், பூண்டதொருஏலமிலாமிச்சம்வேரும் புகழுவெட்டிவேருடனேமருகன்பாட்டை, நீண்டகுருந்தொட்டிவேர்கொண்ணைப்பட்டை நேரிலந்தைவேப்பந்தோல் ஆவாரைவேர்பட்டை, ஆண்டஅத்தியாலரசு அகிலின்பட்டை ஆத்தாசுபட்டைநாவல்பட்டையாமே. (கசரு)

ஆமடாஅழிஞ்சியொடுகடப்பம்பட்டை யமிர்தவல்லிபதினெட்டுவகையுங்கேளு, தாமடாவகைகைபைந்துபலமிடித்துத் தண்ணீரு மரக்காலெட்டளந்துவிட்டு, நாமடாவெட்டொன்றாய்க்குறுக்கிலாங்கி நலமாகவடிகட்டி த்தாழிற்சேர்த்து, ஒடாநல்லெண்ணெய்குறுணிவாரு வுத்தமனேபாவின்பால்குறுணிதானே. (கசசா)

தானனவிளநீரோபடிதானெட்டு தான்விட்டுக்கற்கவகைசாற்றக்கேளு, காஞனவேலமதிமதுரமஞ்சள் கடுகுரோசணியரத்தை செண்பகம், ஊனனகாடில்வெண்ணெய்ச்சித்தரத்தை புடன்வசம்பு செவ்வலரிதேவதாரம், தேனனசீரகமுமகப்பூவுந் திருகடுகுமரமஞ்சள்சிறுதேக்காமே. (கசஎ)

ஆமப்பாஅதிவிடையங்கஸ்தூரிமஞ்சள் அமுக்கினநன்னாரிகுருந்தொட்டிவேருங், தாமப்பாசுவாசி கிராம்புமுத்தங் தக்கோலங் கார்போகங்கடுகுகோஷ்டம், நாமப்பாச்சிலைவாயுளுவையோடு நாகப்பூமஞ்சனம்வெட்பாலையோடு, போமப்பாகுறிஞ்சனுடனேம்பத்தொன்றும் பொருந்தவேவகைக்குரண்கெழஞ்சிதூக்கே. (கசஅ)

தூக்கியேயரைத்துஎண்ணெய்தனிற்சேர்த்து தும்பிமுகன்பூசைசெய்துஅடுப்பிலேற்றி, தாக்கியேசிறுதீயாயெடுத்துக்கிண்டித் தான்கடுகுபதந்தன்னில்வடிக்கக்கேளு, பாக்கியேபொன்மெழுகு சட்டம், பச்சைங்கர்ப்பூரமொடுசாம்பிராணி, நீத்தியேவகைக்கழஞ்சுசிறுத்துக்கொண்டு நிசமானகஸ்தூரிவிராகனிடையரையே. (கசகு)

அரைத்துநீவ்விடிகலசந்தன்னிலிட்டு அப்பனேதயிலத்தைவடித்துக்கொண்டு, சிரத்திலேதான்பெருந்தஃடிகைஐந்து சென்றபின்புசீயக்காயரைப்புவெந்நீர், நித்தமேதான்முழுதும்பத் தியம்வேண்டும் நிலைநயனரோகத்துக்காவின்பாலாந், தாத்தயேமற்றுள்ளநோய்க்குவெந்நீர் சோற்றுக்குச்சிற்றுப்புவருந்தக்கூட்டே. ()

கூட்டுவாய்சிறுகீரைமுருங்கைப்பிஞ்சு கொத்துமல்லிவழுதலம்பிஞ்சுவரைப்பிஞ்சு, தீட்டுவாய்துவரையிட்டபருப்புமாகுஞ் சிறுயயறுபருப்போடுபுடலம்பிஞ்சாம், தேட்டிலேமற்றொன்றுமாகாதப்பாதீண்டாதேபுளிப்பினிப்புகைப்புமாகா, நாட்டியேநாளக்கொருகாலமூழ்க நலமாகத்தீரும்நோய்நாட்டங்கேளே. (௧௫௧)

கேளடாமண்டையிடிகபாலக்குத்து கெடியானகிறுகிறுப்புச்சுவாசகாசம், மாளடாதனிலிறங்குந்தந்தச்சூலை தலைநீருங்கண்ணேசிகன்னப்புத்து, சேளடாவிப்புருதிகண்டமாலை கெடிசூலைகுவளைவருங்கபாலச்சூலை, நாளடாநயனத்தின்படலங்காசம் நாடரியபித்தத்தின்காசம்போமே. (௧௫௨)

போகுமேகண்டத்தின்மேலேவந்த பொல்லாதவாயிரத்தெட்டுநோயும், ஏகுமேகர்மத்தைநிவர்த்திசெய்தால், எழுந்தநோய்தீருமடாஏழைமக்காள், நோகவேகர்மங்கள்தீரவிட்டால் நோய்க்கந்தமருந்தையுண்ணுந்தீராதப்பா, பாருமேதருமஞ்செய்திருந்தானாகில் பாலகர்க்குக்கருமமில்லையறிந்துசெய்யே. (௧௫௩)

செய்யவேநயனநோயெல்லாந்தீருஞ் சிரசிலேவந்தபிணியனைத்தும்போகும், நையவேகழுத்தின்மேல்வியாதியெல்லாம் நாலுநாள்மாறலொடுவெதும்புத்தீரும், பையவேவாதசிலேட்டுமம்போம் பாங்காகச்சுவாசமதுமறக்குங்கண்டாய், ஐயனேகையில்நெல்லிக்கனியிருக்க அலையவேவேண்டாங்காணறிந்துபாரே (௧௫௪)

பித்தத்திற்கு அமிர்தவல்லாதித்தயிலம்.

அறிந்துபித்தந்திருசுற்கு அப்பாகேள் அமிர்தாதிதயிலமென்னுமதற்குநாமம், சிறந்தவொருஅமிர்தவல்லிபலத்தைக்கேளு செப்பியதுநாலுபத்துச்சிதைத்துநன்றாய், சிறந்தகன்னிச்சாறுபடியொன்றதாகச் சீரானகழிநீர்கான்பலமோபத்து, பிறிந்திதனையிடித்துவொருபாண்டத்திட்டுப் பின்பதக்குநீர்விட்டுயெட்டொன்றாக்கே.

ஆக்கடாகியாழுமொன்றுநல்லெண்ணெயதற்குநேர்விட்டுநீடுப்
பிலேற்றி, தாக்கடாஅதிமதுரந்தேவதாரஞ் சந்தனம்பூலாக்கிழங்கு
கடுகுரோகணி, நோக்கடாதிரிமலையுமண்திஷ்டியேலம் நோரம்பச்சி
லையரத்தைமுத்தக்காசு, வாக்கடாகோஷ்டமதில்வெட்டிவேரு மை
ந்தனேவிலாமிச்சுசித்தரத்தை, நீக்கடாதாமரையின்வளையமோதம்
நேரிலவம்பட்டைசடாமாஞ்சில்தானே. (௧௫௬)

தானென்ற தக்கோலம் வகையொன்றுக்கு சமனாகவிராகனி
டையரைத்துப்போடு, தேனென்றமெழுகுபதமுதிரும்போது செ
ணத்திலேவடித்தப்பாமுருகச்சொல்லு, காமென்றசீய்க்காயரைப்
புவெந்நீர்கட்டாகமுழுகிவரவுடம்புபாழாம்,வானென்றபித்தத்தின்
கதிப்புக்கண்ணைப் மாறலென்றசுரமெல்லாம்வாராதென்னே.

அமிர்தசஞ்சீவித்தயிலம்.

வாராமலொழிவதற்கு அமிர்தசாலை மைந்தனேதயிலமொன்று
வழுத்தக்கேளு, தோராமல்சீந்திலொடுபலமோபத்து சொல்லுமுத்
தம்நன்னாரிவிலாமிச்சமவேர், நேராகப்பலமைந்துமிடித்துப்போட்
டு நீர்விட்டெட்டொன்றாப்படிதானென்று, ஏராமல்சீந்திர்சாற்ப
டிதானென்று எண்ணெய்படியொன்றுவிட்டுக்கற்கக்கேளே. ()

கேளடாகைச்சோலஞ்செங்கிளநீர்கோஷ்டம் கெடியானபுழு
குசட்டமாஞ்சில், நாளடாசாதிக்காய்கட்டில்வெண்ணெய் நாகப்பூ
செண்பகப்பூஅகில்நன்னாரி, வாளடாஅதிவிடயமிலவங்கப்பட்டை
வசுவாசிபிருவேலிமதுரந்தானும், வேளடாசந்தனப்பச்சிலைதக்கோ
லம் மேலாங்கஞ்சனவளையம்விராகனென்றே. (௧௫௯)

ஒன்றாகயரைத்திட்டுஇளகக்காய்ச்சி உயர்கடுகுபதந்தன்னில்
வடித்துக்கொண்டு, குன்றாமல்சிரசுதனில்தேய்த்துமூழ்கக் குணமா
கும்பித்தத்தாலெழுந்தகாசம்,நின்றாமலபலபிணியுந்திரும்பாரு விலை
யசன்வில்வாதிதயிலங்கேளு,பொன்றாதவேங்கையிடபட்டைச்சீந்தி
ல்புசழ்விலவங்குருந்தோட்டிவேருமாமே. (௧௬௦)

மகாவில்வாதித்தயிலம்.

வேருடனேவகைவகைக்குப்பலந்தான்மூன்று விதமாகவிடித்
துநீபாண்டத்திட்டு,நேருடனேசுத்தசலம்படிதானெட்டுநீர்க்குருக்
குப்படியொன்றுவடித்துவாங்கி, வாருநீநல்லெண்ணெய்படிதானென்று
வளமானஆவின்பால்படிதானென்றுசேரும், கொதிக்கையிலேதற்
கங்கேளு திரிபலையுமதிமதுரமேலந்தானே. (௧௬௧)

ஏலமொடுஇலவங்கம்அமுக்கிறாவேர் இருவேலியிலாமிச்சம்மு த்தக்காசு, கோலமுடன்மரமஞ்சள் தேவதாரங்கோஷ்டமொடுசா திக்காய்சாதிப்பத்திரி, சாலமஞ்சள்சுக்கரத்தைசெண்பகப்பூ சடா மாஞ்சிற்கைச்சோலம்புழுகுசட்டம், மாலிசீரானவாங்கூகைநீறு ம லர்க்காயும்நெய்தல்சந்தனமுமாமே. (கசஉ)

ஆமப்பாகுங்குமப்பூசித்தரத்தை அப்பனேதாமரையின்வளை யத்தோடு, நாமப்பாகுருந்தொட்டிவேருமல்லால் நற்சீரகங்கரியசீ ரகந்தானோடு, தாமப்பாவகைக்குவகைவிராகனென்று தனித்தாவி ன்பால்விட்டுஅரைத்துச்சேரு, ஓமப்பா மெழுகுபதமாகும்போது உத்தமனேகிட்டிகட்டிப்பிழிந்திட்டாயே. (கசங)

பிழிந்திட்டதயிலமதைமுழுகும்போது புண்ணியனேதீருநோ ய்புகலக்கேளு,வழிந்திட்டபீனிசமுங்கன்னரோகமக்களேசிரசுநோ ய்நெற்றிவாய்வு, இழிந்திட்டநயனத்தின்ரோகமெல்லா மிடரகலும்பு ளிபுகையுந்தூரத்தளளு, தழிந்திட்டதந்தத்தின்வாய்வுதீருந் தப்பா துதயிலத்தின்தன்மைபாரே. (கசச)

கன்னரோகத்திற்குத்தயிலம்.

பாரப்பாகன்னத்தின்ரோகமெல்லாம், பறந்தோடத்தயில மொன்றுபகரக்கேளு, சாரப்பாநொச்சியொடுமுருக்கூமத்தை, தை வேளைபச்சைமஞ்சளிஞ்சிச்சாறு, நேரப்பாவாழையிடகிழங்குச்சா றுநிலம்பனையின்கிழங்குகைபான்றகரைச்சாறு, நாரப்பாபெருங்கு ரும்பைவெள்வங்காயம கனத்துளசிவகைக்குச்சாற்படிகாலாமே.

காலாகும்நல்லெண்ணெய்படிதான்ரண்டு, கலந்துவிடுபாண்ட த்திற்கற்கங்கேளு, மேகுலாகுந்திரிகடுகுசித்திரமூல மிக்ரைபகடுகு கோஷ்டமிந்துப்போடு, மாலாகும்வகைக்கிரண்டு கழஞ்சுதூக்கு மைந்தனேயரைத்திட்க்கலக்கிக்காய்ச்சி, நாலாநாள்மெழுகுபதந்த ன்னில்வாங்கி நன்றாகவடித்துச்சொல்லக்கேளே. (கசரு)

சொல்லுவேன்காதில்விட்டுச்சிரசில்தேய்த்துச் சுடுவெந்நீர்சீ யக்காயரைப்புமாகும், அல்லவேகன்னோசைகன்னப்புத்தி அழற் கன்னச்சூலையொடுஅரிகிரந்தி, கொல்லவேவந்தொருகரப்பனோடு கொடுமைசெய்யுமனிப்புருதிபிளவைதானும், இல்லையேகன்னத்தி லீருபத்தொன்றுசாரூரோகங்காதிற்சீழில்லைதானே. (கசசா)

## அதிகரணத்தயிலம்.

தானென்றவிடாசுரங்க ளெல்லாந்தீருஞ் சாற்றுவேன் அதிகர
ணத் தயிலந்தன்னை, ஏனென்றவெருகினிட கிழங்குத்தண்டுஇலையுட
னேபலம்பத்துவின்னங்கேளு, தேனென்றகுருந்தொட்டியமுக்குறு
வேர் சீந்தியொடுசாரணைவேர்வகையொன்றுக்கு, மானென்றபலமூ
ன்று மிடித்துப்பாண்ட மதனிலிட்டுத்தண்ணீரு மரக்கால்நாலே,()

நாலுமேகுறுக்கியதுபடி தான்ரண்டு நல்லாவின் அஸ்திமஸ்துப
குதான்ரண்டு, சாலுமேவெள்ளாட்டுப்பாலில்ரண்டுதன்னில்விடுநல்
லெண்ணெய்ப் படிதான்ரண்டு, ஏலுமேகாகமதிசுக்குச்சீந்தி லிலவ
ங்க மிந்துப்புக் குக்கிலமூந்தானும், போலுமேசாரணைவேர்மதுரங்
கோஷ்டம்புகழ்வசம்புமஞ்திஷ்டி முத்தக்காசே. (கசுகூ)

முத்தமொடுசித்தரத்தைதேவதாரம் மும்மஞ்சள்சிறகிரைவே
ர்கிராம்பு, சிற்றுமிட்டிவில்வவேர் அமுக்குறுவேற்திப்பிலியுஞ்சந்த
மூலாமிச்சம்வேர், புகதியுடன்நன்னாரி மிளகினோடும்பொருலவங்
கப்பத்திரியும்வகையொன்றுக்கு, குற்றமதுவில்லாமல் கழுஞ்சுயொ
ன்று குறையாமலாட்டினிட பாலிலாட்டே. (கஎ0)

ஆட்டியேகரைத்துவிட்டு அடிபற்றுமல் அடுப்பேற்றிக்கின்டி
யே சிறுதீயாக, மூட்டியேமெழுகுபத மாகும்போதுமும்மதத்தோ
ன் பூசைசெய்துவடித்துக்கொண்டு, தீட்டியேசீபக்காரைப்புவெந்
நீர்சிறமாகமுழுகிவரத்திரும்நோய்கள், கேட்டியேவாதசுரம்பித்தசு
சுரம் வெப்புங்கிளைத்து வரும்விடிசுரமுமகலுங்கேளே. (கஎக)

## சீதேவித்தயிலம்.

சேளுநீவிடாதசுர மூன்றுமாறல் கேடுகெட்டசதுர்சீத மிரண்
டாமாறல், காளுநீயொன்றைவிட்டமாறலோடு சகலசுரமனைத்துக்
குந்தான்றுண்டியோடும், வாளுநீசீதேவித்தயிலங்கேளுமைந்தனே
சீதாரெங் கழுநீர்ச்சாறு, நாளுநீபடிமூன்று அுளந்துவிட்டுநல்லெண்
ணெய்ப் படிமூன்றுகூடவாரே. (கஎஉ)

கூடவேசற்கமதுமதுரங்கோஷ்டங் குணமானவேலத்தின் லவ
ங்கப்பட்டை, தேடவேமண்திஷ்டிகடுகுரோகணியுஞ் செண்பகப்பூ
ச் தந்தனமுமிலாமிச்சம்வேர், சாடவேதண்ணீர்மிட்டான் கிழங்கு
தத்தத் தாமரையின்வளையங்கஸ்தூரிமஞ்சள், நாடவேசெங்கழுநீர்
கிழங்கினோடு நன்னாரிவெட்டிவேர்நவிலுந்தானே. (கஎங)

நவிலவேவகைவகைக்கு விராகனிடைமூன்று நன்றாகயிடித்த தைத் தெண்ணெய்சேர்த்து, கவியவேகாய்ந்தபதமெழுகுமானால்க லசத்தில்வடித்தாமீமுழுகும்போது, தவிருமேவிடாதசுரங் கொதிப்பு வெப்புத்தண்ணீரில்தாகமொடுசெண்டிக்காய்ச்சல், புவியிளேவந்தசி ர மறுபத்துநாளும்பொல்லாதசுரங்களெல்லா மில்லாதெண்ணே. ()

ஏரண்டத்தயிலம்நீராம்பல் மகோதரத்திற்கு.

எண்ணவேமகோதரம்நீராம்பல்தீர் இயம்புவேன்ஏரண்டத் தயி லமொன்று,பண்ணவே முடக்கொற்றான்சமூலக்கேளுபலமுப்பதா குமே சிற்றாமுட்டி, தண்ணவேபதினைந்து பலந்தானப்பா சொல்சி ற்றாமணக்கம்வே ரதினிற்பாதி, முன்னவேமுள்ளிவே றிலவம்பட் டைமுருங்கவேர் பட்டையொடுசிவிகைதானே. (கஎரு)

சிவிதைவேர் வீழியொடு முதியார்கூந்தல் செம்முள்ளிகொடி வேலிதேவதாரம்,நெவிலவேநெரிஞ்சிவேர் தண்ணீர்மிட்டான்கோ வெள்ளைச் சாரணைவேர்கழல்பருப்பு,நவிலவேகொள்ளுடனேவகை யொன்றுக்குநாட்டுவாய்பலமூன்று விடித்துப்போட்டு, தவிராமல் தண்ணீர்ரண்டு குறுணிவிட்டு தான்குறுக்கிபெட்டொன்றாயிறுத்தி டாயே. (கஎசு)

இறுத்திட்டகியாழமது படிதானுலு இலைக்கள்ளிப்பால்சதுரக் கள்ளிப்பாலும்,பிறித்திட்டுப்படி தான்கா லளந்துவிட்டுப்பெருமை பெறு ஆவின்பால்படிதானுலு,குறித்திட்டதேங்பாய்ப்பால்படிதா னுலு குறைபாதுத்தாமணிச்சாற் படிகானுலு, சிறுத்திட்டயேரண் டத் தெண்ணெய்நாலுதிறமானபேய்க்குமட்டிச்சாறுநாலே (கஎஎ)

சாறுடனேயெண்ணெய்ப்பால் கியாழத்தோடு தாளிதனிலிட் டுநீசலித்திடாமல், ஊறிடவேமூன்றுநாளானபின்புஉத்தமனேகற்க வகை யுரைக்கக்கேளு, வீறுடனேதிரிகடுகுசித்ரமூல மேலான சாதி க்காய் செவியமேலங், கூறிடவேபொங்காயம் வசம்புஓமங் கொத் துமல்லிசதகுப்பை யிந்துப்பெண்ணே. (கஎஅ)

இந்துவொடுபொட்ளுப்பு அமுக்குறாவேர் யியலான அதிமதுர மிலவங்கப்பட்டை, மூந்துசடாமாஞ்சில்வா லுளுவைதானுமொழி யத்தையாலவேர்சித்ரத்தை, கந்தமடாநன்னாரிஅகிலினோடு கண் டதிப்பிலிவகைக்குக் கழஞ்சுமூன்று, அந்தமுடன் அரைத்திட்டு வு லரவைத்துஅஞ்சாநாள்மெழுகுபதந் தன்னில்வாங்கே. (கஎகூ)

வாங்கியேகேகபலந்தன்னைக்கண்டுமைந்தனேயுள்ளுக்குக்கொடுத்தாயானால், தேங்கியேயிருந்தபித்த நீர்களெல்லாஞ் சனத்திலே பேதியினால் வாங்கும்பாரு, ஓங்கியேதிரியாதே மிளகுநீரு மிளங்கோழிச்சாருக்குங் கொள்ளுமாகும், தாங்கியேதீரும்நோய் மகோதரங்கள் சளஞ்செய்யும் அஷ்டகுன்மந் தவிருந்தானே (கஅ௦)

கானென்றவிஷபாகங் கவுசிகெண்டைதான்வைப்பும் பார்வையொடு அருவைக்காலும், வேனென்ற நீராம்பல்பெருவயறி னேடு விப்புருதிபாண்டுடனே யிளப்புரோகம், கோனென்றவுதிரத்தின் கட்டால்வந்த கொடுமைசெய்யும் நோயெல்லாங்குடிபோம்பாரு ஊனென்றவுடம்பிற்குத் தலையிலதேய்க்க வுத்தமனேபிணியில்லாதோடுந்தானே. (கஅக)

(செம்பிராத்தயிலம்)

தானானசெம்பிராத்தயிலங்கேளி தலைக்குற்றுக்கரப்பனொடு சூலைத்தீர, மானானசெம்பிரானிலைபுஞ்சாறு மகிழிலைச்சாறவுரியொடு துளசிச்சாறுந், தேனானசங்கினிட் டழத்தின்சாறுஞ்செப்புபுளியிலைநாரத்த னிலையின்சாறும், தானானஆத்தலரி யிலையின்சாறுங் கணைக்குடனேவகைக்கு அரைப்படிச்சாறுமே, (கஅஉ)

சாறானவெட்டுவகைச் சாறுங்கூட்டி தனிப்பசுவின்பாலதுவும் படிதான்ரண்டு, கூறானசெல்லெண்ணெய்ப் படிதான்ரண்டுகூடவிட்டுத்தாளிதனில்கற்கங்கேளு, வீறானஜாதிக்கா யேலங்கோஷ்டமமேலானமும்மஞ்சள் குங்கமப்பூ, ஈறானபச்சிலையிலாமிச்சம்வேர் இருவேலியதிமதுரம் அழிஞ்சிவித்தே. (கஅ௩)

வித்தானகடுகுதிரிபலைபண்கிஷ்டி மிருலவங்கப்பட்டை யொடுலவங்கப்பத்திரி, சற்றானஅழிஞ்சிவேர்ப் பட்டைதானும சந்தனமுமகிலமொடு மிளகுங்கூட. சிற்றானசெஞ்சந் தனத்தினேடு சேரவேவகைவகைக்குக் கழஞ்சியொன்று, முற்றானபால்விட்டு மைபோலாட்டி முன்றயிலந்தன்னிலிட்டு அடுப்பிலேற்றே. (கஅச)

ஏற்றியேமெழுகுபக முதிரும்போது இறுத்திடுவாய்கலசத்திலின்னங்கேளு, தேற்றியேதயிலமதை தேய்த்துநீயுஞ்சீய்க்கயாலைப்புவெந்நீர் மூழுகச்சொல்லு, சாற்றியேபத்தியந்தான் தயிர்பால்

மோராந்தனித் துவரைப்பருப்போடு பசுநெய்யாகும், மாற்றுவாய்
புகையிலையும் புளியுந்தள்ளு மைந்தனேயொன்றைவிட் டொருநாள்
மூழ்கே. (கஅரு)

மூழ்கையிலே வெந்நீரோபரித்த த்தம் மொழியுகிறேன் தீரும்
நோய் கபாலகுஷ்டம், வாழ்கையிலேவெட்டையொடு கபாலக்கு
த்து மண்டையிடிபீனிசமோ ராறுந்தீரும், தாழ்கையிலேகுட்டத்
தின் கிரந்திதீருந் தலையிலேவெடிசிரங்கு கபாலச்சூலை, குழையிலே
கபாலத்தில சுரப்பான்வாய்வு தும்பலொடுமூக்குநீர்ப் பாய்ச்சல்
போமே. (கஅசு)

போமப்பாகபாலத்தின் தினவுகூட புழுவெட்டு இருமலுடன்
போக்குந்தீரும், ஓமப்பாமயிர்கருத்து வளரும்பாரு வுத்தமனேநய
னத்தி லுறுத்தல்தீரும், தாமப்பாசிரசிலையும் பித்தமெல்லாந் தண்
டனேபோகுமடா தயிலந்தன்னில், நாமப்பாசொல்லிவிட்டோ
மிந்தநூலில்நல்லோர்களறிந்துசெய்ய நன்மையாமே. (கஅஎ)

பவுத்திரம்பிளவைக்குத்தயிலம்,

நல்லமையில்லை பவுத்திரங்கள் பிளவைக்கெல்லாம் நலமாகும்பு
டத்தயிலம் நவிலக்கேளு, வன்மையில்லாமனிதரிட மண்டையோடு
வளர்சிற்றுமணக்கன் முத்து புங்கன்மூற்று, தன்மையிலாதிருப்பை
யுட பருப்புக்கூட்டிச சாற்றுபுளிமரத்தினிட வயிரப்பட்டை, புன்
மையில்லா திந்தவகைமருந்துஐந்துப் பொருந்தவகையொன்றுபல
மைப்பதானே. (கஅஅ)

ஐம்பதாய்நிறுத்திடித்துத் தூளேயாக்கி ஆட்டுவாய்புங்கன்
வேர்ப்பாலைவிட்டு, தெங்பதால்பாக்குப்போல்வில்லைதட்டித் திற
மாகரவிதனிலே காய்ந்தபின்பு, வின்பமாய்ப்பானைதனி லடைத்து
க்கொண்டு வென்மக்காள்வேம்புசங்கு குச்சிதன்னில், பின்பதாய்
மேல்பரப்பிப் பானைவாய்க்குப் பிலக்கவேசட்டிகொண்டு கவிழ்த்து
மூடே. (கஅகூ)

மூடினதோர்சட்டிநடுத் தமர்தான்மூன்றுமுன்னிட்டுச் சீலைம
ண்செய் துலர்ந்தபின்பு, நாடினதோர்குழிவெட்டிப் பழக்கஞ்செ
ய்து நற்கலசந்தனனில்வைத்து சலசம்வாயில், தேடினதோர் மரு
ந்தடைத்தப் பண்டஞ்சட்டி சேராதமர்கலசம் நடுமையத்தில்,
கூடினதோர்தமரிட்ட சட்டித்தூறு கூறுவேண்கலசவாய் கூட்டித்
தானே. (கசூ0)

கூட்டிரோசாணிமண்ணும்பிசைந்துஅப்பி கொடுந்தீயாற்சாம
மட்டுமெரித்தாயானல், காட்டியேபானையடி சிவந்துபோனல் என

லாறிக்குளிர்ந்தபின் பிருந்துபாரு, நீட்டியேகேழ்க்கலசம்தயிலம் நிற்கும் நினைவாகயெடுத்தந்தத் தயிலந்தன்னில், பூட்டியேசமன்சித்தாமணக்கினெண்ணெய்ப் புகட்டியேசேர்ச்சுண்டக் காய்ச்சகாச்சே. ()

காய்ச்சியேகுப்பிதனி லடைத்துக்கொண்டுகருத்துடனேயிருக்குமந்த பாண்டத்திட்டு,வாய்ச்சுதேயதிற்றயிலம்விட்டுமைந்தாவாயில்புள்ளாங்குழலை வைத்துக்காட்டியேதான், பாய்ச்சவேபுரைவாயில்குழல்வாய்ச்சேர்த்துப்பதருமலதைப்பார்த்துத் தயிலந்தன்னை, போச்சுதே புரைபுகழ்ந்துப்புண்ணுமாறிப் போகுமேகண்களிலுந் தடவச்சொல்லே. (கசுஉ)

சொல்லுவேனென்றைவிட்டு வொருநாள்பாச்சு துயர்தீரும்வியாதியின்னஞ்சொல்லக்கேளு, அல்லவேபுரையோட்டம்பவுத்திரங்களறையாபபு வ்படுருதிகண்டமாலை, சொல்லவேபிளவை குடைவாளைக்குட்டந் தீருமேமூலபத்துவொடுவைப்புண்கள், கொல்லவேவருமோடு விப்புருதிமுதலாய்க் கொண்டபலவிரணங்க ளெலலாம போமே (கசுஙு)

போகுமேபுண்பிளவைக ளெல்லாந்தீரும்புரைவாயிற்கஞ்சிவைத்தடைக்கவேண்டும், சாகுமேஆறுத ஆளிபுண்ணெல்லாந்தடவவேயுலருமடாசாற்றக்கேளு,ஏகுமேபுளிபுகை கரப்பான்பண்டம்யேற்றுதேசடுதியிலே யிடுக்கந்தீரும், ஆகுமேபழதியர்தா னறிந்துசெய்தால்லவர்களுக்குப் பிணியில்லாதகலுந்தானே. (கசுச)

உள்ளிவெண்ணெய்

அகலுமேஎள்ளியா மணக்கினெண்ணெ யறையுறேன் வெள்ளுள்ளிப் பலனுறப்பா, புகலுவேனெண்குறுணிச் சலந்தான்விட்டுப்புண்ணியனேயெட்டொன்றாய்க்குறுக்கிவாங்கி, நிகலவேபிசைந்துவடித் திறந்துக்கொண்டுநினைவாகப்பசுவின்னீர் படிதான்ரண்டு,இதனுசித்தாமணக் கெண்ணெய்படியிரண்டு யிதிற்சதுரக்கள்ளிப்பால்வுரியுஞ்சேரே. (கசுரு)

சேர்த்துநீபாண்டத்திலூறும்போது சேர்வதற்கு கற்கவகைதேவதாரம், போர்த்துநீவசம்புகோஷ்ட முருங்கைவேற்தோல்வபுங்கன்வேற்கருங்கொள்ளு சித்திரமூலம், ஏர்த்துநீதிரிகடுகுபெருங்காயந்தா னிந்துப்புபொட்ளுப்பு வளையலுப்பு, ஆர்த்துநீதிரிபலையுமிலப்பட்டை ஆனைத்திப்பிலி தேசாவரமுங்காணே. (கசுசு)

காணவேதகரமொடு செந்தியுப்புக்கல்லுப்புக்கிரண்டுவிராகனி
டையோடு, தோணவேயடுப்பேற்றி யெரிநேர்ப்பாகச்சொல்மெழு
குபதத்திருந்து வடித்துக்கொள்ள,நாணவேதீரும்நோய் குன்மச்சூ
லைநாடாதுகுடலேற்றப் பவுத்திரங்கள், பூணவேபுரையோட்டம்வெ
ப்புப்பார்வை போம்வயற்றிற்குத்து வாதங்கள்போகே. (கசுஉ)

### பீனிசத்திற்குறகசியம்.

போமென்றபீனிசங்கள் தீர்வதற்குப்புகலுவேனசியமொன்று
கோஷ்டமேலம், ஆமென்றதுங்குமப்பூ லவங்கப்பட்டையதிமதுரங்
கருஞ்சீரக மிலவங்கப்பத்திரி,தாமென்றவிராகனிடை யொன்றுதூ
கித்தனிப்பசுவின்பாலரைகால் படிவிட்டாட்டி,ஓமென்றமாதளம்பூ
ச் சாற்வவ்வீத முத்தமனேபசுவின்னெய்ப்படி யரைகால்வாரே. ()

வாரப்பாயெறிமெழுகு பசமதானுல் வாங்கியேகசியமிடுபீனிச
முமோராறுஞ்சேரப்பாபித்தத்தின் தலைக்குத்தெல்லாந்திருமேகண்
சிவப்பு நயனவாதம், பாரப்பாநீர்ப்பில்லம் விழிபிநீர்ப்பாய்ச்சல் ப
றக்குமடாசிறுகூடாந்தாரைவிட்டால், நேரப்பாதேன்கலந்துவிட்டு-
வார்நீ நேரறிந்துவயித்தியந்தா னிலைக்கச்செய்யே. (கசுசு)

### அதிசாரகிராணிக்குக்கபாடமாத்திரை

செய்யடாஅதிசாரக்கிராணிபோக செப்புகிறேன்வச்சிரமாங்
கபாடந்தன்னை, அய்யடாஜாதிலிங்கம் அபின்வெண்காரம் அதிவி
டையம்சாதிக்காய் மிளகுசுக்கு,பெய்யடாமுள்ளிலவம் பிசினுஞ்சே
ர்த்துப்பெருமரத்துப்பட்டைக்காட்டாறிப்பூவும், மெய்யடாசமனி
றுத்துக் கல்வத்திட்டு வில்வவேற்குடப்பாலை வேற்தோலாமே. ()

வேரடாமுத்தமாங் காசாப்பட்டைமேல்சிறுகாஞ் சொரிவே
றும்வெவ்வேறாகப், பாரடாகியாழமிட்டுச் சாமஞ்சாமம்பதறுமல
ரைத்தபின்பு அடைபோல்தட்டி, சீரடாயோட்டிலிட் டடுப்பிலேற்
றித்திறமாகவெந்தையத்தின் கிபாழங்குத்து, வாரடாஅடைப்பிரட்
டிசாமங்குத்தில் மைந்தனேயரைத்துருட்டி வகைபைக்கேளே. ()

கேளடாகஞ்சாவின் சாரம்விட்டுக்கெடியாகச்சிறுசுண்டைக் க
லம்மட்டுந்தான், தாட்டாகிழலுலர்த்தி வைத்துக்கொண்டுதப்பாம
ளனுபான மறிந்துச்செய்தால், வேளடாதிரைக்கிராணி அதிசாரம்

காரவிரைந்தரேடும் விமலனருக்குச்சொன்னர், காளடாபுலகத் திலுள்ளபேர்க்கு நானுரைத்தேன்பிணியகலும் நன்மைதானே.

வாரசூலே.

நன்மைகளாந்திசைநோக்கி யாத்திரைபோக நாயறுதான்முதலாக சனியிராகு, தின்மைகளாஞ் சூலமொன்று நடக்கொட்டாக்குத் திசைநாடிப்போகவென்றுள் செப்பக்கேளு, தன்மைகளாங்குருவாரங் கடிகையெட்டுச் சனிமதிககிகடிகையிரு பதுதானப்பா, உன்னதமாய் ரவிவெள்ளிப் பனிரண்டாகு முத்தமனே புதன்செவ்வாய்ப் பதினொன்றுமே. (உ0௫)

பதிநாடிமானிடர்கள்சொல்லும்போதுபரிதிபதுஉதையத்தின் முதலதாக, மதிநாடிமூன்றுரைத்தகடிகைதன்னில் வழிநடக்கநன்றென்று வழுத்தலாம்பார், விதிநாடிமதிற்சூலே யில்லேயில்லேவிமலனுருரைத்தபடிவிளங்கக்கேளு, அதினலே திசைகாணில் சூலேதோஷமணுகாது பென்றுசொல்லி அறைந்திட்டேனே. (உ0௪)

வில்வாதிலேகிபம்.

அரைந்திடவேவில்வாதி லேகியத்தைக்கேளு அப்பனேவில்வவேற் பட்டைதள்ளிச், சிறந்திடவேநடுத்தண்டுப் பலமுப்பதாகுந் திறமாக நொறுக்கிபிடிபாண்டத்தூட்டு, நிறைந்திடவே தூணிசலந் தன்னைவிட்டு நீருறுக்கிப்படிநாலு வடித்துவாங்கு, உறைந்திடவே டனேவெல்லம் பலத்தைக்கேளு உத்தமனேமுப்பது தான்கரைத்துக்காய்ச்சே, (உ0௫)

காய்ச்சியேபக்குவரும் பருவந்தன்னில் கனமிளகு நாலுபலஞ்சுக்கு மூன்று, பாச்சுவாய்செவியமது பலமும்ரண்டாம் பருந்தேசாபுரமிரண்டும் பலந்தானப்பா, ஆச்சுதேதிப்பிலிதான் பலமுக்காலாகுந் அருந்தாளிப்பத்திரி ஒன்றரையாமப்பா, போச்சுதே கொடுவேலிப்பட்டையென்று பின்புசிறுநாகப்பூப் பலமொன்றுமே.

ஒன்றுகுமெட்டுவகை மருந்துமப்பா உறுதிபதினேந்தேகாண் பலமுமாச்சு, குன்றுமலிடித்துவஸ்திர காயஞ்செய்துக் கொட்டியேகிண்டி லேகியமாகும்போது, நன்றாகயிறங்கியேஆறவிட்டுநெல்லதேன்படி பொன்ற விட்டுகிண்டி, அன்றுடந்தான் திக்கா யளவதாகஅந்திசந்தியுண்ணவே யகலும்நோயே. (உ0எ)

நோயேதுபாண்டுபித்தஞ் சோகைவாந்திநொறுங்கியே வயிறூப்புசாரந்தானும்,வாயேதுஷ்டப் பிளேப்புக்குன் மம்வாய்வுமைந்த

னே அக்கினிமந்தம்போய்பார், நீயேதமுண்ணாதே புளிபுகையுந்த ள்ளுநின்றுவிடு சூசைபோகம் நினைக்கொண்ணாது, நீயேதுகாமத் திற் சேர்ந்துதானால் தீராதுபிணியொன்றுந் தீராதெண்ணே.

மகாசிந்தாதிலேகியம்.

தீராதபாண்டுகாமாலைதீர செப்புமகாசிந்தாதி லேகியந்தான், தோராதபுளியிலைச்சாற் றாணியொன்றுசுறுவருங் கடுக்காயுமாரரா கும்சாராத சிவிதைவேற்முள்ளிவேறுஞ்வாரணைவேற் உறிவேலுமு த்தக்கசு, பாராதமஞ்சளொடு சித்ரமூலம் பாதறிவேற் முன்னை வேற் வில்வவேறே. (உ௫௯)

வில்வக்காய்தூதுவளை கீழ்க்காய்நெல்லி வேறுடனேபெருவா கைக்குமிழம்வேறு, செல்லகத்தான் சிங்கம்வேற் வேப்பம்பட்டை சித்தமல்லிநெரிஞ்சிநாயுருவிவேறும், சொல்லத்தானூசிமல்லி கை யான் வேறுந் தடர்வட்டத்திருபபிவேர் பேராமலலி, மெல்லத் தான்கிரிமுள்ளிக்கண்டங்காலி வேறுடனேவகைக்குவகைப் பலந் தான்பத்தே. (உ௬0)

பத்தான மருந்திடித்துச் சாற்றிற்போடுபசுவிநீர்பதினாலுபடி யும்வாரு, சந்தானயிரும்புபல் மூன்றுமிட்டு தனிக்கிட்டமறூறுப லம் தகத்துப்போடு, முத்தான ஆற்றுநீர்தூணிவாருமுடாவிலிட்டு அடுப்பேற்றிதீயைமூட்டு, சித்தான கணபதியைப் பூசைபண்ணி தினமேழுசென்றபின்புகுறுக்கிடாயே. (உ௬௧)

குறுக்கியேபடியாறுவடித்துக்கொண்டு குருவேலி பேய்த்தும் பைமும்மஞ்சள்காணும், நறுக்கியேபனங்கதிரும்புளியுவிரைத்தோ டு நாட்டில்முள்ளிகிரத்தண்டதுவுங்கேளு, நொறுக்கியேபுரசுடனே யேழுஞ்சுட்டு நவலவகைக்கொருபடியாம் சாம்பல்வாக்கி, இறுக்கி யே சாளிவாய்வேடுகட்டியேழுபடிசாம்பலிட்டுத்தண்ணாவாரே.

வாரப்பாபடிநாலு கியாழத்தோடு வார்த்துவிடுசாறுவகைக் குப்பைமேனி, சாரப்பாநீர்பிரமிநொச்சிச் சங்குசாரணையுங் கல்லு ருவி அவுரிச்சாரும். நேரப்பா சதுரக்கள்ளிச்சாறு வகையொன்று நினைவாகப்படிரெண்டுகூடவாரே. (உ௬௩)

கூடவேபனைவெல்லம் பலமறுப தாகும் கொட்டியே பாகுவ ரும் பருவந்தன்னில், நாடவே பசுவின்னெய் படிதானென்றுநல் லெண்ணெய்ப் படியொன்று பாகில்சேரு, ஊடவே சற்கமரை பொடிதான்சேரேஒன்றுசுத்திசெய்து காசாலைச்சாற்றில், ஆடவே

சாமமொன்று வறுப்புச்சாம மப்படியே மூன்றுதிர மடங்கச்செய்யே. (உகச)

செய்யடாபொடிபண்ணிவைத்துக்கொண்டு திரிகடுகுநாகமொடுதேவதாரம், வையடாஇலவங்கப் பட்டையோமம் வாய்விளங்கமேலமிலவங்கப்பத்திரி, மெய்யடாசரியசீரகமிந்துப்பு மிக்கசீரகந்தேசாவரத்திேனாடு, பையடாதிரிபலையும் வகையொன்றுக்குப் பலமொன்று பொடிபண்ணிப்பாலில்தூவே. (உகரு)

தூவியடிபற்றுமல்கிண்டிக்கிண்டித் துலங்குபதமெழுகாணலிறக்கியாற்று, தாவிவிடுதேன்படிதா னென்றுசேர்த்துச் சாரித்துப்பீங்கானிலடைத்துக்கொண்டு, ஆவலுடனந்திச்சந்திதான்றிக்காயினளவுண்ணத்தீரும்ரோபறைபக்கேளு, நாவியடிவீக்கநீர்க்கோவையோடு நாடாதுபெருவீக்கங்கிராணிபாண்டே. (உகசு)

பாண்டுடனேவிஷபாகஞ்சோகைகுன்மம் பாழானபடிவீக்கம்தடிவீக்கம்போம், வேண்டுடனேகாமாலையுப்புசங்கள் மிகுபித்தவாதமொடுசெய்பாண்டெல்லாம், மூண்டுடனே தீருமடாமோசமில்லைமூலத்தின்ரத்தமொடு மூலப்பாண்டு, பூண்டுடனே தீருமிதுபொய்யென்னுதே புளிகசப்புமாற்றிவிடும்புனிதமாமே. (உகஎ)

நெல்லிமுள்ளிலேகியம்.

புனிதமென்றநெல்லி முள்ளிலேகியத்தைப் புகலுவேனெல்லிமுள்ளிபலமிருபதாகும், குனிதமென்றஆற்றுநீர் படியெண்ணன்குகுறுக்கியேநாலுபடிவடித்துக்கொண்டு, வனிதமென்றசர்க்கரையுமபலமிருபத்தைந்து மாட்டியேபாகுவரும் பருவந்தன்னில், கனிதமென்றஅதிமதுரங்கூகைநீறுங் காணுமுந்திரிகைப்பழந்தான் கருதிடாயே. (உகஅ)

கருதியேவகைக்கிரண்டுபலமதாகக் கனத்தபேரித்தனுடுதிப்பிலியுங்கேளு, விருதினுடுவகையொன்றுபலமூன்றப்பா மெல்லியதாய்ப்பொடிபண்ணிபாகில்தூவு, பெருதிவிடு தேன்படிதானரையுங்கூட்டிப் பேசாதேகிண்டியெடுபுன்னைக்காய்போல், அருந்திடுநீயந்திசந்திதீரும்ரோய்கே ளப்பனேவாதபித்தமகலுந்தானே. ()

அகலுமேகாமாலைபித்தபாண்டு அளர்ச்சியுடன் வலட்சிதிமிர்வாய்வுசோகை. புகலுவேனீர்ச்சுருக்குப்பித்தகுன்மம் போகுமேயுடம்பெரிவு போகுங்கண்டாய் இகலுமேபுளியோடுபுகையுந்தள்ளு

மிருபதுநாட் கொள்ளவெல்லாவிடருந்தீரும், சகலமேபுராணிதன க்கபசாரங்கள் தான்செய்தால் தீருந்தானே. (உ௨௦)

சற்பங்கிவில்லாதிலேகியம்.

தானேகேள்சற்பங்கிவில்லாதியென்று சயப்பாண்டுகாமாலைகா சர்தீரா, மானேகேள்வில்வவேர்ப்பட்டைதள்ளி மையமுதிஞ்சங் குமுக்காவேளேபின்வேர், தேனேகேள்பலமறுபதெடுத்துக்கொண் டுசிற்றுமுட்டி பலம்பத்து சித்திரமூலங், கானேவாள்முள்ளிவேர் முதியார்கூந்தல் கண்டங்கத்திரிவேருஞ்சிந்திற்றண்டே. (உ௨க)

சிந்திவெள்ளைச்சாரணைப்பொன் முசுட்டைவேருஞ் சிறுதேக் குநன்னாரிவிலாமிச்சம்வேர், சேர்ந்துதம்பி வகைவகைக்குப்பலந் தானைந்து சீர்காட்டுமல்லிகைவேர்பலந்தான்ரண்டு, பாந்தமுடனறு க்கியிடிபாண்டத்திட்டுப் பாணிமுடிமுப்பத்திரண்டு பரிவாய்விட்டு காந்தஅனல்விட்டெரித்துப்படியெட்டாக்கிக் கிழாயத்தைவடிகட் டித்தாளிற்சேறே. (உ௨உ)

தாளியின்சர்க்கரைப்பலந்தான்முப்பதிட்டுத் தனைக்குறுக்கிப் பாகாக்கிசற்கங்கேளு, மாளிகேளாய்பொடி யிருப்புக்கிட்டமிரண்டு ம் வகையிரண்டுபலமாகவாங்கிக்கொண்டு, கேளுமிதைச்சுத்திசெய் துகரப்பான்சாற்றிற் செடியாகவரைத்திடுவாய்சாமமொன்று, தா ளிதனைசாற்றிலிட்டுக்கலக்கியோட்டில் சோதிநீர்மாகுமடடுமவறுத திடாயே. (உ௨௩)

வறுத்திடுதான்பொடிசெய்துவைத்துக்கொண்டு மைந்தனேதி ரிகடுகுலவங்கப்பட்டை, கறுத்தகருஞ்சீரகமுஞ்சிறுநாகப்பூ கண்ட திப்பிலியரத்தைசித்திரமூலம், சிறுத்ததொருகுராசாணி கொத்து மல்லிசெவியுஞ் சீரகமோமங்கிராம்புகோஷ்டப், குறித்ததாளிசப் பத்திரியிந்துபேலங் குலக்கனியும்பத்திரியுங் குதைபாதென்னே.()

என்னவிந்தவகையொன்று விராகனெட்டு எடுத்துவடிகட்டிநீ பாகில்தூவு, தன்னையடிபத்தாமல்கிண்டிநீயுந் தான்மெழுகுபதமா னலிறக்கியாற்றிச், சின்னமில்லையரைப்படிதேன் விட்டுக்கிண்டித் திண்ணவேபந்திசந்திதீரும்நோய்கேள், மனனதந்தசந்தசயபாண் டுவாதவாய்வுகாமாலைசோகையோடு காசப்போமே. (உ௨௫)

போமப்பாபித்தமொடுவாந்திவிக்கல் பொல்லாதமேகமொடு சோகரோகம், நாமப்பாநடுக்கலுடன் வாந்திதானும்நாசிகாபீடமொ

டுசூரமார்ந்தைகூடத், தாமடாவியாதியெல்லாந்தவிர்க்கும்பாருசங்கற்பம் புளியுடனேபுகையிலையுந்தள்ளு ஓமடாபத்தியந்தானில்லாவிட்டா லுற்றபிணிதீராது வுண்மைதானே, (௨௨௬)

## வலிக்குநசியம்.

உண்மையாம்வலிப்பதுதான் பனிரண்டுக்கு முத்தமனேநசியமொன்றுவுரைக்கக்கேளு, வெண்மையென்றவெள்ளுள்ளியிலுப்பைக்கட்டி மிருவசம்புஅவுரியிலைசாறுங்கூட்டி, வண்மையுடனே மூநாளந்திசந்தி மைந்தனேநசியஞ்செய்விட்டெல்லாம்போம், தண்மையாமுருங்கைவேர்பரஞ்சிதானுந் தனிமுலைப்பால்சேர்த்துவிட்டால் சன்னிபோமே. (௨௨௭)

## சண்டமாருதமை.

சன்னியொடுசிலேற்பனங்கள்சூலைவாய்வு தானதிரசண்டமாருதமையைக்கேளு, பன்னுரசக்கர்ப்பூரலிங்கம்வீரம் பரிவானகெந்தியொடுதாளகமுஞ்சிலைபு,முன்னதனைச்சுத்திசெய்துவைத்துக்கொண்டு முழுகவிடுஉன்னும்பால்ரவிபில்வைத்து. குன்னியதுவற்றவற்றமேற்பால்விட்டுக் கொடுரவியேழுநாள்வைத்துவாங்கே, (௨௨௮)

வாங்கியேயெட்டியின்மரத்தின்பாலை வலுவாகமேல்பூசிரவியிற்போடு, தேங்கியேமூன்றுதினஞ்சென்றபின்பு தீயிலேவாட்டியெடுகடிகைரண்டு, ஒங்கியேவில்வக்காய்நறுக்கியிட்டு உத்தமனேகுழித்தயிலமாகவாங்கி, தாங்கியேசுருக்கிடுவாய்நாலுசாமம் தப்பாமல்வகையொனறுகழஞ்சியொன்றே. (௨௨௯)

ஒன்றுகரிறுத்தப்பாகல்வத்திட்டு உத்தமனேநாலுமதுமுக்கழஞ்சு, குன்றுமல்திரிகடுகுவகையொன்றுக்குக் கூட்டுவாய்முக்கழஞ்சு கூட்டியாட்டு, சென்றுஐங்கோலத்தயிலம்விட்டுச் சேர்த்தரைக்கநால்சாமமெழுகாம்பாரு, நின்றுடத்தேன்விட்டுச்சாமமாட்டிநீகொம்புச்சிமிளதனி யிடைத்துக்கொள்ளே. (௨௩௦)

கொள்ளடாமண்டலந்தான் வாதமொடுசன்னி கொடியசுரஞ்சூலையொடுஒடிப்போகும், அள்ளடாஅரையாப்புகிரந்திகுஷ்ட மண்டலத்தில்பிளவைப்புத்துப்பவித்திரங்கள், மெள்ளடாமனுபானமறிந்துசெய்தால் விரட்டுமடாகுன்மியிடைவேகமெத்த,தள்ளடாதினந்தோறுமந்திசந்தி தான்தீர்ந்துநோயனைத்துந்தீருந்தானே. (௨௩௧)

தீருந்தான்புகையோடுபுளியுந்தள்ளு தேகபலநோயறிந்துகை யையூட்டு, ஆருந்தான்பத்தியமேயிருக்காவிட்டா லவர்பிணிகள்தீரா துவறிந்துகொள்ளு, கோருந்தான்குருவினிடபதத்தைநித்தங் குறி த்துநீவணங்குவினைகுடிபோம்பாரு, சாருந்தான்கர்மத்தைத்தள்ளி நீயும்தர்மத்துக் குடம்பெடுத்துச்சாற்றல்நன்றே. (உருஉ)

சுரத்திற்குமிருத்துவாதிக்குளிகை.

நானென்றமிருத்துவாதிகுளிகைதன்னை நவிலக்கேளரிதாரம்வி ராகனென்று, மானென்றுகெந்திபொன்றுதுரிசுதுக்க மாணுக்காள் நாபியொடுவகைமூன்றும்பாரு, ஆனென்றவிராகனிடைதூக்கிக்கொ ண்டு அப்பனேபாகினிற்சாறுவிட்டு, சேனென்றபயறளவுகுளிகை செய்து திறமாகநிழலுலர்த்தி வைத்துக்கொள்ளே. (உருரு)

மகாமிருத்துவாதிக்குளிகை.

கொள்ளவேயனுபானமறிந்துசெய்தால் குடிபோகுஞ்சகலசுர க்குடிலமெல்லாம், விள்ளவேமகாமிருத்துவாதிதன்னைவிளம்புறேன் வெள்ளாட்டுப்பிச்சினோடு, மெள்ளவேகருநாபிவிராகனெடையாறு மேவுகிரிகடுகுடனேசாதிலிங்கம், அள்ளவேதிரிபலையுங்கடுகுரோக ணி யப்பனேவகையொன்று விராகனிடையாமே (உருச)

இடையாகநிறுத்துநீகல்வத்திட்டு எலுமிச்சம்பழச்சாற்று விர ண்டுசாமம், முடைதீரவுரைத்துமுடக்கொற்றான்வித்து முதல்மட்டு முண்டைநிழலுலர்த்திக்கொண்டு, நடையாகவனுபானமறிந்துசெய் தால் நடுக்கல்குளிர்சுரங்கள்முதல்தீரும்தீரும், விடையேறுமீசனன் றுமைக்குச்சொன்னார் மேதினியில்மனிதருக்காய்விண்டிட்டோமே

சீதசுராங்கிஷக்குளிகை.

விண்டிடவேசீதசுராங்கிஷத்தைமைந்தா வெள்ளைப்பாஷாண மிடைவிராகனறு, உண்டிடவேசாதிலிங்கம்விராகனிடைநாலு வூமத் தம்வேறதனைக்கியாழம்வைத்து, கண்டிடவேசாமமொன்றுமைபோ லாட்டிக் கருதிசிறுபயறளவுஉண்டைசெய்து கொண்டிடவேபஞ்ச தாரையிலோருண்டை கொடுத்திடவே சுரமனைத்தும் குடிபோம் பாரே. (உருசு)

குடிபோகும்பத்தியங்கள்பசுவின்பாலுங் கொள்ளன்னஞ்சீனி யிட்டுக்குடிக்கச்சொல்லு, அடவாகசீதசுரயனைத்தும்போகுமறையு கிறேனரிதாரக்குளிகைதன்னை திடமாருமரிதார மிடையேயைந்து சேரடாதுரிசிரண்டுசீலைதன்னில், இடமாகுந்தோளாந்திரமாகக்கட் டியிருகலசந்தனிற்சுன்னக் கல்லும்போடே. (௨௩௭)

போடுநீஅமுரிவிட்டுநீற்றியாற்றிப் புகழாகமூன்றுதிரம்கழுவி க்காய்ந்தால், தேடுநீசற்சுன்னமிடைதானுலு திறமானநாபியிடை யொன்றுபோடு, நாடுநீகற்றாழஞ்சோற்றையிட்டு நாழிகைதான்மூ ன்றரைத்துவுளுந்துபோல்வாடுநீ, வுருட்டிநிழலுலர்த்திக்கொண்டு வட்டோடுதன்னிலிட்டுமேலுமூடே. (௨௩௮)

மேலோடுயிருசீலைமண்ணுஞ்செய்து மேலுலர்த்திக்குக்கிடமா ய்ப்புடமிட்டாறி, சேலோடுகல்வத்திலிட்டுநாபி சேரப்பாவிராகனி டையிஞ்சிச்சாற்றில், மாலோடுதானரைப்பாய்கடிகைரண்டுபாபச் சைப்பயிரளவுஉண்டைசெய்து, நாலோடுநிழலுலர்த்தி வைத்துக் கொண்டு நலமானசீரகத்தை வறுத்திடாயே. (௨௩௯)

வறுத்துடனேபொடிப்பண்ணிகுளிகையாறு வைத்துநீதேன் விட்டுஅரைத்துக்கொண்டு, திறத்துடனேமூன்றுநா ளாறுநேரஞ் செலுத்தினல்சீதசுரமனைத்தும்போகு, மறிந்திடுமேவிடாதசுரமாற லெல்லாமைந்தனே விஷசுரமோமாறுங்கண்டாய், வெறுத்துடனே பத்தியந்தான்பசுவின்பாலாம்வென்னீருந்துவரையுடபருப்பாமே.

பருப்பாகும்வறுத்தவுப்புச்சற்றேகூட்டு பாங்கானஅரைக்கீ ரைமுருங்கைப்பிஞ்சாம், விரும்பாகும்வழுதலைப்பிஞ் சவரைப்பிஞ் சாம் வெறுத்திடுவாய்புளிபுகையுமாங்கிஷங்கள், நெருப்பாகும்பூண் டுள்ளிகடுகுமாகா நீராட்டிப்பத்தியத்தைநிறுத்திப்போடு, திருப் பாகும்பத்தியந்தானில்லாவிட்டால்தீராதுசொல்லிவிட்டேன் திறந் தான்காணே. (௨௪௧)

குளிர்சுரத்திற்கு அரிதாரக்குளிகை,

திறமானகுளிர்சுரங்காளனைத்துந்தீரச் செப்புகிறேனரிதாரக் குளிகையொன்று, அறமானஅரிதேவிசுத்திபண்ணி அப்பனேகழ ஞ்சிரண்டுகல்வத்திட்டு, திறமானகற்சுன்னம்கழஞ்சிநாலு நிறுத்திடு வாய்க்கனகமென்றமிளகுநாலு, உறமானகோழிமுட்டைவெண்கரு விலாட்டி உத்தமனேதாதளங்கா யுண்டைசெய்யே. (௨௪௨)

உண்டைபண்ணிநிழலுலர்த்திவைத்துக்கொண்டு யுத்தமனேயனுபானமறிந்துசெய்தால், கொண்டதொருசுரமனைத்துங்குடிபோம்பாரு கூட்டாதேபுகைபுளிமோர்நெய்யுந்தள்ளு, கண்டபலத்தீனிதனக்காசையானால் கடுகவேதோஷமொடுசன்னியுண்டாம், அண்டரொடுமுனிவர்பணியரனார்முன்னு னம்பிகையாள் தனக்கருளுமருளுமாமே. (௨௪௩)

சகலசுரத்திற்குமாத்திரை.

அருளுவோஞ்சகலசுரந்தீரவென்றா லரிதாரவெள்ளை மாத்திரைதானென்பார், வெருளவே அரிதாரம்விராகனைந்து மேவானதுரிசிரண்டுநாபியொன்று, பிரளவேகற்சுன்னம்விராகனிடைநாலுபேருணகற்றாழஞ்சாற்றிலாட்டி, மருளவேறிவரைப்போலுண்டைசெய்து மைந்தனேநிழலுலர்த்தி வகையைக்கேளே. (௨௪௪)

வகைகேளுமோட்டிலிட்டுவோடுமூடி மண்செய்துகாடையென்றபுடத்தைப்போடு, தகைகேளுஆறவிட்டெடுத்துக்கொண்டு சுகமாகச்சீரகம்விராகனிடைமூன்று, பகைகேளுவறுத்துநீபொடிதான்செய்துபாய்ச்சுவாய்திரலாறுகுளிகைதன்னை, முகமாறத்தேன்விட்டுமைபோலாட்டி மூன்றுநாளந்திசந்தியேய்ந்திடாயே. (௨௪௫)

நாசிகாமரணம்.

எய்ந்திடவேவாதபித்தத்தாலே வந்தயிடங்கெட்டமாறலென்றசுரங்களெல்லாம், மாய்ந்திடவேவந்தசுரமெல்லாந்தீரு மாறலுக்குநாசிகாபரணங்கேளு, காய்ந்திடவேகாவியொடுதுரிசிகேராய்க் கல்வத்தில்பொடிசெய்துவைத்துக்கொண்டு, சாந்திடவேபணவிடைதான் மூக்கிலூதுசகலசுரமாறலெல்லாந்தரியாதென்னே. (௨௪௬)

தரியாதுநாலுநாள்மாறலோடு தான்மூன்றுமாறலெல்லாஞ்சமுத்திரமேபுக்கும், பிரியாதசன்னிவிஷசுரத்துக்கப்பா போனவேளைவேற்சுரசம்வாங்கி, சரியாகபிஞ்சியதின்சுரசஞ்சேர்த்து தானைதிரிகடுகுப்பொடியுங்கூட்டி, உரியாகத் தேன்கழஞ்சிவிட்டுப்பாய்ந்தாலோடுமே சன்னிவிஷச்சுரமும்பாரே. (௨௪௭)

திருநேத்திரமை.

சுரத்தின்மேல்வருவாதத் தோஷத்தோடுசுரதோஷந்திரிதோஷம்பரமதோஷம், உருத்துவருந்தோஷமெல்லாமொழிவதற்கு யுரைக்கிறேன்திருநேத்ரமைதானப்பா, விரித்தசடையான்விந்துவிராகனிடைரண்டு வெடிதேங்காயோடுசுட்டக் கரிதான்ரண்டு, கருத்தகடல்வித்ததனைச்சுத்திசெய்து கனக்கயிடுவிராகனொன்று கல்வத்தாட்டே. (௨௪௮)

ஆட்டையிலேபனைவெல்லம்விராகனிடைரண்டு அப்பனேதேங்
காய்ப்பால்விட்டுஆட்டி, சூட்டியல்லோமையெடுத்துசிமிளில்வைத்
துசுகமாகப்பணவிடைதான்நாக்கில்தேய்த்து, நாட்டையிலேவென்
னீர்சற்றீய்ந்தாயாகில் நலமாகத்தீரும்நோய்நவிலக்கேளு, ஓட்டுமே
சுரதோஷம்விக்கல்வாந்தி ஓடுமேமேல்மூச்சுவிக்கல்போமே. (உசகூ)

போமடாமதிமயக்கம்விஷங்கள்பித்தம் பொல்லாததிரிதோஷம்
விருமதோஷம், நாமடாசிலேட்டுமமுஞ்சருவதோஷம் நஞ்சுதின்ற
தோஷமுடனுதிரதோஷம், ஆமடாநஞ்சுவிஷமென்றதெல்லாமகனு
மேசுகசன்னிநேரஷத்தோடு, ஓமடாமலக்கட்டுந்தீருந்தீருமுறைக்க
ரனுருரைத்தபடியுண்மைதானே, (உருo)

மகாசுராங்கிஷக்குளிகை.

உண்மைமகாசுராங்கிஷத்தின்குளிகைகேளு உமைவிந்துரசம்
நாபிவெள்ளைதானும்,வன்மையென்றபொன்னூமத்தைவித்தினோடு
வகைக்குரண்டுகாசிடைதான்கல்வத்திட்டு, தன்மையதாமிளகளவுங்
கழஞ்சிப்பத்து தான்சேர்த்துயூமத்தன்சாற்றலாட்டி,வெண்மைதா
ய்க்குன்றியிடைக்குளிகைகட்டி மிக்கநிழலுலர்த்திவைத்துவிளங்கக்
கேளே. (உருக)

கேள்சன்னிவாதமொடுசீதசுரம்வந்தால் கெடியானயிஞ்சிரசந்
தன்னிலூட்டு,தாள்பித்தசுரம்விஷமாஞ்சுரத்துக்கெல்லாஞ்சம்பழத்
தின்சாற்றிலிடசுத்தசுரந்தீரும், வாள்வென்றரன்னமுங்கொள்மற்
றொன்றாகமைந்தனேவறுத்துப்புச்சற்றேகூட்டு, சூள்கின்றசுரமனை
த்துந்தீரவென்றால் சுராங்கிஷந்தானின்னமொன்றுசொல்லக்கேளே.

மேற்படிசுரத்துக்கெல்லாம்.

சொல்லுவேன்ரசம்பச்சைநாபியோடு துடர்கெந்தியரிதாரம்
லிங்கம்வாளம், வெல்லுமேவன்வெண்காரந்திருகடிகினோடுவிளங்குதி
ருபலவகைக்குக்கழஞ்சியொன்று, சொல்லவேகருப்பன்சாற்விட்டு
ஆட்டிசிறுபயறினளவுருட்டிநிழலுலர்த்தி, அல்லவேசிமிளில்வைத்
துசுரத்துக்கெல்லாமனுபானஞ்சொலுகிறேனறிந்துகொள்ளே. ()

அறிந்துசுரதொந்தங்களெல்லாங்கண்டு அதிசீதசன்னிசுரமள
வும்பார்த்து, முறிந்ததொருமுலைப்பாலிஞ்சிச்சாற்றில்மூலிகையா
ஞ்பிட்டுகளில்துளசிச்சாற்றில், செறிந்ததொருதிருபலையின் கிழா

யந்தன்னில் சீரகத்தில்திரிகடுகுகியாழமதாய், நிறைந்தொருதசை மூலம்பஞ்சைமூலம் நேரறிந்துகுளிகையிடநில்லாதன்றே. (உருச)

இங்குளாதிக்குளிகை.

நில்லாகுவெந்நீருமன்னங்கொள்ள நிலைகெட்டச்சுரமனைத்தும் நீங்கும்பாரு, வல்லாதுசுரத்துக்குஇங்குளாதி மாத்திரையேசொல்லுகிறேன்மகிழ்ந்துகேளு, சொல்லாதலோகபற்பம்கற்பூரபற்பம்தேவிவிந்துசிவன்விந்து கடுகுரோகணி,பொல்லாத பேய்ச்சுரையின்வரையின்வாளம் பொன்னூமத்தைவேருடனேசிவிகைவேறே, ()

வேறப்பாவெள்ளைக்காவளையின்வேரும் மேலானதிரிகடுகுபச்சைநாபி, ஆரப்பாமால்தேவிவெள்ளைதானுமரிதகியும்வகைபொன்றுகழஞ்சிரண்டு,பாறப்பாகல்வத்திலிட்டுஆட்டப்பா பாங்கானநாகவல்லிசாற்றிலேழ்நாள், சேறப்பாமிளகுதாள் கழஞ்செண்ணுங்கு சேர்த்துமிளவெந்நீராலரைத்துக்கட்டே. (உருரு)

கட்டுவாய்மிளகளவுயுண்டைகட்டிக் கனமாகநிழலுலர்த்தியிளம்வெந்நீரில், அட்டியில்லாதொகுளிகையீய்ந்தாயானு லறுபத்துநாலுசுரமகன்றேபோகும்,விட்டிடுமேயொருதிரந்தான்பேதியானால் வெந்நீருமன்னமுந்தான்கொள்ளச்சொல்லு, தட்டிவிடும்பகலுறக்கம்வேண்டாஞ்சொன்னேன் சாபமிட்டுச்செய்யப்பா சாற்றொண்ணாதே. (உருஎ)

சுண்ணனதிரிதோஷசுரத்திறேடு ஒடுங்காதவிஷச்சுரங்களேழுந்தீரும், பெண்ணோர்கள்சுகசன்னிசன்னிதோஷம் பெருஞ்சன்னிவாதசுரம்பிரலாபங்கள், எண்ணுபிசுரகனைத்துமிவலையிலலை எளிதல்லசெய்துபாரிடுக்கந்தீரும், கண்ணாலேதிரிபுரத்தையெரித்தயீசன் கருத்தறித்தறிந்துதேவிசொல்லக்கண்டிட்டேனே. (உருஅ)

மகாயிங்குளாதிக்குளிகை.

கண்டபடியிங்குளாதிக்குளிகையொன்று காணுநீஜாதிலிங்கம் பச்சைநாபி, விண்டபடியிந்துப்புசூதங்கெந்தி வெண்காரந்திரிகடுகு கடுக்காய்கூட்டி, கொண்டபடிசிவதை யெட்டிவிரையினேடு கொடிவேலி வேற்பட்டைத்தூளுக்கூட்டு, உண்டபடியிவையெலலாம்சுமணதாக உத்தமனேசதுரக்கள்ளிப்பால்விட்டாட்டே. (உருகூ)

ஆட்டியேமிளகுபோலுண்டைசெய்து அப்பனேநிழலுலர்த்தி வைத்துக் கொண்டு கூட்டியே யொருகுளிகை யிளவெந்நீ

ரில் கொடுத்திடவேசுரங்களதுபத்துநாளும், கேட்டியோயாம்பலென்றசூலைதீருங் கேடுகெட்டசுரஞ்சூலைநடிவிட்டோடும், நாட்டியேயன்னமொர்டுவெந்நீருந்தான் நல்கிடுவாய்மற்றொன்றும் நவிலொண்ணாதே. (உகூ0)

கெடிசூரணக்குளிகை.

நவிலவேகெடிசூரணக் குளிகையொன்று ரசங்கெந்திகருநாபி வெட்டிக்கொட்டை, கவிலேயிருவியக்கிராகாரங்கூட்டிக் கனக் கஞ்சதாமரைகழஞ்சுவீதம், நுவலுவோம்வெள்ளாட்டுப்பிச்சிலோர் நாள் நொறுக்கிவிட்டுவேறவைத்துக்கல்வத்திட்டு, குவிமூலையாமிளகளவுந்தண்ணீர்விட்டுக் குமரவேசாமமரைத்துருட்டிக்கொள்ளே.

உருட்டுவதுவெந்தயம்போலுருட்டிக்கொண்டு உலர்ந்தசீரகந் தன்னிலூட்டிணுக்கால், வெருட்டுமுடல்வேர்வைமிகும் போர்வை போர்த்தி வெருளாதவேர்வைதான்மெத்தக்காணும், மருட்சுரமிரண்டுநாழிகையில்திரு மக்களேபத்தியந்தான்மோருஞ்சோறும், புரட்டுவயிற்றுளைவுகண்டால்அவிரிருள்ளி பேசாதேயனவில்வைத்துப்பெருகிலீயே. (உகூஉ)

நாளையென்பான் நாயகன்குளிகை.

பெருகவருஞ்சுரமெல்லாந்தீரவேண்டும் பேசுகிறேன்நாளையென்பான்நாயகத்தை, உருகிவரும்வெள்ளைப்பாஷாணமைந்து உற்ற கொத்துமல்லிபிடசுரசத்திட்டுச், சருகிவருமூன்றுநாள்கல்வத்திட்டுத் தானருக்கன்கரிநாலுதன்னிற்றுக்கு, பருகவருபச்சுரிசிதவிடு நாலு பாச்சியேகொத்துமல்லிக்கியாழத்தாட்டே. (உகூங)

ஆட்டுவாயொருசாமம்பயறுபோல அப்பனேயுருட்டிநிழலுலர்த்திக்கொண்டு, சூட்டியேயொருகுளிகைநாகவல்லி சுரசத்திலிடச் சகலசுரமுந்தீரும், வாட்டியேயன்னமொடுவெந்நீராகு மற்றொன்று மாகாதுமைந்தாபாரு, நாட்டுவேனின்னமொருசிகிச்சையைபா நாளென்பான்நாயகத்தை நவிலொண்ணாதே. (உகூச)

இதுவுமது.

ஒண்ணுநரந்தையதுபெரிதாய்ப்பார்த்து யுத்தமனேயெடுத்து வைத்துமாவின்தேவி, நண்ணுதுவிராகனோந்துவிழுத்தெடுத்து நல் வாயைத்திறந்தார்க்குள்நறுக்கியிட்டு, மண்ணால்நாற்சீலைசெய்து குப்பைமேட்டில் வரும்பசுவின்கிடையரண்டிலொன்றிலாதல், எண்ணுது குழிகெல்லிவைத்துமூடி யென்மக்காள்மண்டலஞ்சென்றெடுத்திடாயே. (உகூரு)

எடுத்திடுநீமாங்கிஷமும்தாரம்ரண்டு எளிதல்லபாகையிலைச்சா
ற்றாலாட்டி, கடுத்திடுநீசாயமொன்றுசிறுபயறுபோலே சுட்டியுண்
டைநிழலுலர்த்தி வைத்துகொண்டுகொடுத்திடுநீயிளகைந்துகுளிகை
யொன்று கொடுத்துமெள்ளவிழுங்கச்சொல்லாறுநேரம், நடுத்திடு
மேசுரமொன்றதனைத்துமோட நாயகத்தின்பலமறிந்துயான்சொன்
னேனே. (உசுசு)

சொன்னேனுன்புழுங்கரிசிகஞ்சிகூட்டு தொடாதேபுளிபுகை
யழுப்புமாகா, நின்றுனேஎட்டுநாள்மட்டுஞ்சொன்னே னிடாகலு
மொன்பதாநாளில்மூழ்கு, மூன்றுமேபத்தியங்கள்பிசகாவண்ண மு
ன்சொல்லிப்பின்புநீமருந்தையூட்டு, மன்னுகேள்பித்தங்கள் சுரங்
கள்தீர வகுத்திடுவேனேலாதிக்குளிகைதானே. (உசுஎ)

ஏலாதிக் குளிகை,

தானென்றயேலமதிமதுரஞ்சுக்குச் சாதிக்காய்பொன்மெழுகு
லவங்கப்பட்டை, நானென்றசந்தனமுந்தேவதாரம் நன்னாரிவேரு
டனேமுத்தக்காசு, கோனென்றகோரோசனையுங் கடுகுரோகணியு
ங்கோஷ்டமொடுஇலுப்பைப்பூவிலாமிச்சம்வேர், ஊனென்றமுந்தி
ரிகைபேரீத்தோடு உசர்ந்தசடாமாஞ்சிதிப்பிலியுமாமே. (உசுஅ)

ஆமடாபச்சிலையும்வகையொன்றுக்கு அப்பனேகழஞ்சொன்
றுகல்வத்திட்டு, தாமடாகருப்பன்சாரிளநீர்விட்டுத் தானரைத்துச்
சுண்டக்காயளவதாக, ஓமடாயுருட்டிநிழலுலர்த்திக்கொண்டு உத்
தமனேயிளநீரைவேகவைத்து, போமடாஅந்நீரில்சீனியிட்டுப்பொ
சிக்கவேகுளிகையொன்று போகும்நோயே. (உசுகூ)

நோயேதுபித்தசுரம் பித்தமெல்லாம் துவலவேசத்திவிக்கல்
நொடிக்குட்டீரும், நீயேதுபத்தியந்தானரையுப்பிட்டு நேர்துவரை
ப்பருப்புடனேயன்னங்கொள்ளு, தாயேதுபசுவின்பால் சீனியிட்
டுத்தான்கொள்ளச் சூடெல்லாந் தணியும்பாரு, பேயேதுபயித்திய
மே கொண்டபேர்க்குப் பெருங்கழுதைப்பாலிலிடு பித்தம்போமே.

சுரத்திற்கு அஞ்சனமை

பித்துநின்றசுரத்திற்கஞ்சனமைகேளு [illegible]பா[illegible]னசிந்திற்பூ[illegible]ழஞ்
சிரண்டு, இத்துடனேபழச்சாற்றிட்டரைத்துநீயுப் இரும்புமண்வெ
டிப்புரமுந்தன்னிற்பூசி, மத்துடனேநல்லெண்ணெய்விளக்குஏற்றி
மண்வெட்டிப்புரத்திலந்தமையையேற்றி, [illegible]வித்து[illegible]னேமுன்றடவும
ருந்துமையும் வெண்கலத்தால்கவிழ்த்துமையைமேலுங்கேளே. ()

மேலிட்டுத்தாம்பூரத்தின் செம்பினாலே விளங்கவேநல்லெண்ணெய்குத்தியிட்டு, மாலிட்டசாமந்தானனபின்பு மாட்டுகொம்புசிமிளில்மைவாங்கிவைத்து, காலிட்டநாள்மூன்றுரண்டாமாறல்கண்குளிருஞ்சுரங்களுக்குக் கண்ணிற்சீட்டு, வேலிட்டவிழிமாமீதபணவிடைமையப்பா விரைந்தோடும்பலசுரங்களெல்லாந்தானே. (உஎஉ)

வாதத்திற்குப்பிட்டு.

தானென்றவாதத்தின்கடுப்புக்கெல்லாஞ் சாற்றுகிறேன்பிட்டொன்றுதன்னைக்கேளு, பானென்றமஞ்சணத்தி யிலைதானப்பா பலமிருபதிட்டுநீபாண்டத்திட்டு, வேனென்றவெள்ளமதுபதக்குவிட்டு வேடுகட்டியவிப்பேற்றியனலைமூட்டு, கானென்றகருங்குருவைப்பச்சைமாவாய்க் கால்படிமுன்னீர்தெளித்துப்பிசறிவையே ()

வைத்துநீமேல்மூடிச்சமைந்துவாங்கி மைர்தனேயதைமறிந்தவகையைச்சொல்வேன், எத்துநீபனவெல்லஞ்சற்றேபிட்டு சுட்டுநாளருந்தவெல்லாவாதந்தீரும், தைத்துநீநோயறிந்துண்ணச்சொல்லு சாடன்விளிபுகையுந்தள்ளச்சொல்லு, நித்துநீயுதையத்தில்பிட்டுதின்னு நினைவாகப்பத்தாநாள் முழுகச்சொல்லே. (உஎச)

மகாநனலாலச்சூரணம் அ0-வாதத்திற்கும்.

சொல்லுவேனலாற்சூரணந்தானப்பா துடியானவாதமெல்லாந்தொலைந்துபோகும், சொல்லுமேகொடிவேலி புங்கன்வேரும் கேளடாஆமிலியம்வேருங்கூட, நில்லுமேயதின்வேருபட்டைவாங்கி நிழலுலர்த்திபொருபலமாய்நிறுத்திவாங்கி, வெல்லுவேனிடித்துச்சூரணமேசெய்து மேல்மருந்துவாய்விளங்கக்கடுக்காய்சுக்கே ()

சுக்குதிப்பிலிகடுகுகரியசீரஞ் சுகமாகவகைக்குஅரைப்பலமேகூட்டு, மிக்கவேதுயபொடிசெய்துகொண்டு மேற்பொடியுமுன்பொடியுங்கலந்துபின்பு, தக்கவொருகடியதுதான்தேனிற்கொள்ள தணியாதவாயுவொடுவாதந்தீரும், நீக்குமொடுமண்டலத்திற்பச்சைவாதம் நீர்ச்சன்னிவாதமுதல் நில்லாதுகாணே. (உஎசு)

மகாகனலுருவச் சூரணம்.

காடாணசூலைபதினெட்டுந்தீரக் கனலுருவச்சூரணத்தைக்கரு துக்கேளு, வாணடாகருங்குருவைச்சம்பாவான வரிசியதுபலமிரண் டுவூறப்போட்டு, வூணடாகழற்சிநொச்சிமுருங்கைமூன்று முயர் கொழுந்துபலமுக்கால்வரைக்குப்போட்டு, நாணடாமுன்னரிசிமரு ந்துமிட்டு ரசங்கழஞ்சியொன்றரையுங்கூடத்தாக்கே. (உஎஎ)

கூடவேசிவன்வேம்பு சூரணமேசெய்துகூட்டு கழஞ்சொன்ற ரைவெற்றிலைத்தானேந்து, நீடவேயுரலிலிட்டுஇடிமைபோலே நீயெ டுத்துப்பொடியாக்கிவைத்துக்கொண்டு, ஆடவேவெருகடியாழாக் குவெந்நீரதிற்கொடுக்க ஏழுபொழுதப்பாசேளு, நாடவேயாருநா ளந்திசந்திநாளெட்டுக்குளிர்ந்தசலந் திருக்கச்சொல்லே. (உஎஅ)

இருக்கவேயேரண்டத்தெண்ணெய்தேய்த்து இதமாகவொண் றைவிட்டொருநாள்மூள்கு, செருக்கவேயிருபதுநாட்கழிந்தபின்பு சேருநீசோழியிடவிறைச்சிகூட்டு, உருக்கவேபுளியுப்புகசப்புத்தள் ளுஉத்தமனே முருங்கைக்காயிலையுமாகும், நெருக்கவேநெத்திலியு மவரைப்பிஞ்சும் நீகூட்டச்சொல்லுவாய்மாதமொன்றே. (உஎகூ)

கருங்குருவையரிசிச்சூரணம்.

மாதமொன்றில் நல்லெண்ணெய்முழுகலாகு மகத்தானசூலை யொடுகிரந்திதீரும், பேதமன்றியின்னமொருசூரணந்தான் பேசுகி றேன்கருங்கருவைப்பச்சையாக, வேதமென்றுபடியரிகால்தானப் பா வெற்றிலையுஞ்சாற்றிலிட்டிரவும்மட்டும், நீதமென்றமறுநாளிற் சாறிருந்துநிழலுலர்த்தி மேல்பருதுநிகழ்த்தவோமே. (உஅ௦)

ஓமென்றநல்லமின்னிமுசுமுசுக்கை யோரொன்றுவொருபிகு வெற்றிலைதானெட்டு, நாமென்றநிழலிலிட்டுச்செருக்கநன்றுகச்சூத முக்கழஞ்சுதூக்கி, தாமென்றவெற்றிலைச்சாற்தன்னைவிட்டுத் தான் முறித்துஎல்லாமொன்றுகச்சேர்த்து, ஆமென்றுஇடித்துமைபோல் தூளதாக்கி யுலர்த்திமேல்மருந்துநிகழ்த்துவோமே. (உஅக)

கலசமதுபுதிதாகு மதிலேயிட்டு, கழற்சிக்காய்ப்பிரமாணம்நாளொன்றுக்கு, நிலேபசுவின்தயிர்தன்னில்குழைத்துநன்றாய் நீயுருட்டிக்கொடுபத்தியந்தயிருஞ்சோறும், நலமாகவிருபத்தோர்தினமுந்தானும் நல்காதேபுளிபுகையுந்தூரத்தள்ளு, பிலமாகவுதிரமதுவதிகங்கண்டால் பிரியமுடன்தயிர்வெல்லஞ் சேர்க்கப்போமே. (உஅஉ)

தூரப்போம்ரேண்டந்தெண்ணெய்சேர்த்து சுகமாகுங்குளிர்ந்தசலந்தன்னில்மூழ்கு, பாரிப்போம்பத்திமுழுகப்பாசொன்னேன் பறக்குமடாசூலேபதினெட்டுப்புண்கள், சாரிப்போங்கிரந்திபதினெட்டுந்திருந் தணியாகவாய்வெல்லாந்தான்கெட்டோடும், பூரிப்போமுடம்புரிக்கிப் பிலக்குஞ்சொன்னேன் பேசாதேயுத்தர்களேயின்னங்கேளே. (உஅங)

ஞானம்.

கேளடாகாமத்தால்கெட்டோர்கோடி கிளர்கின்றகோபத்தால்மாண்டார்கோடி, நாளடா ஆணுவத்தாலழிந்தோர்கோடி நலமான தீனியினல்மாய்ந்தோர்கோடி, வேளடாதோஷத்தால்வீழ்ந்தோர்கோடி வீணாகக்கொலைசெய்துசெத்தோர்கோடி, பாளடாநானென்றதெல்லாந்தள்ளிப் பரஞானதத்துவத்தைப்பரிந்துபாரே. ()

பரிந்துபாருனக்குள்ளேபிர்மக்கியானம் பார்த்தாக்கால்தொனுதுபடுகுழியில்வீழ்வாய், திரிந்துபார்த்தாபரங்கள்செடிபூண்டெல்லாஞ் சிவசெந்துவூர்வினங்கள்நடப்பினங்கள், விரிந்துபார்பரப்பினங்கள்கவிழ்வினங்கள் வெருடபாழென்றெண்ணுதேசிவமென்றெண்ணு, சரிந்துபார்நிதானத்தாலறியலாம்பார் சகலசராசரமெல்லாந்தானுய்ப்பாரே. (உஅ௫)

தானுன அண்டசராசரமுந்தானே தாய்பெண்டீர்மக்கள்சுத்தந்தக்கைதானே, ஊனுனஉடலெல்லாந்தனதென்றெண்ணு உயிரெல்லாந்தன்னுயிர்போலெண்ணிக்கொள்ளு, மானுனவிழிமடவார்போகத்தாலே வருகின்றநோயப்பாமயங்கவேண்டாம், தேனுனமொழிமாதர்க்கிச்சைகொண்டால் தேகத்தில்நோய்களெல்லாஞ் சேருந்தானே. (உசுஅ)

திருநேத்திரச்சூரணம்.

சேருகின்றசூலேபலவிரணந்தீர திருநேத்திரசூரணத்தை செப்பக்கேளு, நேருகின்றவெள்ளருகுசிவனர்வேம்பு நெரிசங்குமூன்றுக்கு

மாதிவாரம், சாருகின்றரவியுதைபமாகும்போது தானழியாகன்னி
கைநூல்காப்புக்கட்டி, ஓருகின்ற-அங்-ரங்-இங் - ரங்-உங்-எங்-ரங்-
ஒங்-ரங்-கென்றே. (உஅஎ)

என்றுநீஓஓ்வாயநம-வென்றுதானே யிப்பவேசர்வசாப-நசி
நசியென்று, அன்றுதனில்நூற்றெட்டுதரமேசொல்லி மத்தியான
தனிவேற்பிடிங்கிக்கொண்டு, சென்றுசங்கலி வடவேறைப்பிரித்து
வாங்கி தெளிவாகநிழலுலர்த்திச்சூரணமேசெய்து, நன்றுநீகல்லுற
லிலிடித்துத்தூளாய் நன்றாகவடிகட்டியெடுத்திடாயே. (உஅஅ)

எடுத்திடுவாய்மூர்மருந்துசமனதாக என்மக்காள் புதுகலசந்
தன்னிலிட்டு, கொடுத்திவாயிரவிந ளுதிக்குமுன்னே கோள்நிலையு
ம்அமுர்தமெனும்யோகந்தன்னில், தொடுத்திடுவாய்த்தங்கள்தங்க
ளுசிநீரில் சுரிதிநிலைமுன்பின்னைப் தள்ளச்சொல்லி, அடுத்திடுவாய்
நடுநீர்ளுடாறுமுன்னே அப்பனேவெருகடிசூரணத்தையிட்டே. ()

சூரணத்தையிருபதுநாட்கொள்ளும்போதுசொல்லுவேன்பத்
தியந்தான்பசுவின்பாலாம், பூரணித்தயுப்புடனே பலிசாமபாரம்
போடாதேவெங்காயங்காயமாற்றித், தோரணித்தகோழிதனைச்ச
மைக்கக்கூட்டுத் அவரையுடபருப்புடனேமுருங்கக்காயுங், காரணத்
தே வெள்ளாட்டுப்பாலுமாகும் காற்றுவெயிலாகாதுகருதிக்கொ
ள்ளே.
(உகூ0)

கருதிலொருமுளகுமொருகுமுளத்திநூருங் கண்டதண்ணீராகா
துகருத்தொண்ணுது, விருதுகபந்தீரும்நோய்விளம்பக்கேளு வெடி
சூலைநீர்ச்சூலை வாதச்சூலை,பருதியெனவெறிசூலைத்தண்டிற்சூலைபாரு
ரணச்சூலையொடுகட்டுஞ்சூலை, குருதியெனுஞ்சூலையண்டச்சூலையோ
டு குதிகரட்டிற்சூலையோடுசூலைப்புண்ணே. (உகூக)

புண்ணென்றவரச்சூலைபுதிரச்சூலை புத்தாகுஞ்சூலையொடுகபா
லச்சூலை, தண்ணென்றஅடிநாக்கிற்சூலையோடு தணியாதவாதபித்த
க்கரட்டுச்சூலை, விண்ணென்றஐயத்திற்சூலையுடற்றடுப்பும் விதங்க
ளென்றசூலைமுப்பத்தாறுந்தீரும், எண்ணென்றநாக்கரிக்குங்கிரந்தி
யரிகிரநதியேழு மனிக்கிரந்திமருள்கிரந்திப்போமே. (உகூஉ)

போமப்பாநாசிதின்னுங்கிரந்தியளிகிரந்திப் புண்ணுகும்வாய்
கிரந்திக்கண்டமாலை, நாமப்பாகருங்கிரந்தியோனிப்புத்து கண்டரி
க்குங்கிரந்தியொடுகெர்ப்பத்தின்கிரந்திதானும், வேமப்பாயோனிப்

ண்புகளிப்பூக்கிரந்தி மேல்வாயில்கிரந்திகண்டக்கிரந்தியோடும், ஆமப்பாகருவழிக்குங்கிரந்திலிங்கப்புத்து அத்திக்காய்கிரந்திசெங்கிரந்திப்போமே. (உகரு)

கிரந்தியொடுவிப்புருதிகட்டிப்புண்ணும் கேளப்பாகபாலத்திற்கிரந்திகற்றும், பறந்துவரும்பிளவையொடுகுழிவாழைப்புண்பருபருவாயெழுகின்றபறவைக்கட்டும், எறிந்துவருமொட்டியப்புண்ணெங்பதெல்லாம் ஏகுமேளளிதென்றுயெண்ணாதே, தறிந்துவிடுங்குட்டமெல்லாம்வருஷங்கொள்ளங் கைலாசருரைத்தபடிகண்டிட்டேனே. (உகச)

இரசகீனிச்சூரணம்.

கண்டிட்டரசகீனிக்சூரணத்தைக்கேளு காணுரசசுத்திசெய்துபலமுக்கால்தான், விண்டிட்டகெந்தியொருபலந்தானப்பா மேலான அரிதாரம்பலந்தான்ரண்டு, பண்டிட்டகற்பரங்விபட்டைபலநாலுபாரடாகொடுவெலிவேறின்பட்டை, துன்றிட்டுயொன்றரைதான்பலமேபோடு சொல்லாதேபெட்டிவிரைப்பலந்தானென்றே. ()

பலத்தாலேகிறுத்துக்கல்லூரலிலிட்டுப் பகருஞ்செங்கொட்டைபைந்துவருத்துப்போடு, பிலத்தாலேயிடித்துச்சூரணமேசெய்து டேபணியேயந்திசந்தியிளம்வென்னீரில், நலத்தாலேயொருபொழுதுக்கரைக்கழஞ்சி நல்கிடவேபத்தியத்தைநாட்டக்கேளு, குலத்தாலேமுருங்கக்காயிலேயுமாகுங் கோழியொடுதுவரையுமாமூக்குவியாமே. (உகரு)

ஆகாதுபுளியுப்புக்கசப்புமூன்று அப்பனேபதினோந்துதினம்போமட்டும், ஏகாதுபிணியகலும்வகையைக்கேளு யெழுமூலங்கருங்குட்டமண்டவாதம், போகாதசெங்குட்டம்வெண்குட்டங்கள்புருடபிளவைத்தண்டுகிரந்திப்புண்கள், சாகாதஅரையாப்புச்சூலையெல்லாந்தான்கெட்டோமென்றுபோந்தான்கண்டீரே. (உகஎ)

கருங்கோழிச்சூரணம்வாதத்திற்கு.

கண்டீரேகருங்கோழிச்சூரணந்தான் கனமானமேம்பினிடப்பட்டைதன்னை, தண்டாதமேற்பரணிதன்னைத்தள்ளி தாளிடித்துச்சூரணப்பலமிருபதப்பா, உண்டானபதினறுபடிதான்காட்டி யூறவிடுமிருபதுநாள்மட்டும்போட்டு, வண்டானக்கருங்கோழிவயதுமூன்று வாகாகநற்சேவல்கொண்டிடாயே. (உகஅ)

கொண்டிடவேகுடல்தனையும்மயிரும்போக்கி குணமாககால்தனையுந்தன்னைத்தள்ளி, விண்டிடவேவசுவகெந்தி பலந்தானொன்று விரும்பியேபொடித்துமேதூளதாக்கி, கண்டிடவேகோழியின் வயிற்றினுள்ளே கடினமுடன்தானடைத்து தைத்துமேதான், பிண்டிடவேதாளிதனிலடக்கஞ்செய்து பிசகாமல்மறுசட்டி யடக்கிவையே.

அடக்கிவைத்துசீலைநன்றாய்செய்துப்போடு அகண்டவாய்த்தாளிதனில்கட்டித்தூக்கி, கடக்கவைத்தகாடிதனையிருத்துக்கொண்டு கருங்கோழிதன்னிலாவிவிட்டபின்பு, மடக்கவேமேல்மூடியப்பாவேற்றி மைந்தனேயொருசாதிவிறகினாலே, துடிக்கவேபரைப்படியாய்சுண்டிற்றுறைற் சுகமாகயிறக்கிவைத்துக்குளிரவாற்றே. ()

குளிர்ந்தபின்புயெலும்புதள்ளிச்சதைமருந்து குலாவிவிழலுலர்த்தியிடிச்சூரணமாயப்பா, அளிந்ததைவடிக்கட்டிவேறேவைத்து அப்பனேபலம்பத்துப்பரங்கிப்பட்டை, களிந்தகனிலிடித்துச்சூரணமாய்ச்செய்து கடக்கவைத்துமேல்மருந்துகடுகுஞ்சுக்கும், எளிதநகருஞ்சீரகமுந்திப்பிலியுமோமம் என்மக்காள்கார்போகமிருளுங்கூட்டே. (௩௦௧)

கூட்டுவதுவகைக்குஅரைப்பலமதாகக் கொடிநாகவறுத்துச்சூரணமேசெய்து, மாட்டுவதுமூன்றுவகைச்சூரணமுங்கலந்து வறுத்துநீகருகாமல்வாங்கியாறி, நாட்டுவதுகலசத்திலடைத்துவைத்து நாளொன்றுக்கரைப்பலந்தான்தேனிலுண்ண, ஊட்டுவதுமுப்பதுநாள்கொண்டபோது ஒடுங்காதகுலைகுட்ட மோடிப்போமே. ()

ஓடிப்போங்கிராந்தியொடுவாதவாய்வு ஓரண்டவாதமொடுகிரிச்சினவாய்வு, சாடிப்போம்பத்தியந்தான்புளியுமுப்புந் தள்ளிவிடுகோழியொடுமுருங்கையாகும், நாடிப்பாரவரையொடுத்துவரையாகு நாள்முப்பத்தேழுக்கு அந்திசந்தி, தேடிப்பார்விள்ளாதவென்னீர்தானுந்தேகத்தில்தான்விட்டாற்றீருந்தானே. (௩௦௩)

தானென்றமனச்சூலையிடிச்சூலைவந்தால் தான்கொள்ளப்பட்சத்திர்சாடிப்போகும், ஊனென்றமற்றுள்ளவியாதிக்கெல்லாமுத்தமனேபத்துநாள்மட்டும்போதுங், தேனென்றவிழிமடவாருடன்மருகலாகாச்செப்புகிறேனுட்புண்ணவகைபைக்கேளு, நானென்றயிந்துப்பைக்கல்வத்திட்டுநாட்டியரைப்பொற்றலையின்சாற்சாமம்ரண்டே

பத்தியவுப்பு.

சாமமதுஅரைத்துவில்லைசெய்துலர்த்திச் சலிபாமலோட்டில் வைத்துமேலுமூடி, சேமமுடன்சீலைமண்செய்துலர்த்திச் செவ்வென்ற புடம்போடக்கட்டிப்போகும், நாமமிதிற்சிறுகவிடுகரிகட்கெல்லாம் நலமானபத்தியத்திற்கப்பாசொன்னேன், நேமமுள்ளகடுகுபேதிபத்தியத்திற்காகா நீர்விடாநன்றாகநிலையில்நில்லே. (௬0௫)

பாங்குட்டத்திற்கு வல்லாதி.

நிலையில்லாவிடுப்புவலிதீரக்கேளு லேசானசீனப்பால்பலந்தானைந்து, மலைவில்லாதிடித்துச்சூரணமேசெய்து மைந்தனேதிரிகடுகு வகைதான்மூன்று, பலமெலாமூவைந்துஇளம்வறுப்பாய்ப் பதறாதே சூரணஞ்செய்துறவேசெய்து, நலமில்லாதினைத்தவுடல்தனக்கு நெய்யில் நல்குவாய்வாதவுடலோர்க்குத்தானே. (௬0௬)

தேனோடுநெய்யிலேகொள்ளும்போது திறமாகவெருகடிதான் தெளிந்துபாரு, வேனென்றபத்தியந்தான்பழஞ்சோறாகும் விண்டுண்ண நல்லெண்ணெய்பன்றியாகும், கானேடுவாயுவென்றதீனிதள்ளு கத்திரிக்காயாகாதுகசப்புமாகா, ஊனோடுசூலையொடுகசப்புவாய்வுஉட்குடைச்சல்வாதத்தின் கசப்புபோமே. (௬0௭)

கருவளர்க்குமெண்ணெய்.

போமென்றகருவழிக்குங்கிரந்திசூலை போகவேகருவளர்க்குமெண்ணெய்கேளு, பாமென்றஅவித்தூத்தமயேரண்டத் தெண்ணெய்ப்படியரைதான் பசுவின்பால்படியுங்காலாம், தாமென்றகருள்ளிப்படியொன்றேகால் தானுரித்துஅரிந்திட்டுக்கரியசீரகமு, மாமென்றுபொடிபண்ணுவிராகனிடைமண்டு மாங்கழுதையத்திப்பால் படியுங்காலே. (௬0௮)

காலாகுமிதுவெல்லாமெண்ணெய்சேர்த்துக் கலந்தடுப்பிலேற்றியெரிசிறுதீயாக, மேலாகுமெழுதுபதமாகும்போது வேகாதுகைபையிட்டாலிள வெந்நீராம், மாலாகும்பதமென்றுவடித்துக்கொண்டு மங்கையர்கள்கெர்ப்பமுற்றஐந்தாந்திங்கள், வேலாகும்விழிமடவார்க்கஞ்சுநாளும் விளங்குமேழாந்திங்களேழுநாளே. (௬0௯)

திங்களதுவொன்பதுக்குமொன்பதேநாள் திறமாகஅந்திசந்திரண்டுநேரம், பங்கமில்லாதிரிகழஞ்சிபகரச்சொல்லு பத்தியந்தான் புளிபுகையுமுப்புமாகாபொங்கமுடன்மறுபத்தியமிருச்கச்சொல்லு

புண்ணியனேரோட்டியுப்பைக்கூட்டு, அங்கமதில்நோய்கழன்றழியு மன்றியழகுமாயிருமலுண்டாய்ப் பிறக்கும்பாரே. (௩௧௦)

காப்பானுக் கெண்ணெய்

பிறக்குமைந்தர் தங்களுக்குக் கரப்பானெல்லாம் புறம்போக எண்ணெயொன்றுபேசக்கேளு, சிறக்குமந்தகற்பூரவல்லிச்சாறுசிறியசெருப்படைச்சாறீருள்ளிச்சாறு,வெறிக்குமந்தகரிமிறட்டிசெப்புநெரிஞ்சிச்சாறு விளக்கெண்ணெய்ப்படியொன்றுபடிதானென்று பறக்குமந்த மெழுகுபதந்தன்னைவாங்கிப் பாலருக்குக்கொடுத்துடம்பு பூசச்சொல்லே (௩௧௧)

மூலவாய்வுக்குப்பால்.

பூசவேகரப்பனென்றதெல்லாம்போகும்புகழ்மூலவாய்வுதான் போகக்கேளு, பேசவேவெள்ளுள்ளித்தயிர்தானப்பா பிசகாமல் வெள்ளுள்ளிப்பலந்தானைந்து, வாசமேயாவின்பாற்படியிற்பாதிவ் வையாசக்காய்ச்சியேபுரையேகுத்தி, பூசவேநீசோறுதயிருங்கூட்டியுண்ணவேபந்திசந்தியொழியும்பாரே. (௩௧௨)

இதுவுமதுவாய்வுக்கெண்ணெய்.

ஒழியுமேயுதிரத்திற்பாராமற்றீருமொளியாதமூலவாய்வோடிப்போகுங், கழியுமேமூன்றுநாளமுதுகொள்ளு கரண்டகளண்ணெயொன்றுகழறக்கேளுதெளியுமேவரிசுடுக்காயிருபதப்பாசெப்பாதேவிரைபோக்கிற்பொடிதான்செய்து, வழியுமேயொருதலைப்பூண்டிருபதாகு மைந்தனேமேற்றோலைவாங்கிப்போடே. (௩௧௩)

வாங்குவாய்பெருங்காயங்கழஞ்சிரண்டு மைந்தனேமுடக்கொத்தான்கொழுந்தொருபிடியாம், பாங்கிலேரண்டஎண்ணெய்ப்படியிற்பாதி பாலகனேமுன்மருந்தைநறுக்கிப்போட்டு, தாங்குவாய்காச்சிடுநீமெழுகுபதமாகத் தானிறக்கியாறவிட்டுக்கடுகைவாங்கி, சாங்கமாகத்யறைத்திடுவாயெண்ணெயோடு தானகறைத்துஒருகாண்டிதாக்கிடாயே. (௩௧௪)

மூலத்திற்கு நெய்.

தாக்கிடவேமட்சமொன்றில்மூலவாய்வு தான்தீருமலக்கட்டுத்தளர்ந்துபோகும், தேக்கிடவேவாதமூலத்திற்கப்பா செப்புகிறேனெய்யொன்றயாவினெய்தான், நோக்கிடவேயடியொன்றுயீருள்ளிச்சாற்று வலுவேனலுபடிகூடவாரு, வாக்கிடவேபசுவின்பால் குறுணிவாரு மதுரமதுபலமொன்று அறைத்துப்போடே. (௩௧௫)

நவமூலத்திற்குநெய்

அறைத்திட்டுமெழுதுபதந்தன்னில்வாங்கி அந்திசந்திபிருபது
நாள்கொண்டாயானால், கறைத்திட்டசீழ்மூலம்ரத்தமூலங் கண்
காணாதோடுமடா கண்டுபாரு, நிறைத்திட்டநவ மூலமெல்லாந்தீர
நேரானநாயுருவிநெய்யைக்கொள்ளு, கறைத்திட்டசிவந்தநாயு
ருவிதானும் சமூலந்தான்பதினாறுபலமுமாமே. (௫௧௬)

ஆமப்பாங்றுத்திடித்துப்பாண்டத்திட்டு அபமுப்பதிரண்டுபடி
நீர்விட்டொன்றாய், பாமப்பாயொன்றரைத்தநாபிநெய்தான் படி
யளந்துவிட்டபின்புபகர்வேன்கற்கம் நாமப்பாகொடிவேலிவேரின்
பட்டை நற்சிவிதைசேங்கொட்டைபாயிற்பட்டை, தாமப்பாதிரி
கடுகுமுன்னைவேருந் தான்றிட்டைதிரிபலையும்முசுட்டைவேறே. ()

வேறானவெட்டிவேர்புங்கன்பட்டை விளங்கவேசுத்திசெய்து
வாளங்கூட்டி, காறானயிந்துப்புப்பல்லிப்பூண்டுகாஞ்சோரிவேர்கஸ்
தூரியஞ்சள்தானும், நேரானபுளிபரணைக்கிழங்குமல்லால் நேர்
பிரண்டைக்கிழங்குமருள்கிழங்குமாகும், பேறானகாட்டில்வாழ்கரு
ணைக்கந்தம் பேசுவேன்வகைக்கொன்றுகழஞ்சுமூன்றே. (௫௧௮)

கழஞ்சாகநிறுத்தாவின்பாலிலாட்டிக் கலக்கிவிடுநாலுபடியால்
தானப்பா, இளங்கொதியாய்நாலுநாளடுப்பிலேற்றி யென்மகனே
முதிரவடிஐந்தாநாளில், விழஞ்சதிரிபலையினிடகொட்டைநோய்வி
ரைந்துசுட்டுப்பொடியாக்கிநீறாய்ச்செய்து, குழைச்சதிலேவெருகடி
தூள்கையில்வாங்கி கூட்டிரண்டுகாசிடைநெய்கொடுத்திடாயே. ()

கொடுத்துவரப்பத்துநாளுதயந்தனனில் குணமாகும்வியாதித
னைக்கூறக்கேளு, தடுத்துவருமூலமு லுறுப்புமூலம் தழைக்குமந்த
முளைமூலமுள்மூலங்கள், வெடித்துவருபிரமூலம்வறட்சிமூலம் வெ
ந்துவிடுந்தளமூலம்சீழ்மூலங்கள், எடுத்தரத்தமூலமுடன் நவமூலங்
கள் ஏகுமடாசொன்னேனேயிந்நூலைத்தானே. (௫௨௦)

வயிற்வியாதிக்குநெய்.

இந்நூலில்வயிற்றில்வரும் வியாதிக்கெல்லா மியம்புறேனெய்
யொன்றுயிதமதாக, மன்னாகேள்சலமுருங்கைவேருதானு மானிட
ரேசிவிதைவேர்நொச்சிவேருந், தன்னுதஞ்சாரணைவேறுபிலப்பட்

டைசங்கன்வேர்மாவிலிங்குமுக்காவேளைசொன்னேனுன், வகைவ
கைக்குப்பலந்தான்ரண்டு சேராமலிடித்துநீபதக்குவாரே. (௩௨௧)

வார்த்தெடுத்துஎட்டொன்றுப்க்குறுக்கிவாங்கிவலியநீசட்டியி
லேவடித்துவிட்டு, சேர்த்துவிடுபசுவினெய்ப்படிதானென்று திருக்
கள்ளிப்பாலரை கால்படியும்வாருசாத்தரிப்பேய்க்குமட்டிக்காயின்
கொட்டை நான்கட்டிச்சுட்டிடித்துநீசாறுவாங்கி, நேர்த்தியரைப்
படிவிடுநீநற்கஙிகேளு நேர்வாளந் தோடுபோய் விராகனெடை
யெட்டே. (௩௨௨)

எட்டடாபெருங்காயம்விராகனெடையாறுஇந்துப்புவெண்கா
ரங்கடுகுரோகிணி, வெட்டடாவெள்ளுள்ளிச்சவர்க்காரஞ்சீனம்வெ
ட்பாலைபரிசியுடன்வகைவகைக்குக்காலாய், தட்டடாவிராகனிடை
யைந்துதானும் தானறைத்துக்கூடவிட்டுநாலுநாளும், மெட்டடா
சிறுகொதியாயைந்துநாளில் மெழுகுபதத்தோடெடுத்துவடித்துக்
கொள்ளே. (௩௨௩)

வடித்தநெய்யில்விராகனிடையொன்றுவாங்கி யப்பனேவிடிய
வேகொள்ளச்சொல்லு,துடைத்துவிடும்நீராம்பல்கவுசிகுன்மம்சொ
ல்லுநீர்க்கோவை நெஞ்சடைதிரட்சிவாய்வு கிடைத்தவைப்புப்பார்
வையொடுவயற்றில்நோய்கள்கெடிவிட்டேயோடுமடாபத்தியங்கள்
உடைத்தசுண்டைவற்றலொடுமிளகுநீரா முண்ணலாங்கோழிச்சாற்
மோருங்கூட்டே. (௩௨௪)

நெய்க்கடுகு

கூட்டடாநெய்க்கடுகொன்றுகேளு கூறுனசாரணைவேர்பொடி
படிதானென்று, சாட்டடாநல்லுப்புப்படியரைக்காற் சாரணையின்
சாறுபடியொன்றுவிட்டு, பூட்டடாவிலக்கள்ளிப்பால்படி காலா
கப்புகழான பசுவினெய்ப்படிகாலாகும், நாட்டடாகோவினீர்படிரண்
டாகும்நன்றாகவொன்றாக அடுப்பிலேற்றே. (௩௨௫)

ஏற்றியேகடுகுபதமாகவாங்கியெடுத்துவொருகடிகொள்ளதிரு
ம்நோய்கேள், மாற்றுமேநீராம்பல்பேராம்பலோடு வயிற்றில்வந்த
நோயெல்லாம்வாங்கிப்போகும், சாற்றுமேமோர்கூட்டப்பேதிகிற்
கும் சமசயங்களெண்ணாதேதாக்கிப்பாரு, தேற்றியேயுதிரநோய்க்
குள்ளிபற்பம் செப்புகிறேனன்றாகத்தெளிந்துகேளே. (௩௨௬)

வெள்ளுள்ளிவுதிரநோய்க்குப்பற்பம்.

தெளிந்தரித்தவெள்ளுள்ளிபடிதானென்று சேருகருஞ்சீரகமும்பலமும்ரண்டரையாம், பொளிந்தபாற்காயமது பலமொன்றேகால் புரஞ்சீவிசுக்குபலமொன்றேகாலாம், தெளிந்தமிளகொன்றுபலந்திப்பிலிதானென்று நேரானகார்போகம்பலமுமொன்று, தளர்ந்தவுள்ளிவேறுவைத்துசரக்கெல்லாந்தான் சட்டியொன்றில்விட்டுவிடுதான்சொன்னேனே. (கூஉஎ)

சொன்னேனேயிந்தப்புபலத்தில்பாதிதூக்கியிட்டுமேல்மூடிச்சீலைசெய்து, முன்னேநீருக்கிடமாய்ப்புடத்தைப்போடு முழுதுஞ்சத்துப்போகாமலிருக்கவாங்கு, பின்னேநீபொடிசெய்துமுன்னுள்ளிசேர்த்துப் பிறட்டியரைமைபோல பெடுத்துக்கொண்டு, மன்னனேவெருகடிதானுதையங்கொள்ளவாங்திபொடுபேதியுமாமக்காள்பாரே. (கூஉஅ)

பாரப்பாகுளித்துச்சாறன்னமுன்னு பருகவதுகாற்பதுநாளுதையகாலங், காரப்பாநீரும்நோய்தின்மமெட்டுங்கடுஞ்சூலை திரெட்டுக்கவுசியெட்டு, பேரப்பாபீலிபத்து அண்டவாய்வு பெருவபறுகிரிச்சியுடன்வெப்புப்பார்வை,ஊரப்பாவிட்டோடுஞ்சொன்னேனின்ன முறைக்கிறேன்கொம்மட்டிக்காயின்குழம்பே. (கூஉகூ)

கொம்மட்டிக்காய்க்குழம்பு,

காயானவரிகொம்மட்டி அஞ்சுபத்துகல்லுரலிலிட்டுத்தான்பாண்டத்திட்டு,தாயானபசுவின்கோசலம்பதக்குதான்விட்டு அடுப்பேற்றிநாலொன்றாக்கி,தீயானபலம்பனிரண்டரைதான்வெல்லஞ்சேர்த்திட்டுப்பாகாகும்பருவம்தன்தில், மாயாததிரிகடுகுகாந்தமுள்ளிமாசீனினக்காரம்வெண்காரந்தானே. (கூகூ0)

காமராம்வெடியுப்புச்சவர்க்காரந்தான் கரியசீரகமிந்துப்புடனேகேளுபாரமாம்விராகனிடையொன்றேயப்பா பாச்சுரநேர்வாளமரைதானுங்கூட்டு, கோரமாந்திரிகடுகுகள்ளிப்பாலுங் கூறரைக்கால்படிசேர்த்துமருந்தையிட்டு வீரமாம்பாகுதனில்கலக்கிக்காய்ச்சிமேல்வாருபசுவின்பால்படிதானென்றே. (கூகூக)

படியரைக்காலேரண்டத்தெண்ணெய்வாருபசுவின்னெய்படியரைக்காற்கூடத்தாக்கு,திடமுறத்தான்காய்ச்சிபெடுகுழம்புபோலச்சிறப்பாககலசத்திற்பத்துநாள்தான், இடமுறவேதானியத்தில்வை

த்தெடுத்து விரையளவுப்பிரமாணம்வெல்லத்துண்ண, துடியறுமே நீராம்பல்கவுசிவாய்வுசொற்பாண்டுரோகம் நீர்ச்சுரப்பும்போமே.

உதரநோய்க்கு,

போகுமேகெற்பவிப்புருதிதானும் பொல்லாதமகோதரங்கள் கவுசிகெண்டை, ஏகுமேயுதிரத்திலெழுந்தநோய்கள் யென்மக்காள் வாய்வென்றதெல்லாந்தள்ளு,வாகுமேயின்னமொன்றுயுதரநோய்க் குவகுத்துரைப்பேன் கொம்மட்டிக்காய்க்கடுகையப்பா, ஆகுமே யன்பதுகாய்ப்பேய்க்குமட்டி யதையிடித்துச்சாறு பிழிந்தப்பா கேளே. (௩௩௩)

குமட்டிக்காய்க்கடுகு,

கேளடாகல்லுப்புபடிநானென்று கெடியானவெடிபுப்புவளை யலுப்பு, தாளடாயிந்துப்புதாந்தஞ்சுக்கு தாக்கடாதிப்பிலிவெள் ளுள்ளிக்கூட, நாளடாவகைக்குயரைப்பலந்தான்றாக்கு நல்ல பெருங்காயமதுபலமுங்கால்தான்,தேளடாவாளமொடுஜாதிலிங்கந் திறமாகப்பலமொன்றுசேரத்தூக்கே. (௩௩௪)

தூக்கியேபொடிசெய்துசாற்றிற்போடு சொல்லுமிலைக்கள்ளிப் பால்படிதான்வாருதாக்கியேகாய்ச்சியெடுமெழுகுபதமாகத்தானெ டுத்துயுடல்பிலம்நோய்ப்பிலமுங்கண்டு, நீக்கியேவிராகனிடையுண் ணச்சொல்லு நீராகும்வியாதிதன்னைநிகழ்த்தக்கேளு, போக்குமே கெற்பவிப்புருதிதன்னைப் பொல்லாதகெற்பவாய் வகலப்போமே.

அகலுமேமகோதரங்கள்செற்பசூலை பட்டகுன்மவயற்றுவலி வெப்புப்பார்வை, இகலுமேசுரோணிதத்தில்வாய்வுதானும் யேகு மேபீலிகைநீராம்பலோடு, புகலுவேன்சவுசிகெண்டை மலட்டுப் பூச்சிபொல்லாதவயற்றுநோயெல்லாந் தீரும்பகலிலேசுடுகஞ்சிகொ ள்ளச்சொல்லு பத்தியமேயில்லைபடாபரிந்துகாணே. (௩௩௫)

குண்டலாதிக்குழம்பு.

பரிந்துண்ணக்குண்டலாதிக்குழம்புகேளுபாரடாசங்குவடிவே ரைவாங்கி, சரிந்துநன்றுயரைத்திடுநீவிளங்காய்மட்டுஞ்சாதியாம்பெ ருங்காயம்விராகனிடைரண்டு புரிந்துநீபொடிசெய்திவைகள்ரண்டும் புதுகலசத்திட்டுநீ யகலச்சட்டி திருந்தவைத்துமருந்திட்டகலசமே லேசேரவைத்துச்சம்பழச்சாற்செப்பக்கேளே. (௩௩௭)

செப்பமுடன்காலரைக்கால்படிதான்விட்டுசேர்த்தொன்றுக்கி ண்டிரவிதன்னில்வைத்து, குப்பென்றுபொங்குமது தன்னைவாங்கி

குளிர்ந்தநிழல்தன்னில்வைத்துவழித்துக்கொண்டு, தப்பில்லாமறு கல,சந்தன்னில்வைத்துதான்முள்ளிக்காயளவுநாளொன்றுக்குஇப் புவியிலாறுநாள்கொள்ளச்சோகை யில்லையடாகாமாலைப்பாண்டு தானே.

கடுக்காய்நெய்.

தானென்றகடுக்காய்நெய்சாற்றக்கேளு தங்கம்போல்வரிகடுக் காய்நூறுவாங்கு ஏனென்றகிழ்க்காய்நெல்லித்தானுமிருபதடாபல மிடித்துப்பாண்டத்திட்டு,வானென்றதுாணிநீர்விட்டுக்காய்ச்சிமைந் தனேரண்டுபடிவடித்துவிட்டு தேனென்றஆவின்னெப்படி தான் விட்டுதிறமானசெண்பகப்பூலேயந்தானே. (௩௩௯)

ஏலமொடுசிவிதைவேற்சுமக்குமஞ்ச ளிதமானசீரகமுங்கடுகு ரோகணி, சீலமொடுகடுக்காய்திப்பிலிவகைக்குதிறமாகப் பலமரை தானரைத்துப்போடு, பாலிரண்டுபடிவிட்டுச்சிறுதீயிட்டுப் பகத் தில்வடித்திருகழஞ்சிப்பருகக்கேளு, சூலமெனும்வீக்கமொடுபித்த சோகை சோபமுடனெறியக்கினிமந்தம்போமே. (௩௪0)

வல்லாரைநெய்.

போகுமேமலசலங்கடினைப்புப்போகும்பொல்லாதபித்தவெப் புவெல்லாந்தீரும் ஆதுமேவல்லாரைநெய்யைக்கேளு அழகானவல் லாரைச்சாற்படிதாகானு, ஏகுமேபசுவின்பால்படிதாநானு யிளநீர் தானிரண்டுபடிநெய்தான்ரண்டு. வேகுமேசீதாசெங்கழநீரொன்று விட்டிடுவாய்பதிமூன்றுபடியுந்தானே. (௩௪௧)

படியுமேதாளிலிட்டுயடுப்பிலேற்றி பாருகேற்கமதிமதுரங்கோ ஷ்டம் விடியுமேசெங்கழுநீர்கிழங்குகுன்றி வேறுடனேயவுரியிலே மேலுங்கேளு, முடியுமேபச்சைகற்பூரத்தோடுமுதன்மை கோரோ சனையும்வகையொன்றுக்கு, கடியுமேவிராகனிடைமூன்றுதாக்கிதா னரைப்பாய்பால்விட்டு கலக்கிவாரே. (௩௪௨)

கலக்கிவிடமூன்றுநாள்சிறுதீயிட்டுக்கட்டிவடிகாலாநாள்மயன் ந்தன்னில், துலக்கமுடனந்திசந்திகாசிடைதான்கொள்ளசோருமே சயமினையிருமல்மாந்தைகுலைக்கவருமருந்தீடுதொண்டைகம்மல்கொ ண்டநஞ்சிவிஷக்கொடுமைகுலைந்துப் போகும்மலைக்கவருமேல்மூர்ச் சியிடையிற்காந்தல்வாய்நாக்கில்நெஞ்சுடலில்வரட்சிபோமே. ()

காசத்திற்குகண்டங்கத்திரிநெய்.

வட்சியென்றகாசங்கள்தீரவேண்டில்வையப்பாகண்டங்கத்திரிநெய்யைத்தானுங், திரட்சிகண்டங்காரிச்சாற்படிதானாலுதிரமான ஆவினநெய்ப்படிதான்ரண்டு, முரிற்சிடுமேகற்கஞ்சாரணைவேரோடு முண்டசிறுகாஞ்சோரிவேற்கீழ்க்காய்நெல்லி, தரிக்கவேநெரிஞ்சி வேற்றாநுவளைவேருந்தான்வகைக்குப்பலமொன்றுதூக்கிடாயே.

தூக்கடாசிறுதேக்குதாளிசப்பத்திரியுஞ்சுகமாகஅரத்தைவெட்பாலைபரிசிதானும், தாக்கடாவகைவகைக்குகழஞ்சிமூன்று தானைத்துப்பாலதனிற்கலக்கிவிட்டு, தேக்கடாதீயெரித்துமெழுகுபதமாகச் சணத்தில்வடிக்காசிடைதானந்திசந்தி, நோக்கடாமண்டலந் தான்கொள்ளும்போதுநுவலுவேன்காசமென்றநோய்போம்பாரே

மாந்தநெய்.

பாரிலேபாலரிடமாந்தந்தீரப் பரிந்துபார்நெய்யொன்றுக்குப் பைமேனி, நீரிலேபொடுதலையுஞ்சிறுபூனைக்காலும் நெடியஇரண்டு வரப்பூலாதானுமாக கூரிலேவிடத்தலையும்வேலிப்பருத்தி கோடகசாலையிவைகொழுந்தெல்லாந்தான், சேரிலேகருசீயமுள்ளிச்சுக்குதிப்பிலியுமருந்தெல்லாஞ்சேர்ந்திடாயே. (௫சசு)

குஷ்டத்திற்குயெண்ணெய்.

சேர்த்துவிடுசமனுகவதைத்துக்கொண்டு செப்புவேன்பசுவெண்ணெய்ச்சேர்த்துக்காய்ச்சி வார்த்துவிடுசிறுகரண்டிநெய்தானப் பாமரந்தமதுபதினெட்டுவகையுந்தீருந், தீர்த்துவிடுயெண்ணெயொனறுகுஷ்டத்திற்கு திறமானமால்தேவிகளஞ்சிமூன்று, பார்த்துவிடுகந்தகந்தான்களஞ்சியொன்று பாலகனேயிவைரண்டும்பொடிதான்பண்ணே. (௫சஎ)

பண்ணியேயெண்ணெய்தனிற்போட்டுக்கிண்டி பதராதேதயிலுப்பமிறகெறிக்கவேண்டும், எண்ணியேகடுபதம்போலேயானுலிறக்கிநிதம்ரண்டுகாசிடைதான்கொள்ளு, உண்ணவேபுளியுப்புகசப்புமாகா யுத்தரவின்பாலோடுசீனியாகும், மண்ணிலேமானிடர்க்குவந்த குஷ்டம் வாரிதனிற்புக்குமடாமைந்தாகேளே. (௫சஅ)

குஷ்டத்திற்குமலைப்பாம்பெண்ணெய்.

மைந்தனே குஷ்டநோய்க்கிரந்தி சூலைமகத்தான விப்புருதி பிளவைத்தீரச் சுந்திரமே யெண்ணெ யொன்று சொல்லத்கேளு தரிசிதுத்தமரிதாரங்கெந்திலிங்கம் முந்துமேகெவுரியொடு

வெள்ளைக்குதம் முழுநாபியெட்டிவிரைக்கரியசீரம், உந்தவகைமருந் தெல்லாங்கழஞ்சிரண்டு என்மகனே பொடிபண்ணியெடுத்திடாயே.()

எடுத்திட்டுபாண்டமதில் புங்கின்னெண்ணெய் ஏரண்டத்தெண் ணெயொடு நிம்பஎண்ணெய், கடுத்திட்டவகைமூன்று படிதான் மூன்று கண்டாயேசெங்கொட்டைப்பலமுமூன்று, மடித்திட்டமயி லிறகுபலந்தான்மூன்று மலைப்பாம்புக்கண்டமதுபலந்தானாறு, தொ டுத்திட்டசங்கன்வேர் பலந்தானாலு தூளாக்கி யெண்ணெயொடு பாண்டஞ்சேரே. (௫௫௦)

சேர்த்துவிடுமருந்தொன்றிலழிஞ்சிவேருஞ் சேர்த்தநீகுழித் தயிலம்படிகாலப்பா, வார்த்துவிடுபாண்டமதிலெல்லாமொன்றாய் வாறுகஎழுதினம்பரவியில்வைத்து, நேர்த்தியடாகொருடணிடகிழங்கு கண்டம் நீபோடுபலபநாலுயீருள்ளிநாலு, சாற்றவேசங்கன்குப்பி படிதானென்று தான்விட்டுசிறுகொதிப்பாய்த்தாக்கிமூடே. ()

மூட்டுவாய் மயிலிறகுசரையுமட்டு முத்தமனேயெண்ணெய்தனை வடித்துவாங்கி, நீட்டுவாய்கழஞ்சியரை யந்திசந்தி நீபோடுரணத் தன்னிலிந்தஎண்ணெய் காட்டுவாய்பத்தியந்தான் மூன்றுதிங்கள் கார்த்திருக்கத்தீரும்நோய்கழறக்கேளு, மாட்டுமேகுஷ்டமதுஎழு பத்திரண்டு வருங்கிரந்திகாப்பனெனுசூலைபோமே. (௫௫௨)

சூலையொடுபிள்ளைவைபுத்துக் கண்டமாலை தொட்டவுடனொட்டு கின்றஒட்டியப்புண், மேலிட்டபலவிரண மெல்லாந்தீரும் வெயி லோடுகாத்தாக்காபுணர்ச்சியாகா, வாலைபடாஇந்தஎண்ணெய்கொ ள்ளும்போது வளருமேகுறைந்ததெல்லாமைந்தாபாரு, காலுமடா விஷமடிகள்கடலேபுக்குங் கனமானபத்தியந்தான் காருகாரே. ()

காராட்டால்மருந்துதானென்னசெய்யுங் கருங்குருவையரிசி யொடுபயறுமாகும், நேராட்டால்சம்பா பச்சரிசியாகும் நீகூட்டு சர்க்கரையு மாவினெய்யும், சேராட்டால்சூடுகொண்டு வெடிக்கு மேனி செப்பினேனிதையறிந்துஎண்ணெயுண்ணு, பேராட்டந்தே பத்தையகலத்தளரு புண்ணியனேகளிம்பொன்றுபுகலக்கேளே. ()

(களிம்பு.)

புகலரியவீ மொடுரசகற்பூரம் புதியதொருசாதிலிங்கம்வகை தானமுன்றும், செகமறியவகைக்கூரான் டுழஞ்சிதூக்கிச் சேரடா

ஆறுபங்குமேதினெய்யை, பகல்முழுதுபறைத்துநீகுளிர்ந்தசலத்திலிட்டுப் பாடா அதையெடுத்துநீரைவாங்கி, இகமதனில்மானிடர்க்குப்புண்ணிலிட்டா லெழுந்துபலவிரணமெல்லாமேகுந்தானே. ()

ஏகுமடா தர்மமதுபெரிதென்றெண்ணி யேழையைப்பார்த்தன்னமிடசர்மந்தீரும், போகுமடாவயித்தியர்க்கு மனம்நோகாமல் பொன்னோடு வஸ்திராபரணமீய்ந்து, தாகமடாதீருதற் குபசாரஞ் செய்தால் சண்டாளப்பிணியெல்லாஞ்சமுத்திரம்புக்கும், நாகமடா தரித்தசிவன்சொன்னமார்க்கம் நலமென்றுஉலகத்தோநாடுநோடே.

சண்டரசப்பற்பம்.

நாடுகின்றசண்டரசப்பற்பந்தன்னை நாட்டுகிறேன்வெடியுப்புப் பலம்தானாறு, ஆடுகின்றசவர்க்காரமைம்பதாகு மப்பனேயிரண்டையுந்தானரைத்துகொண்டு, கூடுகின்றகலசத்திலரைவாசியிட்டுக் கூர்மமாமேமந்திரத்தைக்கவிழ்த்துமூடி, தேடுகின்றசீலைமண்ணேழுஞ் செய்துலர்த்தித் திறமாகவடுப்பேற்றித்திராவகத்தைவாங்கே. ()

வாங்கியேகுப்பிதனி லடைத்துக்கொண்டு வாகானலிங்கமது பலந்தானொன்று, தாங்கியேகல்வத்திலிட்டுக்கொண்டு ஜாமமதுதிராவகத்தாலாட்டிவாங்கி, ஒங்கியேவில்லைகட்டிச்சட்டிதனிலிட்டு ஒப்புரவாய்சட்டிக்குள் முருக்கம்பூச்சாற் எங்கியேபோகாமல் பூசிமூடியேழுசீலைமண்செய்து அடுப்பிலேற்றே. (௫௱௮)

ஏற்றியேசாமமதுஎரியிட்டாற்றி யெடுத்துப்பார் பதங்கமது மேலேநிற்கும், தேற்றியேமயிர்க்குச்சால் துடைத்துவாங்கித் திரமாகஅடிசட்டிமருந்துஞ்சேர்த்து, மாற்றியேதிராவகத்தால் சாமமாட்டி வாங்கிவில்லைசெய்துமுன்போலெறித்துப்போடு, சாற்றியேமுன்போலஏழுதிறமப்பா தப்பாதுசெயரசந்தான்தவளமாமே. ()

தவளநிறமாகியதோர் தளபற்பத்தைத் தனிவெல்லந்தனிற்பணந்தான்வைத்துக்கொள்ள, துவளுகின்றவாதமொடுபக்கச்சூலை தொலையாதகிரந்திபுத்துக்குஷ்டந்தானும், நவலுகின்றசூலையொடு கரப்பானலும் நொடிக்குமுன்னே கொல்லுகின்றருத்திரவாய்வு, புவனமதுஅண்டாது பத்தியம்வேண்டும் புகலுகிறே னின்னமொன்றுபுகலக்கேளே. (௫௱௰)

இதுவுமதாரசபற்பம்.

கேளப்பாசீனமதுபலந்தானூறு கெடியானகம்பியுப்பெழுபத்தைந்து, தாளப்பாசவர்க்காரமிருபத்தைந்துந் தாக்கியேமுன்போலத்திநீர்வாங்கி,கேளப்பாவாராமலடைத்துக்கொண்டு குப்பிவைப்புலிங்கமதைக்கல்வத்திட்டு, தூளப்பா திராவகத்தால்கடிகைமூன்றுதுவளவரைத்தடிசட்டிதன்னிற்போடே. (௬௬௧)

சட்டிமேற்சட்டிக்குமுருக்கிலைபின்சாறு தாக்கியேபூசிநன்றாய்க்கவிழ்த்துமூடி, ஒட்டியேசீலைமண்ணேழ்பொருந்தச்செய்து உத்தமனேநாழிகைமூன்றெரித்துஆற்றி, அட்டியில்லாக்கவிழ்த்தெடுத்துப்பதங்கத்தோடு அடியில்நின்றபற்பமுடனரைமூன்றோல், செட்டியாய்வில்லைதட்டிச் சட்டிதனிலிட்டுக் கேள்மக்காள்மேற்சட்டிக்குட்பூசக்கேளே. (௬௬௨)

பூசுவாய்வேலிபென்றபருத்திச்சாறுபொருந்தமண்செய்தெறிப்பாம்கடிகைமூன்று, நேசமாயாறினபின்பதங்கத்தோடு நிலைத்துநின்றதளத்தோடுஅரைமுன்போலே, வாசமாய்மூன்றுக்குமுசுமுசுக்கைச்சாற் மக்களேநாலுக்குகொடிவேலிச்சாற், தேசிகனேயைந்துக்குகொப்பைச்சாறு செப்பாதேஆறுக்கு மல்லிகைப்பூச்சாறே.

சாறுகேள்ஏழுக்குவுப்பிலியின்சாறுதப்பாதுதளபற்பம்இடைபோகாது,வாறுகேளறுபானத்தோடேயுண்ணு வாதமொடுசன்னிபதினெட்டுந்தீரும், கூறுவேன்சீனப்பாசூரணத்தில்கொடுத்திடவேசூலையொடுகிரந்திதீரும், வீறுகேளரிதாரப்பற்பத்தோடு மெண்றுண்ணுங்குஷ்டமெல்லா மேகுந்தானே. (௬௬௪)

ஏகுமேபுளியாரைநெய்பிற்கொள்ள என்னசொல்வேன்கிராணியெல்லாமேகுமேகும்,தாகுமேகந்நாதிலேகியத்தில் தாதுமிகவர்த்திக்குமூலம்போகும், வேகமாய்வல்லாதிதன்னிற்கொள்ள வெடிசூலைகிரந்திவெறுண்டேயோடும், பாரமடா அமிர்தசஞ்சீவிதன்னிலீயப்பதித்துண்ணமேகமெல்லாம் பறக்குந்தானே. (௬௬௫)

தானென்றபத்தியத்தைச்சொல்லக்கேளு தனிப்பசுவினெப்பாலும்பயறுமாகும்,வாமென்றமுருங்கைபின்பிஞ்சுமாகும் வழுதலைப்பிஞ்சுடனேதவரைப்பிஞ்சும், காணென்றதூதுவளைமூலமாகும் கண்டங்கத்திரிமணத்தக்காளியாகும்,மேனென்றபுளியாரைக்கொடுமையாகுமென்மக்காள்புளிகரம்பையெண்ணெண்ணதே. (௬௬௬)

தாளகபற்பம்.

எண்ணரியதாளகத்தைப்பற்பம்பண்ண எவராலுமுடியாதுசித்தர்க்காகும், ஒண்ணரியநாதாக்களாடமாட்டு முற்றபனேவாதத்தில்லுயர்ந்தவேதை. உண்ணரியமானிடர்க்குநோய்களேதஉத்தமமாம்வித்தையிதுவுயர்த்திமெத்த,பண்ணரியசுந்திரமேசொல்லக்கேளு பாசமற்றஞானிகள்தான் பண்ணுவாரே. (௬௬௭)

பண்ணப்பாமேனிச்சாற்படிதான்ரண்டு பழங்காடிரண்டுபடிகஉச்சுண்ணம், சுண்ணப்பாதேங்காயினளவாயிட்டுக் கவரமத்தால்கடைந்திடுவாய்கடிகைரண்டு, நண்ணப்பாதாளகந்தான்பலமிரண்டு நடுநிற்கவேதுளாந்திறமுங்கட்டி. எண்ணப்பாவடுப்பேற்றியெரிநேர்ப்பாக எழில்தண்ணீர்வற்றினபின்னெடுத்துக்கொள்ளே.(௬௬௮)

எடுத்தபுளிபலம்பத்துப் பாண்டத்திட்டு இரவிநீர்ப்படிநாலுகூடவிட்டு, அடுத்ததினமூன்றங்கேகடைந்துவாநீ அப்பனேதாளகந்துளாந்திறமாய்க்கட்டி, கொடுத்தசுறுதீயிலிட்டுக் கனிபோலரனல் குலாவியதோர்தாளகத்தையெடுத்துக்கொண்டு, கடுத்த அப்பைசாற்றினிலேசாமம்ரண்டு கனசமென்றதாதிகத்தை யறைத்திடாயே. (௬௬௯)

அறைத்திட்டுரூபாய்போல்வில்லைதட்டியப்பனேயுலரவைத்துப்பின்புகேளு, நிறைத்திட்டமுண்கிளிஞ்சையைப்படுப்பிலேற்றி நீர்வற்றுவறுத்திரண்டுபங்குசெய்து, உறைத்திட்டசட்டிகனிற்பங்கொன்றிட்டுளப்புரவாயமுத்தியதில்வில்லைவைத்து, மறைக்கிட்டமறுபங்குமேலேயிட்டு வாய்க்கிணங்குசட்டிகொண்டு கவிழ்த்துமூடே (௬௭௦)

மூடியேசீலைமண்ணேழ்செய்துலர்த்தி மூதண்டவயிரவர்க்கும்திருவாணிக்கும், தேடியேபாணமதுசத்திவைத்துச் செயஞ்செய்துஅடுப்பேற்றியெரிநேரப்பா, கூடியேபஞ்சாமமானபின்பு குளிர்ந்தபின்புஎடுத்துப்பார்கறுத்துப்போகும், வாடியேமயங்காதேபசப்பைச்சாற்றில் மாட்டியரைவில்லைதட்டியுலரப்போடே, (௬௭௧)

உலர்ந்தபின்புமுன்சாம்பலமுரியாலே யொப்புரவாய்பதங்கெடுத்துச்சட்டிநடுக்குவித்து, மலர்ந்திடவேயடுப்பேற்றி யெரிப்பாய்சாமமைந்தனேவிபூதிபோல்நீரிப்போகும், அருர்த்தவண்டநீராலேயறைத்துவாங்கி யகலிரண்டுசெய்துலர்த்திவில்லைவைத்து, புலர்ந்தவகல்மேல்மூடிச்சீலைசெய்து புகழாகக்கலக்கிடமாம் புடத்தைப்போடே. (௬௭௨)

போடவேரீயருதவெள்ளையாகும் பொன்னுனவயிரவனைப்பூ சைபண்ணு, வாடவேவேண்டாநீகலிவராது மக்களேபணவிடை காலிநிறுத்திக்கொண்டு, கூடவேயன்டாகபற்பஞ்சேர்த்துக் கொடு த்தி டவேகுட்டமொடு குறைநோயெல்லாம், ஓடவேசொல்லுமடா கிரந்தியேது யுடல்கெடுத்தசூலைபொடுவாதம்போமே (கூஎஉ)

வாதமொடுபவுத்திரங்கள்கண்டமாலை தளர்கின்றபுத்திடனே பிளவைவலிப்புருநிகூட, காதமென்றதூரமல்லவோடும்வேகம் கல ங்காதேபத்தியத்தைக்காருகாரு, ஆதியென்றவழலைதனையணைத்தா யானலட்டனேகாட்டுமுன்னேயலறிவாங்கும், பேதமென்றமூடரு க்குகருசொல்லாதே பித்தரைப்போலிருக்கப்பிழைப்பாய்நீயே.

(தாளகக்கட்டு)

பிழைப்பதற்குதாளகத்தின்கட்டைக்கேளு பிசகாகதாளடுக் தின்கட்டைவாங்கி, கிழைப்பதற்குகுறிக்கின் வாய்கலசந்தன்னில் திருகுகள்ளிப்பால்தனில்நிறையவிட்டு, உழைப்பதற்குத்தாளகத் தைவிட்டுமூடி பொருதிங்கட்புதைத்தெடுத்தாக டுச்சாறு, தழை ப்பதற்குவிட்டுபோல புதைத்துப்போடு தப்பாமல்திங்கள்சென்று யெடுத்துக்கொள்ளே (கூஎரு)

கொள்ளடாபெருவாயின் னீர்படிதாநாலு கூறுதேபழம்புளி யும்பலந்தானொட்டு, விள்ளடாவூசிநீர்படிதாநாலு விட்டேத்திப்பாண் டத்திலகனைந்துக்கொண்டு, தள்ளடாமூன்றுநாளானபின்பு தாள கத்தைதெளிந்திற மாகக்கட்டி, மெள்ளடாஅடுபபேற்றி தீபம் போல விறகதுவுந்தென்னைமட்டையாகுந்தானே (கூஎசு)

தானென்றமெழுகதுபோல்சுண்டிற்றுனல் தாளகத்தைதெடு த்துநீவைத்துக்கொண்டு,ஊனென்றமொழுகதனைவில்லைதட்டி யுலர்த் திபேகுழித்தயிலம் வாங்கிக்கொண்டு, நலென்றதயிலந்தில்வீரம் பூரம் நலமாகப்பொடித்திட்டுக்கடக்கவைத்து, தேனென்றமால்தே வி அயக்குகைக்குள்வைத்து செங்குமரிபாலதுவுஞ்சுருக்குத்தாக்கே

சுருக்கடாயிருசாமம்பூரநீறுஞ் சொல்லரிய அண்டநீரதுவுங் கூட, இருக்கடாவகைக்குரண்டுசாமங்காக்கு யென்மகனேமுன்ற யிலம்பூசிவாட்டு, குருக்கடாயிந்தவழியுலகத்துள்ளே கூறுதேயிரு சாமம்பூசிபூசி, முருக்கடாவாட்டத்திற்சிவக்கவாட்டு முறையோ டேரவிமதிக்குளீய்க்திடாயே. (கூஎஅ)

ஏய்ந்திடவேகறுப்பாகியிருக்கும்பாரு யிடைக்கிடைநீவங்கத்தைக்குத்தியூது வாய்ந்திடவேவயதெட்டுக்குறையாதையா வலுவானசயரோகமாந்தைதீரும், ஒய்ந்திடுபேசுரபனைத்துங்கசரோசங்கள் யோடிவிடுமனுபானமறிந்துபோடு, ஆய்ந்திடவேபலநூலும்வெளியாய்க்காணும் அப்பனேபதங்கமொன்று அறையக்கேளே. (௫உ௬)

(இரசப்பதங்கம்)

அறையக்கேள்சுத்திசெய்தசூதந்தானு மப்பனேபலநாலுகிருத்துக்கொண்டு, பறையக்கேளடிகனத்தப்பாண்டந்தன்னில் பாய்ச்சடாகரியுப்புப்படிதாநாலு, துறையக்கேள் கொடிவேலிவிளைந்தவேறை சொர்னமென்றநாதரேண்டாநீரால், முறையைக்கேள்சாமமொன்று ஆட்டிவாங்கி பூசைசெய்துசூரணத்தையதற்குட்சேரே. ()

சோரப்பாயுப்பின்மேற் குகையைவைத்துத் திறமானபாண்டத்தாற்பொருந்தமூடி, காரப்பாவச்சிரமாஞ்சீலெசெய்து கனமானவாலுகையில்நாலுசாமந் தீரப்பாவேம்பினிடவிறகுபோட்டு தீயதுதான் காடாக்கினியெறிந்துஆறி, ஆரப்பாயெடுத்துப்பார்மேல்பாண்டந்துளானவிந்துபற்பமதாயிருக்குந்தானே. (௫அக)

இருக்குமந்தபற்பத்தையெடுத்துநீயும் யேமமென்றவயிரவன் முன்வைத்துப்போற்றி, உறைக்கின்றகருநாடும் பத்துக்கொன்னறாட்டவேயொன்பதரையுப்புக்கேக, விரைக்கின்றவங்கநீரைவாங்குமேலானவித்தைதீதுவெகுபதனமப்பா, நிறைக்கின்றேன்வஞ்சமுற்றசண்டாளர்க்கு நீர்க்கருவைக்காட்டாதேநிசஞ்சொன்னேமே

சொன்னசொருகூலபதினெட்டுந்தீருந் துடியானகிரந்தியறையாப்புந்தீரும், வன்னமுள்ளபொன்போலேதேகமாகும் வச்சிரம்போல்மேனியது வலித்துப்போகும், வன்னமோபத்தியத்தைச் சொல்லக்கேளு மேதியுடனெய்மோரும்பாலுமாகா, பின்னுமுருங்கைப்பூவுடனேபுளிப்புமாற்றுபிசகாமற்பத்தியமாயுண்டுதேறே.

இரசவேக்காட்டிற்குக்கிபாழம்.

உண்டுவரில்நாய் சூலைக்கடித்ததானு ஹத்தமனேயோண்டத்தெணெணெய்தேய்த்து, மண்டலத்திலொன்றை விட்டுயொருநாள் மூழ்கு வாய்சூலைவாயகுமடாகியாழங்கேளு, கண்டுபார்கருவெல்லா

கசசீகட்குாளிப்பார்குவெற்றிலையுமருதம்பட்டை,சுண்டவேயெடுத்
திறக்கிக்கியாழந்தன்னைக் சுகமாகக்கொப்பளிக்கச்சுகம்தாமே. ()

சுகமாகநாகமதுதரித்தவீசன் சுந்தரிக்குச்சொல்லவென்பால் சூட்டிஞல்பார் செகமாகும்பருவதம்போல்வளருமக்காள் தேசத்தோர்தான்பிழைக்கச்செப்பினேன்பார், அகங்கொண்டதுக்தருக்குச்செப்பாதேநீ ஆசைகொண்டதுத்தரைத்தானகலத்தள்ளு, நிக மதுவுமூனும்போலிருந்தாஞகில் நீபனிரண்டாண்டுமட்டுஞ்சோதிப்பாயே

சீஷன்மனஞ்சோதிப்பு

சோதித்துப்பார்க்கையிலேகலங்காஞகில் சொல்லடாதீட்சை முன்னேகற்பமீய்ந்து, சாதித்துத்தான்பணிந்துகாத்தஞகில் தயங்காதேயென்றுசொல்லிப்பூரக்கருவைச்சொல்லு, போதித்தவழிப்படியேநடந்தாஞகில் புகலுவாய்பிராணயக்கருவைமைந்தா சூதற்றுவுனக்குதவியாஞகில்துலங்குகின்ற வேதமுறைசொல்லுவாயே

முறைகண்டுகிருபமதுவில்லாஞகில் மூதண்டலேகியமூந்தயிலஞ்சொல்லு, நெறிகொண்டலகிரிதன்னில்நிலைந்தாஞகில் நேமமாம் பூரணசூட்சத்தைநீட்டு வெறிகொண்டபூரணத்தே நிலைத்தாஞகில் மெய்ஞ்ஞானக்கருவையுடனிள்ளுவிள்ளு, துறைகண்டு உன்பதத்தைக்காததிருந்தாஞகில் சொல்லடாவுடகருவுந்துறையுந்தானே.

நாகக்கட்டு.

தானென்றபராபரையாள்சொன்னவித்தை சாற்றுகிறேன்சுந்திரமேசன்புவாகும், பானென்றஆலமுண்டகண்டர்பூண்ட பரிவானபூரணத்தைசாட்டக்கேளு, வானென்றபலநூறுநிறுத்து வாங்கி வையப்பா அயக்குகைக்குள்மாட்டியூது, காலென்றுருக்கையிலே சாறுந்தூவுகருதுகின்ற இலுப்பெண்ணெய்மேலேருத்தே. (௩அஅ)

குத்தையிலே முகந்தெளிந்துருக்கும்போது கொடிகள்ளிச் சாற்றினிலேசாய்த்துவாநீ, பத்தியிலே இருபத்தொன்றுசாய்த்து பதராதேயிலைக்கள்ளியவ்வீதந்தான், சத்தியிலேஅயந்தன்ஞல் கன மதாகத்தளராதே மாக்கல்லால்மூடிசெய்து, வித்தையிலேபதிக வித்தைமரக்காலுக்குள் மேலானசுத்திசெய்தநாகந்தாக்கே. ()

தாக்கியல்லோமேஷத்தினுதிரம்விட்டுத் தகடுவாய்ப்பொருந் திமேலன்ளுக்கட்டி, வீக்கியல்லோஎன்சீலைமண்ணுஞ்செய்து மேலானவயிரவனைப்பூசைபண்ணு, தூக்கியல்லோகுழி வெட்டிக்கனபுடமேபோடு சொல்லேதுநாகமதுகட்டிப்போச்சி, தேக்கியல்லோபுடமேழுமடங்கிப்போச்சு செப்பாதேவழலைசூத்திரமதாமே. ( )

திறமானநாகமதுபணந்தான்மூன்று செயமானநாகமிடைகுருவைக்கூட்டு, அறமானதொன்றுரவிநாலும்போடு அறவைத்தமதியெட்டுக்கூடத்தாக்கி, துறமானமகாநன்றுயறவைத்தூது சொர்னமதுவயதெட்டுப்புடத்துக்கேகா, நெறியானமனதோர்க்குஇந்நூல்கிட்டும் நிலைத்துப்பார்குருவென்ன நினைவாய்த்தானே. (௫௱௧)

நினைவாக இத்தொழிலாற்சீவனமேசெய்து நீபொருவயித்தியந்தான்கர்மமாகும், தனமாகு ஆசைவைத்துப்பொன்னைத்தேடிக்கணத்திலேவீழாதேபொய்பாகாதே, மனமானதினையாதேசாபந்தீரும் வல்லமைகள்பேசாதேவாயாடாதே, கனமாகபுத்திகொண்டில்லறத்துள்ளேகாத்திருந்து கற்பமுன்னுகனகந்தானே. (௫௱௨)

சத்துகள்செந்தூரம்.

கனகமென்றநாகமதுபலந்தானொன்று கருதிப்பார்தங்கமதுபலந்தானொன்று, முனைவதென்னஅயநாகம்பலந்தானொன்று மூட்டப்பாகாந்தமென்றசத்துவொன்று, சனவப்பாகுகையில்வைத்துஉருக்குப்போது தாக்கடாகுடோரியதுவிராகனொன்று, நினைவுகொண்டுஆவாரையின்கோலாற்கிண்டு நீறுபோலுருக்கையிலேசெந்திதாக்கே (௫௱௨)

செந்திசமனிட்டுருக்கிவாங்கியாற்றிக் கேளடாகல்வத்திலிட்டுக்கொண்டு, வந்ததொருஅரிதாரம்பலந்தானமூன்று மகத்தானவீரமதுபலந்தானொன்று, மூர்த்துபானவிந்துபலமிரண்டுவாருமுழுகட்டுகெவுரிபலமொன்றுபோடு, தொந்தித்தஇடைகளெல்லாம்பாதிசெந்திரூட்டியேசீலையொன்றுலிங்கம்ரண்டே. (௫௱௩)

லிங்கத்தினிடைபாகிகட்டுசாரமிரண்டுநாள்குமரியிடபாலாலாட்டு, சங்கொத்தஅயச்சட்டிதன்னிலிட்டுச் சடையாய்நீர்வற்றவறுத்துப்பின்னும், அங்கொத்தபூவரசம்பூச்சாறுவிட்டு ஆட்டடாதினம

ரண்டு அரசன்பட்டை, இங்கொத்த அமுரிவிட்டுஇடித்துச்சாற்றி வி ண்டுநாளரைத்துவலுத்தெடுத்திடாயே. (௫௯௫)

எட்டுத்திட்டபொடியதனைக்கல்வத்திட்டு என்மக்காள்பொற் றலையின்சாற்றாலாட்டித் தடுத்திட்டமணவரையில்புடத்தைப்போடு தப்பாமலேந்துகரம்போட்டுத்தீரு கடுத்திட்டமூலவேர்தயிலம் விட் டுக்கிளரிநீவடிக்கிடுவாய்கவுசிமாறத் தொடுத்திட்டநாலிலொன்று தெந்திகூட்டித் துடியானசெங்கீரைச்சாற்றிலாட்டே. (௫௯௬)

சாற்றிலரைத்திருசாமமுலர்த்திக்கொண்டு தங்காதேபொடிப ண்ணிமேனக்கேற்றி, மூத்தவற்குங்கந்தனுக்கும்வயிரவர்க்கு முறை போடே ஆயிக்குமவாமபூசை ஏற்றிடுவாய்சாபங்களனைத்துந் தீரு மெருகேதருஞ்சிவன்செய்துவாலேயேற்றி, சூத்திரமாயெண்ணிரண்டு சாமந்தானும சூட்சத்தாலக்கினியுஞ்சூட்டிடாயே. (௫௯௭)

சூட்டியேயாறவிட்டுஎடுத்துப்பாரு சூதமதுமூன்றிலொன்று மேலேநிற்கும், மாட்டியேசெஙகீரைச்சாற்றாலாட்டி விருப்பொன்று அரைப்பொன்றுமேருக்கேற்றி நாட்டியேமுன்போலேயெரித்து நீ றுநலமானமுருக்கன்பூப்போலாம்பாரு ஆட்டியேபணவிடைதான் தேனிற்கொள்ள அரகராஅந்தகனானுந்தானே. (௫௯௮)

அணுவொன்றுநவலோகத்துள்ளேகொள்ள ஆணியுண்டோயு றையுண்டோஐயாசொல்லு பணமென்றஆசைகொண்டலுத் தருக் குப் பகராதேயுட்கருவைப்பகர்ந்தாரானல் பிணியென்றாவிகோடி நரகில்வீழ்ந்து பேயாகிப்பித்தாகியுழன்றுசாவாய் சினமென்ற சிற் றின்பங்கோபந்தள்ளிச்சிவன்மேலே சிந்தையாயிருக்கச்செய்யே.

## சலசரிமார்க்கம்.

செய்யவேசொல்லுகிறேனாகங்கட்டித் திடமானகிண்ணியைப் போற்செய்துகொண்டு உய்யனேஅயத்தாலேதாம்பாளஞ்செய்துஉ த்தமனேகிண்ணியைப்போல்பதியைத்தோண்டி வெய்யவேகிண்ணி யுந்தாம்பாளந்தானும் விடவுசற்றுமில்லாமல் பொருந்தச்செய்து கொய்யவேசலசரியுமினந்தன்னைக் கூறுகிறேன்சுந்திரமே கூர்ந்து கேளே. (௬00)

கூர்ந்துகேளயந்தன்னைத்தகடுதட்டிக் குகைசுற்றும்பரப்பிவை த்துப்பழுக்கவூதி சார்ந்துகேள்கெந்தகந்தான்கட்டியாகத்தாக்கடா

சபனாவுருகும்போது ஓர்ந்துகேள்காரீயமையம்நேராக உருக்கு முகத்தினிற்கொடுக்கக்கலந்துபோகும் நேர்ந்துகேள்நறுக்கியதைத் தூளாய்வாங்கி நினைவாகவைத்தபின்பு நிகழ்த்தக்கேளே. (௬௦௧)

கேளடாஆலம்பால்படியிற்பாதி கெடியானஅயக்கரண்டி தன் னில்வார்த்து கோளடாவாருமல் கிண்டிக்காய்ச்சு கொடிபோலே வரும்பருவந்தன்னிலப்பா வாளடாமுன்பொடியைத்தூவிக்கிண்டி மைந்தனேநீர்வற்றத்திரட்டிவாங்கி நாளடாபட்டையின்மேலேவை த்துநன்றாக எரிக்கவதுமயினந்தானே. (௬௦௨)

கம்பியுப்பு.

மயினமென்ற மெழுகதனைவைத்துக்கொண்டு மருந்துவகை சொல்லுகிறேன்மாணுகேளு சயமென்றகம்பியுப்பு விராகன்மூன்று தானரணைக்கோடதுவும்விராகன்மூன்றுநயனமென்றகல்வத்திலண் டநீரால் நாட்டியரையொருசாமம்ரவியிற்போடு வயணமுன்ன கற் பூரவெற்றிலைபின்சாற்றில்மாட்டி யரைசாமமொன்றுவில்லைதட்டே

தட்டியேரவியிலிடுவுலருமட்டுங் கணரிட்டாலோட்டில்வைத் தோடுமூடி அட்டியிலைமண்செய்துபுடத்தைப்போடு அப்பனேயெ ருமூன்றுக்கதிகம்வேண்டாம் மட்டுப்போற்கட்டுமது இடைபோ காதுமாட்டடாகம்பியுப்புவிராகன்மூன்று தட்டியேமுன்போலச் சேர்த்தரைத்துத் தப்பாமல்நாலெருவிற்புடத்தைப்போடே.

போட்டபின்முன்போல அரைத்தரைத்துப் புகழாகவெரு வேற்றிப்புடத்தைப்போடு, நாட்டப்பா இப்படியே தொந்தங்கோ டி நாட்டவேயுப்பதுவுமிடைபோகாது, சாட்டப்பாவிந்தவுப்பால் சாரஞ்சாகுந் தனிச்சாரஞ்சாரத்தில்தாக்கச்சாகும், ஆட்டப்பா சாரத்தில்தொந்தங்கோடி அனைத்துநீசாரத்தால்வீரங்கட்டே. ()

வீரத்தால்வீரமதுதொந்தங்கோடி மேலானசாரத்தால் பூரங் கொல்லும் பூரத்தாலண்டமது தண்ணீராகும் பூட்டடாதுறைதோ றுமறைப்புக்கெல்லாம் காரத்தாற்சரக்கெல்லாங்கட்டிப்போகுங் க சடருக்குப் பூநீரைக்காட்டொண்ணாது-தாரித்தால்புருஷருபி ரிழந் தாற்போலச் சணடாள அணடநீரகொல்லுந்தானே. (௬௦௩)

கொல்லுமடாஇனங்கனதுகாரந்தன்னைக் கொடிதிரணடுசாரத் தைக்கொல்லும்பாரு அல்லடாசாரத்தால்வீரஞ்சாகுமப்பனேயிதி

ஞாலை தரிசிசாகுஞ், செல்லுமடா தரிசாலேயெல்லாஞ்சாகுஞ் செய ச்சாரவீரத்தால்சூதஞ்சாகும், நல்லதடாவெடியுப்பு நீரேசெய்தால் நலமானசரக்கரையெல்லாங் கொல்லுந்தானே. (சoஎ)

தானென்றஅண்டமொடுகாரஞ்சாரந் தான்மூன்றுமுப்பூவாய் முடிந்தவாறு, மானென்றமுப்பூவும்பிர்மாவிஷ்ணுத் திரனுதுமப்பா மாட்டிப்பாரு, பானென்றசட்டமுனிநிகண்டிற்சொன்னாற் பாஞ்ச பூச்சாக்கைப் பார்த்துத்தேறு,வேனென்றபெண்ணெயதுகழன்று தானல் வேதையதுவெளிதாகுமுத்துக்கேளே. (சoஅ)

உத்துமேபார்க்கையிலேகருவுந்தோன்றும் யுனக்குள்ளேபஞ்ச பூதத்தைப்பாரு, சத்துமனஞ்சங்கையற்றுப்பார்த்தாயானல் தானு னமுக்கோணவல்லடையைக்காண் பாய்மத்துமொருகருவில்லைகுண் டலியாந்தாய்தான் மாலினிடகருவறிந்தால் வல்லபையின்வாசாம் எத்ததொருகற்சுண்ணஞ்செய்தாயாகில் யென்ஞிணைசரக்கெல்லாங் கொல்லுந்தானே. (சoகூ)

(வீரபற்பம்.)

கொல்லுமடாவீரமொடுசாரந்தானுங் கூறக்கேள்வதையொன் றுவிராகனென்று, வெல்லுமடாசூதமதுபலந்தான்ரண்டு விதமூன் றுக்கல்வத்திலண்டநீரால், அல்லவடாசாதமொன்று அரைத்துவா ங்கி வாரியுப்புசெயநீரால்கடிகையாட்டி, செல்லுமடாவபச்சட்டிநடு வேவைத்துத் திறமானநாகமென்றகிண்ணிமூடே. (சகo)

மூடியேசலசரியே வளைத்துக்கட்டி மூதண்டதிருவாணிபூசை செய்து,தேடியேமாலுகையான்மேலேவைத்து சலத்தையதில்நிறம் பவிட்டுயெறிக்கும்போது, வாடியேசலந்துவச்சுட்டுதானல் வாங்கி மறுதணணிவிடசூடுவாங்கும், ஓடியேஅலையாதேவெகுபதனஞ்சொ ன்னேனுத்தமனேயெரியுப்புரெண்டு தினமுந்தானே. (சகக)

தினஞ்சென்றுமதாரியொடுபற்பமாகும் சித்தர்புகழ்சுந்திரமே தின்றுயாகில், மனஞ்சென்றுசமாதியிலேகூர்ந்துப்பமும் வலுவாகு முன்றிரேகம்மலைநானீடோ, கனஞ்செய்யும் ரோய்களெல்லாம்கட லேபுக்குங்கர்மமெ டுஅந்தகம்கதறியோடுந், தனஞ்சென்றவறுமை யெல்லாம்போடிப்பாகுஞ், சகலகலைக்கியானமெல்லாந் தங்குந் தானே. (சகஉ

தங்குமடாசலசரியில் சரக்கெல்லாந்தான் காக்கவேயிந்கோர் வைபெருநூல்பாரு, பொங்குமடாவதமென்மைநோய்க்குமுன்னே பொல்லாதநோய்களெல்லாம்போகுந்தூரம், எங்குமடாஉன்றிரேகம் மேருவாரு மென்மக்காள்பெட்டெட்டுமெய்தும்பாரு, தொங்குமடாபழலையுப்புபட்டுதானல் சுகபற்பஞ்செந்தூரம்வேதையாமே.

வேதையென்ருல்சலசரியின்கழுவைநன்றாய்வெளிதிறந்துசொல்லிவிட்டேன்மயக்கமில்லை, பாதையென்றதுரிசிகுருவில்லாதார்க்கு பாடினேனிற்றெழிலைபரிந்துகாணும், போதையென்றநாதவிந்தை மறந்திடாதே பொன்னடியின்மூலத்தையிகழ்ந்திடாதே சூதையொன்றுமாட்டாதே பொய்சொல்லாதே சுருக்காக யின்னமொன்று துறையைக்கேளே. (சகச)

(கிரிச்சுன்னங்களாறுக்கும்யெண்ணெய்.)

துறையேதுகிரிச்சுன்னங்களாறுந்தீரச் சொல்லுகிறனேரண்டத்தெணணெய்யொன்று,முறையேதுதேங்காய்ப்பால்படிதானென்று முதிருமேயெலுமிச்சம்பழச்சாறென்று, குறைபேதுயீருள்ளிச்சாறேவொன்று கூட்டடாபசுவின்பால்படிதானென்று,நிறையேது கெஜனரிஞ்சிசார்தானென்று நீசேத்துத்தாளிதனிலப்பிலேற்றே.

ஏற்றுவாய்கற்கமதுவெந்தியஞ்சீரகமு மேலமதிமதுரமுடன்மிலாக்காய்கந்தம்,சாத்துவாய்வரையொன்றுகழஞ்சிமூன்றுதானறைத்துகலக்கியேமூன்றுநாளில், போற்றுவாய்மெழுகுபதந்தனிலிறுத்திப் பொடித்திடுவாய்குங்குமப்பூக்கழஞ்சிமூன்று, ஆற்றுவாய்கொண்டிடவேமூலவாய்வு மழச்சியுடன்கிரிச்சனமுமணுகாதெண்ணே.

பூசினியெண்ணெய்.

அணுகாதுமேகவட்டைஅந்திரதாக மகத்திவிக்குமின்னமொன்றுயறையக்கேளு, பிணியேதுபேரண்டத்தெண்ணெய்படிதான்ரண்டுபெரும்பூசினிக்காய்ச்சாறுபடிதான்ரண்டு, நணுகாதயீருள்ளிச்சாறுபடியொன்றுநாட்டெலுமிச்சஞ்சாற்படிதானென்று, சனியார்தயோரிதழின்சாறுவொன்று தாளிதனில்விடுகறஞ் சாற்றக்கேளே

சேளுநீவெந்தியமோபலந்தான்ரண்டுகெடியாகவரைத்திட்டுமயினமாக்கி, நாளுநீவடித்திடுவாய்கலசந்தனனில நல்லமீகாரோசனை

யுங்குங்குமப்பூத்தானுந்தாளுநீ சீரசம்வகையொன்றுக்குத் தப்பா மஞ்சிரண்டு பொடித்துப்போடு வாளுநீ யந்திசந்திகொள்வா யாகில் மகாமேகமென்றதெல்லாம் வாராதென்றே. (சகஅ)

சயத்திற்குயெண்ணெய்.

வாராதுமேகசுரம்வயிருரிவெட்டை வளர்மூலக்கிராணியோடு பிரமியங்கள் சேராது அக்கினியாம்நாதவாய்வுசெப்பரியநீர்க்கட்டு க்கிறந்துபோகும் நேராதுசீழ்மூலமாத்தமூலம் நெடுநாளைமலக்கட் டுவாட்சிமூலம் சாராயின்னமொருயெண்ணெய்தன்னைச் சாற்றுகி றேன்சயந்தீரத்தயவாய்த்தானே. (சகக)

தயவானபூவந்திப்படடைத்தானுந் தறித்திடித்துநாறுபலஞ் சலமீரெட்டு நயமாகயொட்டொன்றுய்க்குறுக்கிவாங்கி நல்லவா மணக்கெண்ணெய்ப்படிதான்ரண்டு இயலானபெண்ணெயோடுகியா முஞ்சேர்த்து யிரண்டுபலங்கஸ்தூரிமஞ்சள்தானும் மயமானகடுக் காயும்பலந்தான்ரண்டு வன்னிவேர்பலமறைத்து யெண்ணெய்தனி ற்போடே. (சஉ0)

இதுவுமது-பிள்ளைகட்குப்புகல

அறைத்திட்டுமெழுகுபகந்தன்னில்வாங்கி யதிற்கரியசீரகந்தா ன்பலந்தானென்று, நிறைத்திடவேபொடித்திட்டுவைத்துக்கொண் டுநேரமிருகாலிடைதானந்திசந்தி, கறைதிட்டகசரோகமிருமலீளை காசமொடுகல்வுளமாந்தைகண்டு, குறைத்திட்டுக்கசம்விழுதல்சுவா சகாசம் கொடியசுரந்தோண்ணூற்றூர் குடிப்போம்பாரே. (சஉக)

போமப்பாபாலருடசுழிகணங்கள் பொல்லாதயிரைப்புடனே கக்கல்வாயும், காமப்பாவிலாவிழுப்புசுழிமார்தங்கள் நலமன்றியி ரைப்புமந்தக்கோழைகட்டுப், தாமப்பாகோழையென்ற விப்புருதி யோடுதானாத்தமிருமலொடுபீனிசங்கள், ஓமப்பாபுளியுடனேமோ ருந்தள்ளி உண்ணயிந்தநோயில்லாதோடுந்தானே. (சஉஉ)

ஓடவேமேகமொடுசூலைபோக உயர்கருடன்கிழங்கெண்ணெய றையக்கேளு, போடவேகெருடனிடகிழங்குபலநூறு பொடியாக்கி யெண்ணிரண்டுபடிநீர்விட்டு, வாடவேரண்டுயுறவாய்க்காய்ச்சிவடி த்துவிடு பேரண்டத்தெண்ணெய்படிரண்டுதேடே, வேரோகணியுங் கரியசீரகமுஞ்சேர்மிளகும்வகையொன்று பலந்தானென்றே ()

ஒன்றுகயறைத்திட்டியடுப்பிலேற்றி யுத்தமனேசிறுதீயாயன லைமூட்டி, நனறுகும்மூன்றுநாள்மெழுகுபதமானால் நெல்லரவின்

கோரோசனையுங்குங்குமப்பூ, குன்றுமல்வகைக்குராண்கெழஞ்சிதூக் கிருப்பிரசங்கற்பூரங்கழஞ்சியொன்று, சென்றுடப்பொடித்திட்டுக் கலசந்தன்னில் சேரவேயெண்ணெய்தனைவடித்திடாயே. (சஉச)

சகலவியாதிகட்கும்

வடித்திட்டயெண்ணெய்தனைபலமைந்துகொள்ள வாதமென்ற தெண்பதுவுங்கிரந்திசூலை, பிடித்திட்டசிலேற்பனங்கள்தொண்ணீற் றூறும் பேசாதேயோடிமடாபெருங்கானகத்தில், நடித்திட்டாப் போலேபிழிந்தசாறுநாட்டி யிடியொன்றதனைவருக்குமுன்னே,கடித்திட்டபெழுகுபதத்திறுத்துப்போடு கனமானபத்தியந்தானுப்பு மாற்றே. (சஉரு)

உப்பைவிட்டுவென்னீருமன்னங்கொள்ளு யுத்தமனேமறுபத் தியமிருக்கவேணடும், அப்பைவிட்டுஉப்பையங்கேவறுத்துக்கூட்டு அங்கத்தில்கறுப்புவங்குமகலும்பாரு, கொப்பைவிட்டுகுதித்தமந் திபோலேயோடும் கூறுவேன்யெண்ணெய்விட்டுப்புளியைக்கூட்டு செப்பைவிட்டுபோனயந்துபோர்வேதான், தீராதநோய்களைல்லாந் தீருந்தானே. (சஉசு)

நவமூலத்திற்குஞ்சகலவியாதிகட்குமெண்ணெய்

தீருமேமூன்றுநாள் கொள்ளும்போது திறமாகமூன்றுநாள்மறு பத்தியமப்பா, காருமேநாற்பதுநாள்கரப்பான்கண்டங் கற்றடா யேரணடத்தெணணெய்மூழ்கு வாருமேவென்னீரைபரிமாற்றங்கள் வலுவானமூலநோய்த்தீரக்கேளு சாருமேகற்றாழஞ் சோறுவாங்கி தாக்கடாவெள்ளைபூலாஞ்சி புலாவேறின்பட்டைத்தூளே. (சஉஎ)

தூளிடவேமிசைந்தழுத்திப்பிழியத்தண்ணீர் துகளாகப்படி யெட்டுப்பாண-ஞ்சேர்த்து நாளிட்டபடிநாலுசிறுமித்தெணணெய் நற்றாழைவிழுதச்சாற்படிதாநாலு, வேளிட்டயிளநீர்தான்படியும் நாலு வெள்ளாட்டுப்பால்படிதாநாலுவாரு, தாளிட்ட அள்ளியுடச் சாறும்நாலு தானுன அறுசன்வேற்கியாழம்நாளே. (சஉஅ).

நாலாகயிவையெல்லாம் பாண்டஞ்சேர்த்து நல்லஅதிமதுரம துபலந்தானெட்டு மேலானகுன்றிவேர்பலந்தான்ரண்டு விளங்குகின்றயேலமதுபலந்தானென்று பாலினலிவைதன்னை யரைத்துப் போட்டு பாலகனேசிறுதீயிட்டேழுநாள்வை மாலானதெட்டான ளணலேமூட்டி மயினபதமாச்சுதென்றால்நிலைக்கக்கேளே. (சஉசூ)

நிலைத்திட்டக்குங்குமப்பூபலந்தானென்று நீபொடித்துவடி கலசந்தன்னிற்போடு மலைத்திட்டயெண்ணெய்தனைவடித்துக்கொண்டுவராகனிடையந்தி சந்தியறிந்தவர்க்கு குலைத்திட்டமேகமொடு யெலும்புருக்கி குலைவலியுமதிசாரங்கிராணிமூலங் குலைத்திட்டநீரிழிவுஅந்திரதாகம் சுரமஸ்திசுரமுதலாய்த்துலைந்துபோமே. (சஙo)

போமப்பாமூலத்தாலெழுந்தபேதி பொல்லாதசீழ்மூலம் ரத்தமூலம், ஆமப்பாவரமூலமிருக்குமூலமடித்தள்ளிகடித்துளையுமபானவாய்வு, ஒசப்பாசூரியனலெழுந்தச்சூடு முள்ளிரங்கிச்சீழ்மூலமுளைவுரத்தம், நாமப்பாயிவையெல்லாந்தீருந்தீரும் நலமாகயின்னமொன்றோநவிலக்கேளே. (சஙக)

## சகலநோய்க்குமெண்ணெய்.

நவிலுகிறேன்சிறுபுடலங்காய்ப்பலந்தானூறு நன்னாரிமூத்தக்காச்சிலாமிச்சம்வேற் புகலுகிறேன்சித்திரப்பாலாடையல்லிப்புன்னைக்குப்பூடுடவேபனையின்வேறும், நவிலுகின்றமாதளையோரிதழ்தாமரையு மறுகாசதாவேரியொடுபூலாவேறும், அகலுகிறபூலாவிழுதுநெரிஞ் சிகொற்றானன்படாதவகைபொன்றுக்கிடித்துவாங்கே

வாங்கியேகலந்தரண்டுபாண்டத்திட்டுவார்த்திடுவாயாற்றுநீர்படியெண்ணான்கு தாங்கியேதீயெரித்துயெட்டொன்றாக்கி தாளிதனில்வடித்துவிட்டுத்தனியெள்ளெண்ணெய் தேங்கியேயிளநீரும்பசுவின்பாலுஞ்சீராசெங்கழனீர்வில்வம்வல்லாரைச்சாற்ஓங்கியே ஆவாரைசிறுகீரைக்கொறறுளேைறிதழபுதமரையல்லிசெங்கழநீர்ச்சாறே.

சாறுகுமாணையுடநெரிஞ்சிச்சாறு தப்பாமல்வகைவகைக்குநாலுபடிவிட்டு மாறுமலடுப்பில்வைத்தனலைமூட்டி மைந்தனேனவதினந்தானூறவைத்து விறனகற்கமதுமலர்க்காய்கந்த மிளகுடனேவசுவாசிமதுரமேலம கூறனஜாதிக்காய்ப்பத்திரிகிராம்பு குன்றிவேற்பாகமசவகெந்தஞ்சேர. (சஙச)

சேரப்பாசிரகமுங்கொத்தமல்லி சிறுநாகப்பூவிடைப் ஞ்சா த்திரபேதி காரப்பாசெஞ்சந்தனங்கற்பூராவுங் காட்டாத்திப்புயபி னிகஞ்சாவித்து ஆரப்பாதக்கோலஞ்சுக்கிநாபி யத்திதிப்பிலிலவங் கமாசக்காயும் நேரப்பாவகையொன்றாகழஞ்சிரண்டு நீயாட்டுப்பா லதனிற்கறைத்துவாறே. (௪௯௫)

கறைத்துவிட்டுமூன்றுநாள்வடிக்கும்போது கலசத்திலிடிமரு ந்துசழறக்கேளு உறைத்துவிட்டேன் குங்குமப்பூ ஸ்தூரியல்லா லுத்தகோரோசனையும்புனுகுதானும் நிரைத்துவிட்டேன் கழஞ்சி ரண்டுபொடித்துப்போடு நீமெழுகுபதந்தன்னில் வடித்துக்கொ ண்டு குறைத்துவிட்டக்கழஞ்சொன்றுயந்திசந்தி கொள்ளவேமேக மெல்லாங்குடிபோம்பாரே. (௪௯௬)

குடிபோகுங்கிராமணிபத்துமதிசாரங்கள் குலமுறையாய்வரு கின்றமூலரோகம், அடிபோகும்பெரும்பாடுசலக்கிரிச்சு அரிசிரி பியிவைவெல்லாமகலும்பாரு, துடிபோகுங்கரப்பனொடுகண்டமாலை சூலையொடுமார்பாணியகுவைக்கட்டி, கடிபோகுநகுட்டமொடுகிர ந்திப்புத்துகாணுதகுடல்படுவன்பிளவைகாணே. (௪௯௭)

பிளவையொடுபவுத்திரங்கள்வங்குவெள்ளை பிலங்கெடுக்கும் விப்புருதியண்டவாய்வு, அளிவதென்னநாசிகாபீடத்தோ அரிகிரங் திவெடிசூலையாணியெல்லாம், களிவதென்னயென்றுசொன்னேன் மகோதரங்கள்கட்டோடேபோகவொன்றுகழறக்கேளு, தெளிவ தென்னநல்லெண்ணெய் படிதானெட்டு சீந்திவேர்கொடுவேலிதில் லம்பாலே. (௪௯௮)

சகலநோய்குட்டத்திற்குஎண்ணெய்.

பாலானதிருகள்ளிச்சதுரக்கள்ளி பாச்சானங்கொடிக்கள்ளி எருக்குக்கொன்றை வேலாகுங்கருவேலும்புங்குசங்கு வெள்ளறுகு நன்னாரிநத்தைச்சூரிஆலாவேர் புரத்திஅத்தியித்திவேம்புஅமுக்கிரு ஆடுதின்னாமூலிதானும் பூலாவேற்சீர்பூலாக்குப்பைமேனியொடுதலை கையாந்தகரைப்பீளைவேறே. (௪௯௯)

பீளையொடுயிலைக்கள்ளிச் சிவனார்வேம்பு பொற்றலைகையாந்த கரைச்சின்னியோடு, கோவையறுந்தேத்தான்வேற்காற் கட்டானுங் கொடிதூதுவேளை செஞ்சூரைப்பட்டை, வேளைவேற்நாய்வேளைமு டக்கொற்றான்வேற் விடத்தலைவேற் உசிலய்வேற்வெள்ளைக்குன்றி, காளையேதேள்கொடுக்குங் சார்த்தைரண்டு கழர்ச்சிவேறமூள் சிக் கருடன்கிழங்கே. (௫௦௦)

கிழங்கென்றசாரணைமாவெருக்கினோடு கேள்புரசுமுருச்குமுல்லையிரண்டுதோண்டை, வழங்கிநின்றகற்றாழைநாட்டுமெல்லி வன்னியாலியமொடுகருகுவாயும், புழுங்கிநின்றபொன்முசுட்டை யவுரியோடுபூவரசுநிலவாகையப்பைநோவை, முழுகுகின்றகொளுஞ்சிமிளகழஞ்சிமகிழ்புன்னை முத்திருக்குஞ்செவிசங்கன்குப்பிவேரே.

வேரென்றஅவுரிஉள்ளிமிளகுநாபி வெங்தோன்றிதிருவிஷமுந்தாரங்கெந்தி, காரனென்றசீரகமும்நாலுசுக்கு கார்போகமேலங்கஸ்தூரிமஞ்சள், பாரென்றபீநாறிகரப்பன்பட்டை பார்செவுரிவீரமொடுசூதம்பூரம், சீரென்றவலம்புரிக்காய்வசம்புவாளம் சேருநீவெட்டிமுத்துப்பூவந்திக்காயே. (சசஉ)

காயானசாதிக்காய்கிராம்புபத்திரி காராவின்ரோசனை யூமத்தின்வித்து, தாயானஅகில்கட்டைதேவதாரஞ் சந்தனமுந்திரிபலையுந்திரிபலாதி, தீபானசண்டைக்கஞ்சி அபினிக்காயும். திப்பிலிமூன்றுஞ்செந்நாயுருவிசேரு, பேயானதும்பைபொடுகவுதும்பை நொச்சி பெருத்தும்பைவகையொன்றுபலந்தானென்றே. (சசங)

பலமொன்றுவேர் வகைகள்கிறுத்துக்கொண்டு பாய்ச்சடாகடைச்சரக்கிற்பலத்திற்பாதி, செலஞ்சற்றுமில்லாமலுலர்த்திக்கொண்டு சேரவேயிடித்துத்தூளாகவாங்கி, பிலமென்றபூர்வல்லிக்கொடி செங்கொட்டை பேசாதேபலம்பத்துப்பச்சையாக, தலமென்றகல்லுரலிலிடிக்கும்போது தாக்கப்பாமுன்றாளேச்சிறுகத்தூவே.

சிறுகவேதூவியிடியெடுத்துக்கொண்டு சேரவேவெள்ளாவிச்சட்டிதனில், இருகவேதூளைவிட்டுஎண்ணெய்விட்டு இரவிமுகங்காணவைப்பாய்மண்டலந்தான், குறுகவேபெரும்பாம்பு சாரைப்பாம்பு கொடியநல்லபாம்பினிடமூன்றுகண்டம், மருகவேகரண்டிதனிலெண்ணெய்விட்டு மடியாமல்சர்ப்பகண்டஞ்சிவக்கக்காய்ச்சே

காய்ச்சியேசட்டிதனில் மருந்தோடிட்டுக் கலந்துரவிகரணையிலேதெளிந்தவெள்ளை, வாய்ச்சுதேஎன்றுசொல்லிப்பதநம்பண்ணிவாரப்பாகாற்கழஞ்சியந்திசந்தி, போச்சுதேமண்டமே சொண்டபோது பிணியெல்லாந்தீர்ந்ததடாபெருமைமெத்த, பாய்ச்சியேகால்காங்கன்விரலுக்கெல்லாம் பழத்ததொருவாழையிலை போட்டுக்கட்டே. (சசரு)

காட்டடாகாத்தடனேவெய்யிலுமாகா காலைபந்தியெண்ணெய்விட்டுக்காக்கச்சொல்லு, விட்டிடாய்ப்புளியுப்புக்குளிர்ந்ததண்ணீர்

விகமானபதார்த்தமெல்லாம்விரைந்துதள்ளு, மட்டடாபுதுப்பா ண்டந்தன்னிற்பொங்கி வார்த்துண்ணப்பசுவின்பால்வெந்நீராகும், மெட்டடா எண்ணெயிடவாசம்பட்டால்மேதினியோர்நோயெல்லா விலகிப்போமே. (சசஎ)

பாம்புத்தயிலம்.

விலகுமடாவிரிகுட்டங்குறை குட்டங்கள் வெண்புள்ளியழி குட்டமுதலாயுள்ள, பலகுட்டமழிகிரந்திவளராம்புத்து பாங்கிப் புண்வெடிசூலைபலவிஷங்கள், இலகுமேமேனிபதுபொன் போலா கும் என்மக்காள்சண்டாசபற்பத்தோடு, நலதுஅரிதாரபற்பங்கூட் டிக்கொள்ளநாடாது பிணியனைத்தும் நாடிக்காணே. (சசஅ)

காணவேவெண்ணுத்திச்சற்பந்தன்னைக் கண்டித்துஉலர்த்திவி டுகருதக்கேளு, தோணவேயிறகுநேர்பூரஞ்சாரந் தானத்திவெள்ளை விறஞ்சமனே தூக்கி, நாணவேயிதையுலர்த்தியிடித்துக்கொண்டுநன் ருகக்குழித்தயிலமிறக்கிவாங்கி, பேணியேபாண்டத்திற் கறுக்க வாங்கிப் பின்சாரநீர்விட்டு இடித்திடாயே. (சசகூ)

இடித்ததொருமருந்தெடுத்துப்புடத்தைப்போடு என்மக்கா ள்வெந்நீராயிருக்கும்பாரு, கடுத்ததொருநீரதனில்கழஞ்சிவாங்கிக ண்டாயோமுன்றயிலங்காற்கழஞ்சுவிட்டு, விடுத்ததொருஅந்திசந் திமண்டலந்தான் விரும்பியேகொண்டவர்க்குவிரணகுட்டம், மருத் ததொருபதிநெட்டுமகன்றுபோகு மப்பநேபத்தியந்தா னறையக் கேளே. (சருo)

அறையுறேனுள்ளியொடுகெடுகாகாது அப்பனேபுளியாகாதறி ந்துகொள்ளு, பறையுறேன்கட்டினதோருப்புமாகும் பாலாகும் பெண்பழமுப்புளிமாகா, நிறையுறேன்சீரகமுங் கொத்துமல்லி நேரானமுருங்கையுட னவரைப்பிஞ்சாம், குறையவேதூதுவளை மணத்தக்காளி குறவையொடுவெள்ளாட்டு வற்றல்கூட்டே. (சருக)

கூட்டலாம்புராவோடு முயலின்வற்றல் கூட்டாதேகரப்பனெ ன்றதெல்லாந்தள்ளு, மாட்டடாசிறுபயறுதுவரையாகும் மைந் தனேவெள்ளாட்டுப்பசுவின்னெய்யாம், தேட்டடாதலைமுழுகப் பஞ் சகற்பஞ்சேருநீவேபபெண்ணெயாவினெய்யாம், நாட்டடா அறப் புச்சிலைசிறுபயறுவெந்நீர் நன்றாகவிந்தமுறைநாடிக்காணே. ()

சகலகுட்டத்திற்கும்.

நாடியேசுந்தரமேசொல்லக்கேளு நாட்டிலுள்ளகுட்டமெல்லா மனைத்துந்தீர, வாடியேமயங்காதேநாகஞ்சாரை மலைப்பாம்புஇம்மூன்றுவெவ்வேறுசு, தேடியேபுதுப்பாண்டந்தன்னிலிட்டுச் சிறுமிளகுதனிலவங்கப்பட்டைதானும், நேடியேகூடவிட்டுவாயைமூடி நிசமாகமுட்டளவு குழிதான்வெட்டே (௪௫௩)

வெட்டினதோர்குழிதன்னிற்பாண்டம்வைத்து மேல்மூடிமண்டலமேகருந்துவாங்கி,விட்டினியசலத்தாலேகழுவிப்போட்டு வெய்யலிலேகாயவைத்துப் பதனம்பண்ணு, தெட்டினதோர்சமையலில் வெந்தரிசிபொங்கித்திருகரிக்குமிளகிலைந்துசேர்த்துக்கொள்ளு, கட்டினதோர் சங்கிலையிலிட்டுப்புக்காய்ச்சிக கலங்காதே யரையுப்புக் காணுங்காணே. (௪௫௪)

காணவேபுளிகசப்புக் கரப்பானபண்டங் கருதாதேமண்டலந் தான்காற்றடாதே,வீணப்பாபத்தியந்தானில்லாவிட்டால் வெறும்பாழாய்போகுமடாவிள்ளக்கேளு, பூணப்பாபெண்வாடை யாகாதாகா புங்கெண்ணெய் நல்லெண்ணெய்வாடையாகா, தோணப்பா குட்டமது குறைநோயெல்லாஞ் சூரியனைக் கண்டபனிபோலாமெண்ணே. (௪௫௫)

எண்ணவேகடலைபைந்துபருப்போலிட்டு இதுவுடனேகொண்டவர்க்குத்தாதுமீறும், பண்ணவேநூனெலலாம் வெளியாய்த்தோணும்பகராதேதொழிலைபெல்லாம்நூல்காட்டாதே, தண்ணவேநூல்கேட்டுஅரசர்வந்தாலதானில்லையென்றுசொல்லிமறைத்துப்போடு, உண்ணவேகொடுத்தாலும்நூல்கொடாதேயுத்தமனேசொல்லாதே புத்திதானே. (௪௫௬)

புத்திதானுண்டானால்பெரியோனவாய் பொய்புரட்டுக்காமத்தால்நரகில்வீழ்வாய், பத்திதானுண்டானால்நோய்கள்தீரும் பலிக்குமடாவாதமொடுகற்பந்தானும், பித்தராய்த்திரியாதேகருவைபாரு பேசாதேயொருத்தரிடம்வாயாடாதே, எத்தராய்ப்பெரியோர்கள் சோதிப்பார்கள் எளிதாகச்சொல்லிவிட்டாற் சாபிப்பாரே.(௪௫௭)

சாபங்கள்நிவர்த்திசெய்யப்பூரணத்திற் சாற்றினேன்வெளிதிறந்துசார்ந்துபாரு, பாவங்கள்தீரவேகர்மகாண்டம்பாடினேனதிலொளிப்பொன்றுயாகசாலை, சோபங்கள்தீரவேயிந்நூலதன்னிற் சொல்லுகிறேன்மாணுக்காள்சுருதிபொப்பாம், தீபங்களாகுமடாயிந்நூல் தானுந் திறமுடையசுந்தரமே செப்பக்கேளே. (௪௫௮)

யாகசாலை.

செப்பமாய்க்கருப்பில்லாபூமிதன்னிற் செய்யவேயங்குலமாயிரத்தொண்ணூறு, ஒப்பமாய்நாற்சதுரம்வாசல்நாலு முள்வட்டங்கூரமுருவாய்நீளவாசல், இப்பவேயுட்சதுரம்ரேகைமூன்றுஎண்கோணமஷ்டகும்பத்தியல்பதாகும்,அப்பனேநடுவட்டமதனிற்குள்ளேயரிவாயநீநால்வாசல் சதுரம்நாலே, (சடுசு)

வாசலுக்குள்விலாசத்தையொன்பதாக்குமைந்தனேநிருதிதிக்கில்சிதம்பரத்தைவைத்து, ஈசனென்றகும்பத்தை யதின்மேல்வைத்துஎன்மக்காள்தென்வடக்குஈசானத்தை, நேசமென்றநாற்பத்துமுக்கோணந்தான் நீபோடுசத்திக்கும் நடுமையத்தில், வீசமென்றஈசானமூலைதன்னில் மேலானஅஷ்டசத்திபீசம்போடே. (சசா0)

போடப்பாஅவரவர்கள்மூலபீசம் புகழானஅஷ்டகும்பம்வைத்துநீயும், சாடப்பாகிழ்வாசல்கணபதியுங்கந்தன் றப்பாமல்மேல்முகத்திலமதங்கிதிருவாணி, தேடப்பாதென்வாசல்வீரபாகுதேவரொடுவயிரவனுஞ்சேரப்போடு, நீடப்பாவடவாசல்நீலகண்டிநெட்டூரானபத்திரகாளியாமே. (சசாக)

ஆமப்பாயிவ்வண்ணமாபானித்து அப்பனேமுப்புரிநூல்பட்டுவஸ்திரம்,தாமப்பாகும் வஸ்திரஞ்சேரப்போட்டுதானுனமாங்கிளைதேங்காயும்வைத்து, ஈாமப்பாபரிமளங்கள்சவ்வாதுபுனுகுநறுமஞ்சள்சந்தனமுஞ்சுகந்தஞ்சாற்றி, ஓமப்பாமந்திரத்தா லர்ச்சனையுஞ்செய்து உத்தமனேபூரணகூட்சத்தைத்தாக்கே. (ருசாஉ)

தாக்கப்பாபரிதகட்டில் மாரணத்தைதக்கீறித் தப்பாமல்நடுமையமஷ்டகோணம், ஆக்கடாஅதனடுவிலனேககூட்ச மப்பனேயெண்கோணத்தெட்டெழுத்துப்போடு, நோக்கடாஎட்டெழுத்தும் விபரந்தன்னை நவலக்கேள்மேல்கோணம் அங்-ரங்-கென்று, வீக்கமடாமறுகோணம் இங்-ரங்-கென்று வீதிமறுகோணத்தில்-உங்-ரங்கென்றே. (சசாங)

என்றுநீமறுகோணம்-எங்-ரிங்கென்று என்மக்காள் மறுகோணம் - ஒங்-ரங்கென்று-சென்று, நீமூன்றில்-ஐயுங்-கிலியும்-சவ்வும்-சேர்த்தெழுதிச்சத்திசத்திக் கும்பந்தன்னிற்போடு, குன்றதேபூமிதனில்மாயோனுக்குக் குறைவில்லாபிசமி ட்டர்ச்சனையுஞ்செய்து, நன்றாகஆகாயபிர்மபூசை நல்கிடுவாய்தியானமதில் நாடித்தானே.

தானென்றபூரணசூஸ்திரத்தைப்பாரு தப்பாமற்பூசைவிதிகர் மகாண்டந், தேனென்றமச்சமுனிபெருநூல்தன்னிற் செப்பினாவ ரவர்தம்மூலபீசம், மானென்றயெந்தனிடநூல்கள்பாரு மைந்தனே யெந்தனிடகலக்கியானம், பாருநானென்றகொங்கணவாகடைக்கா ண்டத்தில் நாட்டினார்சக்கரமுமட்சரமுந்தானே. (௪௬௫)

அட்சரங்களறியவென்றால்பலநூல்பாரு அகங்கன்னியரசங்க ரனியாசபாரு, பட்சமுள்ளஆசானை யடுத்துக்காரு பணங்காசியிச் சையென்றால்பரவித்தள்ளு, நிட்சயமாய்ச்சொல்லிவிட்டேன்கர்மந் தீர்க்க நினைவாகவுமத்தைச்செய்துதீரு, உச்சரிக்கமந்திரத்தியானம் வேண்டு முலகத்திற்சாபநிவாரணைகள்செய்யே. (௪௬௬)

செய்யவேகர்மவினைதிருந்தீருஞ் சிவபூசைபராபூசைவிஷ்ணுபூ சை அய்யனேகணபதியுங்கந்தன்பூசை, அஷ்டதிக்குப்பாலகருமஷ் டசத்திசைவசமாய்க்காளியொடுவடுகன்பூசை, கட்டாகதிருவாணி பூசைசெய்து உப்பவேதிபானமொடுநைவேத்தியங்கள் யுத்தமனே அன்னமிடக்கர்மமபோமே. (௪௬௭)

போமடாவேதியருக்கன்னதானம் புகழாகயின்றமட்டுஞ்செய் துவாரீ, ஆமடாதர்மத்தால்கர்மந்தீரு மடங்காதநோயெல்லாம்மக ன்றுபோகும், நாமடாசொல்லிவிட்டோம் பொய்யோயில்லை நல மானமருந்துசெய்துநாடிப்பாரு, நாமடாமருந்திற்குதருவோவொ ன்றுஞ் சாற்றுகிறேன்திருசுகுருசார்ந்துகேளே. (௪௬௮)

(திருசுகுருசெய்நீர்)

சார்ந்துகேள்நவச்சாரம்பூச்சாரந்தான் தனித்தனியேசமனிறு த்துக்சல்வத்திட்டு, கூர்ந்துகேள்கைவிடாதறைக்கவைப்பா கொடு மைமெத்தநெட்டேறிவேகும்பாரு, சேர்ந்துகேள்சாகுமட்டு மறை த்துக்கொண்டு செப்பினேனெய்காட்டித்துலக்கியிட்டு, வார்த்து கேள்உலையில்வைத்துசிறுகவூதிவறுத்திடவேசாரமதுமடங்கிற்றுமே

ஆமப்பாமெழுகாகியிருக்கும்பாரு அப்பனேசுத்தசலந்தன்னிற் கேளு, ஓமப்பாஒன்றரையாம்படிநீரப்பா உத்தமனேயதில்கறை த்து தெளியவைத்து, தாமப்பாதெளியவிறுத்துக்காச்சாவுப்பாந் தனைப்பின்கான்றன்னிலிட்டுப் பணியில்வைக்க, நாமப்பாமூன்று நாள்ஜெயநீராகும் நலமானசுன்னநீர் நாடிப்பாரே. (௪௭௦)

நாடிப்பாரின்னீரையொளித்தார்சித்தர் நான்சொன்னேன்றிருமூலநாயர்சொனனார், தேடிப்பார்மற்றநூல்தெளிவோயிலலை செகத்திலேசித்தரெல்லாமறைத்திட்டார்கள், மூடினார்சாரத்தின்சுன்னநீரை முறையறிந்துசெய்தவரேசித்தராவார், ஆடிப்பாரெத்தொழிலும் பொய்யாகாது அப்பனேசித்தாகுமறிந்திடாயே. (௪௭௧)

அறிந்திடவேயின்னீரில்துருசிதன்னை அப்பனேபாக்குபோலுடைத்துநீயும், சிறந்திடவேயின்னீரைப்பீங்கானிலிட்டு திறமான துருசியிட்டுமேலுமூடி, சிறந்திடவேசீலமண்துலர்த்தி நீபோடுபூப்புடத்திற்றிசைநாளப்பா, திறந்துடனேநீயெடுத்துரவியிற்போடுதிறமானகண்டாரதுவெளுக்கும்பாரே. (௪௭௨)

வெளுத்திருந்ததுருசுதான்கழஞ்சுபத்து வீரமொடுபூரமப்பாபுழுகுங்கேளு, களித்திடவேவகையொன்றுகழஞ்சியொன்று கல்வத்தில்விட்டரைத்துவில்லைபண்ணி, நெளித்திடவேயுமியோட்டிலூதுவூது நேரானகண்டாரதுசுன்னமாகும், முளித்திடவேகடுங்கார மெத்தக்கேளு மூவிரண்டுக்காய்ச்சலுப்புப்பலந்தாரன்பத்தே. ()

பத்தாகும்கம்பியுப்புமூதண்டப்புளிதான் பகரவேபலமெட்டுசீனமொன்றுசத்தாகும், பூனகந்துஞ்சுருடன் தானுணநவாச்சாரங்காரந்தானும், வித்தாகும்வகையொன்றுபலந்தானென்று விளங்கவே யொன்றாகயரைத்துக்கொண்டு, சித்தாகயோட்டிவிட்டுக்கொளுத்தச்சுன்னஞ் செப்புவேனிறுத்துநீபொடித்திடாயே. (௪௭௪)

பொடித்தசுன்னந்தனக்குபதினாறிலொன்று பொடிபண்ணிசாரத்தைக்கூடச்சேரு, எடுத்துமதைபீங்கானிலிட்டபின்பு என்மகனே மூன்றுநாள்பனியில்வைக்க, கடுத்ததுவுஞ்செய்நீராம்படிகாம் வாங்கி கனமானபீங்கானுஞ்சாடிவார்த்து, மடித்தவண்டவெண்கருதான்படிதானென்று மாவெருக்கன்பாலதுதான்படிகாலாமே. ()

(அஞ்சுசுன்னக்குகை)

காலணையிம்மூன்றுங்கலக்கிவைத்துகடுங்காரமேறுதற்குவகையேகேளு, வாலாகுமண்டோடுசங்குநத்தை வளர்ச்சிப்பிநண்டோடுவெள்ளைக்கல்லு, மேலாகயிவையாறுங்கல்வத்திட்டு வெடியுப்புச்செயநீராலரைத்துகொண்டு, சேலாகும்வில்லைதட்டிரவியிற்போடு திறமாகநீரிட்டால் செப்பக்கேளே. (௪௭௬)

கேளடாவட்டோட்டில்சுன்னநீறுகேளிரண்டுவிரற்கனமாய்ப்பரப்பிவைத்து, வாளடாவில்லைவைத்துமேல்நீரிட்டு வட்டோடுமேல்மூடிச்சீலைசெய்து, தாளடாசெஜப்புடத்திலிட்டாயாகிற்றப்பாது கொடியசுன்னந்தாக்கிப்பாரு, நாளடாகாத்தாடாதிடத்தில்வைத்துநன்றாகயின்னமொன்நறுவிலக்கேளே. (சஎஎ)

நவிலுவேன்கடல்லுறைதான் பலந்தான்ரண்டு நன்றானசீனமொன்றாகூடனென்று, புவியிலேயிணங்கனென்றுகல்லுப்பொன்றுபுகலவைந்துங்கல்வத்திலிட்டபின்பு, குவியவேயிணங்கநீர்தன்னிலப்பா கொட்டிவறுசுன்னமதிற்பலமறைதானிட்டு, கவியவேகலக்கிவைத்துதெளிவைவாங்கி கட்டாகவைந்தையுந்தானறைத்திடாயே.

அறைத்திடுவாய்நாற்சாமம்வில்லைதட்டி அப்பனேகடுரவியிலுலர்த்திக்கொண்டு, நிறைத்திடுவாய்சுன்னத்தினநடுவில்வைத்து நீமூடிசீலைசெய்துகன்புடமேபோடு, விறைத்திடவேகுளிர்ந்தபின்புஎடுத்துவில்லி வெஞ்கருவின்தெளிவிறுத்துபறைத்துக்கேளு, உறைத்திடவேகாசுபோல் வில்லைதட்டி வூதிடுவாய் தணலுமியா லோட்டிலாதே. (சஎகூ)

ஊதையிலேகொடியதொருசுன்னமாகும் உத்தமனே அஞ்சுசுன்னக்குகைதானப்பா, பாதையிலேமுன்னவத்தகடுங்காரமீறில்பாலகனேயிச்சுன்னஞ்கழஞ்சிபோடு, வேதையிலேயூரமொடுகாரஞ்சாரம் வீரம்பூநீர்ச்சவர்க்காரச்சுண்ணல், வாதையிலேசினமண்டசுன்னப்வெள்ளை மாகூடஞானிவெண்மலமுங்கூட்டே. (சஅ0)

கூட்டடாஉரத்தோடுகழஞ்சிவீதங் குறையாமல்புழுகுடனேபொடித்துப்போடு, நாட்டியேமூன்றுநாளந்திசந்தி நலமானகவர்மத்தாலசைந்துமூடு, மாட்டுவாய்முன்வைத்ததுரிசிற்குத்தி மகத்தானரவிதனிலேமூன்றுநாள்வை, நீட்டியே அஞ்சுசுன்னக்குகையில் வைத்து நேராகவூதிடவேசுன்னந்தானே. (சஅக)

சுன்னந்தானூதற்குத்தெரியாவிட்டால் சுகமாககிசப்புடத்தில்சுன்னமாகும், என்னந்தான்குருவண்டுகூடச்சேரி விச்சுன்னம்வாத்துக்காதியாகும், மன்னவந்தான்தொட்டதெல்லாஞ்சுன்னஞ்சுன்ன மகத்தானதுரிசிறுதான்கொடுமைமெத்த, தின்மைபெறவிதின்பெருமைஆயிசொல்லக் செய்தியினுலகத்திற்செப்பினேனே.

(லிங்கமெழுகு)

செப்பினேனெளிப்பில்லைசந்திரமேகேளு திறமானவீரமொடு பணவிடைதாதெனன்று, தப்பில்லைமுன்செய்தஜெயசாரவுப்பதன் னிலொருபணவிடை தான்ரவியினுப்பு, ஒப்பில்லலாதருசிநிடச்சுன் னந்தானு மொவ்வொன்றுபணவிடைதான்பொடித்துக்கொண்டு, இப்புவியில்பூரமொன்றுபுழுநதொன்று மியல்பானசீனமொன்றுச வ்வாதொன்றே. (சஅங)

ஒன்றோன்றுபணவிடைதானெட்டுஞ்சேர்த்து யுத்தமனேமதி த்துமேயெருக்கன்வாலால், நல்றென்றுகலக்கிவைத்துப்பார்க்கும் போது நாழிகைக்குள்சுத்தசலமாகும், அன்றன்றுலிங்கத்தைசுத் திசெய்து அப்பனேபால்வெள்ளீறதன்னில்தோய்த்து, என்றுநீயி னுப்பைநெய்யில்தீபத்தில்வாட்டு எளிதல்லமெழுகாகுமாகுந்தாமே

(லிங்கமெழுகுமால்தேவிவங்கக்கட்டு)

மெழுகெடுத்துப்பதனமாய்வைத்துக்கொண்டு மேலானமால் தேவிசுத்திசெய்து, பழுதில்லாபாம்தண்ணீர்தன்னில்தோய்த்துப் பாலகனேதீபத்தில்வாட்டுவாட்டு வெளிதல்லமெழுகாகுமெடுத்துக் கொண்டு யேற்றடாவங்கத்தைச்சுத்திசெய்து, வளிதல்லவங்கமது கட்டிப்போகும் மகத்தானகட்டிதுதான்வங்கந்தானே. (சஅரு)

வங்கத்திலோர்பலந்தானிறுத்துக்கொண்டுமைங் தனேகுகை யிலிட்டுருக்கும்போது, [illegible]கத்தின்மெழுகதனைதங்கரேக்கில் நீபொ திந்துப்பத்துக்கொன்றீய்ந்தாலப்பா, தங்கத்தின்மாற்றுபத்தரை தானப்பா தப்பாதுசின்மயமேசாட்சியாகும், பங்கமில்லாதொழி லப்பாயின்னங்கேளு பால்தெளிந்ததண்ணீரின்பருவந்தானே. ()

(சவுரிமெழுகு)

தானென்றசவுரிதனைசுத்திசெய்து சார்வானசலந்தன்னிற்று வைத்துவாட்டே, வேனென்றமெடுத்துக்கொண்டு விளங்கவேஅய ம்பத்திலொன்றுகூட்டி, தேனென்றகாரமிட்டுஉறுக்கினுக்கால் செ ப்பாதேதங்கத்துபத்தரையுமாகும். ஊனென்றசெந்தகத்தைதுவை த்துவாட்ட யுத்தமனேமெழுகாகுமுகந்துசெய்யே. (சஅஎ)

(கெந்திமெழுகுசகலசரக்கும்வேதை)

செய்யடாகெந்தகத்திலனந்தம்வேதை திறமானபாஷாணமெ ழுகுமாகும், வையடாவீரமதுதுவைத்துவாட்ட மைந்தனேமெழு காகும்வேதைகோடி, உய்யடாமனேசிலையுந்துவைத்துவாட்ட யுத் தமனேமெழுகாகுமின்னங்கேளு, அய்யடாகண்டரொடசரக் கெல் லாந்தான் அப்பனேதுவைத்துமெள்ள வாட்டுவாயே. (சஅஅ)

வாட்டையிலேமெழுகாகும்வேதைகோடி மைந்தனேயுட்கொ ள்ளதேகம்பொன்னுங், கூட்டையிலேநோயெல்லாங் கடலேபுக்குங் குடிகெடுக்கு மூடருக்குக்கூறொண்ணது, நீட்டையிலேகல்லுமுதற் குகையிலாடும் நிசமாகச்சொல்லிவிட்டேனினைத்துப்பாரு, எட்டி லேயெழுதிவைத்தாற் பலனேதுண்டோ யியம்புவேன்கந்தகத்தி னியல்புகேளே. (சஅகூ)

கேளப்பாநரகத்தைச்சுத்திசெய்து கெடியாகப்பலமொன்றுயு ருகும்போது, தாளப்பாகெந்தமெழுகொன்றுதாக்க தான்மாற்று அஞ்பதடாதாக்கிப்பாரு, நாளப்பாதாம்பிரத்தில்பத்துக்கொன்று நாகத்தையீய்ந்திடவேதசமாற்றுகும், வேளப்பாவெரித்தசிவ னு மைக்குச்சொன்னர் மேதினியிலுள்ளவர்க்காய் விளம்பினேனே.

விளம்பினேன்பாஷாணமெழுகுதன்னை மேலானதாம் பூரத் தையீய்ந்தாயானல், உளம்பிலக்கும்வெள்ளியுடவயதுமெத்த யுல கத்தில்காட்டிலுலுயிருக்கினம், வளம்பெருமாந்துரிசினுடச் சுன் னந்தன்னில் மைந்தனேவீரமுடன்புழுகுஞ்சேர்த்து, குளப்புபோ ல் மத்தித்துதாளகத்திலப்பிக்குணமான அஞ்சுன்னக்குகையிலூதே

ஊதையிலேயுமியோட்டிலூதயூது உயர்ந்தொருமல்லிகைப் பூப்போலநீறும், பாதையிலேவெகுபாதைசாரநீரால் பாடவென் றுல்யென்னுலுமுடியாதையா, வேதையிதிலெடுத்தாடவேண்டு மெ ன்றுல்மேதினியுங்கொள்ளாதுமலையோயில்லை, போதையிலே நா தாக்களறியமாட்டார் புனலானசாரத்தின்புதுமைதானே. (சகூஉ)

(சத்தியுப்புதீட்சை)

புதுமைகேள் ஊசிநீர்படிநானெட்டு போட்டாக்கால்சுன்னம் நீர்படிதான்ரண்டு, கதுமைபெறகலக்கிவைத்து தெளிவைவாங்கி

காசினியில்மலைச்சாற்பிற்பூநீர்வாரு, பதுமனென்றதெளிந்த நீர் தன்னைவிட்டு தகருவேன்மூன்றுசினங்கலக்கிவைத்து, நிதுமமென்ற பீங்கானிற்றெளிவைவாங்கி நீரவியில்போடுமுதற்றீட்சையாமே. ()

தீட்சையதுதினம்பத்துக்காயவேண்டுந் தினமானசவர்க் காரஞ்செய்யவேண்டுங், காட்சிபெறுங்கற்சுன்னமறியவேண்டுங். கற்பமதுகொண்டுமுத்திச்சேரவேண்டுந், தாட்சியில்லாதாயினிடப் பூசைவேண்டுஞ் சங்கற்பயோகத்தைச்சாரவேண்டும், ஆட்சிபெற சிவபூசையறியவேண்டும் ஆகாயவுப்பறிந்தோன் ஞானியாமே. ()

(ராமதேவர்ஆயிரத்தில்வகாரங்காண்க)

ஆமப்பாராமதேவராயிரத்தி லாகராசகலதீட்சை நன்றாய்ச் சொன்னார், தாமப்பாதீட்சைசெய்தகல்தானென்று தப்பானகல் லுப்புச்சரிநேராக, வாமப்பாகல்வத்திலிட்டுக்கொண்டு மாட்டியறைகம்பியுப்புச்சரிநேராக, நாமப்பாவொளிக்கவில்லை சாமம் ரண்டு நலமானமுதல்தீட்சைப்பூநீற்போடே. (௪௬௫)

போடப்பாகம்பியுப்புக்கெட்டிலொன்று போட்டறைத்து வில்லைகட்டிரவியிற்போடு, நாடப்பாதினம்பத்துக்காய்ந்தவில்லை நன்றாகநீரிட்டாலோட்டில்வைத்து, ஓமப்பாமேல்மூடிச் சீலைசெய்து உத்தமனே குழிக்குள்ளேவராகபுடம்போடு, சூடப்பாகுளிர்ந்த பின்புயெடுத்துநீயுஞ் சுருக்காகக்கல்வத்திலிட்டு ஆட்டே. (௪௬௬)

ஆட்டுவாய்கடுங்காரசெயநீர்விட்டு அதட்டியறைசாமமொன் றாயானபின்பு, பூட்டுவாய்துட்டதுபோல்வில்லைதட்டிப் புகல்ரவியிலேழுநாள்காயப்போட்டு, மாட்டுவாய்கடுங்காரசெயநீர் குத்திமகத்தானசுடுரவியில்வாரம்போடு, நாட்டுவாயுமியோட்டில்வெளுக்கவூது நன்றாகக்கடுஞ்சுன்னங்காரமாச்சே. (௪௬௭)

சவர்க்காரத்திற்குவெண்ணெய்விட

ஆச்சப்பாயிச்சுன்னம்வழலைக்கொம்பு அடங்காதசரக்கையெல்லாமடக்கிக்கொல்லும், பேச்சப்பாசவர்க்காரஞ்செய்யும்போது பேராக யெண்ணெய்விடும்பருவந்தன்னில், காச்சப்பாகாரெள்ளி னெண்ணெய்படி காலிற்கற்சுன்னங்கழஞ்சிபதினாறுபோடு, பாச்சப்பா யெண்ணெய்விடும்பருவஞ்சொன்னேன் பங்கையன்மாலறியாப்பரமன்சொல்லே. (௪௬௮)

சொல்லென்றகாரெள்ளினெண்ணெயேது சுருதியொளிபடி
யெனக்குச்சொல்லுமையா, அல்லென்றபிருட்டுக்குளொளிபோல்
சொன்னீரதுதெளியயென்குருவேகடாட்சமாக, இல்லென்றபிருள்
நீக்கியடியேனுக்குயிது கருவேதெளிபாகயியம்பவேண்டும், கல்லெ
ன்றமனமிறங்கிக்கருணைகூர்ந்து கடாட்சிக்கவேண்டுமென்று பணிந்
திட்டேனே. (சகூகூ)

பணிந்திட்டசிறுபிள்ளாப்பகரக்கேளு பாரிலுள்ளோரிக்கரு
வைப்பகரொண்ணாது, அணிந்திட்டநாதவிந்தாலுருவேயாகி யது
தலமும்பருவத்தேயிமைப்பேபானால், குணிந்திட்டயறுகுதள்ளி
நோக்கியப்பா கூறுமறகல்லுாலிலிடித்துக்கொண்டு, தணிந்திட்டக்
கையழகும் பாண்டத்திட்டுச் சராநீர்படியெட்டுத்தாக்கிடாயே. ()

தாக்குவாய்காரமிருத்தேங்காய்மட்டுங் காஞ்சோரிகொம்புனு
ஃஏரிநேர்பாகம், நோக்குவாயடிபத்தாதிளகக்காய்ச்சி நகலுவேன்
தடுகுமெழுகாகும்போது, தூக்குவாய்துணியிலிட்டுக்கிட்டிக்கட்டி
சூடாறுமுன்பிழிந்துபதனம்பண்ணு, !வாக்குண்டோகடுகெடுத்து
கற்பங்கொள்ளு வலுவானநோயெல்லா மகலுந்தானே. (ரு௦க)

(நூற்சார்பு)

தானனகலக்கிபான்றன்னைப்பாரு சாற்றினராமதேவர்தன்
னைப்பாரு, வாகானபோகருடவெழுநூற்றி லப்பாவைத்தசவர்க்கா
சமதுயெண்ணெய்செய்து, கோனனசட்டைமுனிநூலுக்குள்ளே
கூட்டினதோர்சவர்க்காரந்தன்னைப்பாரு, நானனதுரையெல்லாம்
பார்த்துத்தேரி நாணயமாயாக்கற்சன்னஞ் செய்துப்போடே. ()

போடுவதிலொளிப்பொன்றுசொல்லக்கேளு பூரணமாங்கற்
சுன்னமெண்ணெயொன்று, நாடுவ்துபதிலிரண்டுஞ்சேர்த்தாயானல்
நலமானசவர்க்காரமிதுதானப்பா, ஊதுகின்றவாதத்திற்கிதுதான
ப்பா உத்தமனேவயித்தியத்திற்குறுதிமெத்த, சாடுவதுஅவிழ்தங்
கள்செய்யும்போது தனிதீட்சைபூவுடனேகற்சுன்னஞ்சேரே. ()

(நீற்றினத்தின்சரக்குப்பரிட்சை)

சேர்த்திடவேவெகுசூறுக்குமருந்தின்வேகம் திறமானபற்பங்
கள்செந்தூரங்கள், நீற்றுதற்குவழலைபுடச்சுன்னஞ்சேரு நீட்டடா

லொன்றுமில்லைவிழலாய்ப்போகும், பார்த்திடவேலைசாகுங்கனமிராது பாயாதுபிணியதுவுந்தீர்ந்திடாது, காற்றுபோலிருந்தாக் காற்பலனேதுண்டு கனத்திருந்தசிங்கம்போற் கவ்வுந்தானே. ()

கவ்வுமடாவழலையினால்வசியமாச்சி சனமானஅஞ்சனமுமறைப்புமாச்சி, வவ்வமடாவாதமொடுஅஷ்டகர்மம் வழலைவிட்டாலெல்லாம்பொய்மணாப்போச்சு, குவ்வுமடாவங்கமொடுரசத்தினீறு கொல்லுமடாபெட்டெட்டுச்சரக்கைகயெல்லாம், ஒவ்வுமடாதிராவகத்திற்குயிராம்பாரு யுத்தசெயநீருக்குமுபிரிதாமே. (௫௦௫)

(சவர்க்காரப்பூநீர்வழலை.)

உயிரானசவர்க்காரஞ்சொல்லக்கேளு யுத்தமனேமுதல்தீட்சைபூநீர்க்கல்லு, மயமானவெள்ளைக்கஞ்சுன்னம்ரண்டு மகத்தானகல்லுப்புகாலும்போடு, செயலானவூசிநீர்ச்சுன்னம்போடு தெளிந்தநீர்படியெட்டுச்சேரவாரு, புயலானதீக்கறைத்துக்கசவர்மத்தாலே பொருந்தவேயெழுதினங்கடைந்துவையே, (௫௦௬)

கடைந்துவைத்துமறுநாளில்ரெளிவிறுத்துக் காச்சுவாய்சிறுதீயிலிட்டெரித்துக்கொண்டு, குடைந்தபெருங்காண்டிகனைத் தூக்கிவாங்கி கூசாமல்லுலையில்வைத்துப்பழுத்தவூது, அடைந்தகம்பியுப்பதுதான்பலமோபத்து அதிலிட்டுயுருகிவரிலடங்தாக்கு, துடர்ந்துபலமெட்டுநீகொடுத்தாயானால் துடியாமற்கட்டியது சுண்ணமாமே. (௫௦௭)

சுண்ணத்தைதண்ணீரைக்கறைத்துவைத்து சுத்தமாய்த்தெளிந்தபின்புயிறுத்துக்காய்ச்சி, எண்ணுதசுன்னத்திற்பலமோரண்டுபிட்டுநீகாய்ச்சிவிடுகுழம்பேயானால். விண்ணுதபெணணெய்படிக்காலிலப்பா மேலானகற்சுன்னமபொடித்துப்போடு, கணணுத்தசவர்க்காரந்தன்னிலிட்டுக் கலாயிலேபிரக்கிவிடுபதமாம்போதே. ()

பதமானபருவத்தைதிருநீர்தன்னை பரப்பியேகுழிபண்ணி துணிமேலிட்டு, இதமானஅகப்பையினால்முகந்துவிட்டு இறுகையிலேயுண்டைபண்ணியுலரப்போடு, நிதமானதினமப்பாபதினைந்தாகு நீயெடுத்துச்சுண்ணும்புக்குள்ளேவைத்து, விதமானகுருசெய்யும் வகைகைக்கேளு விமலனுருரைத்தபடி விள்ளுறேனே. (௫௦௯)

விள்ளுறேனயக்கரண்டிதுலக்கிப்போட்டு மேலானசவர்க்காரம்பலமொன்றிட்டுக் கொள்ளுறேன்கரியுப்புமணிபாய்வாங்கிக் குலாவநன்றாய்ப்பொடிபண்ணிவைத்துக்கொண்டு, கள்ளமற்றக்கரிபோட்டில்வைத்துவூது கவசித்துவுருகையிலேகழறக்கேளு, மெள்ளவேமுன்பொடித்த கரியுப்புப்பார் விராகநிடையதில்போட்டுக்கிண்டுகிண்டே. (௫௧௦)

கிண்டையிலேவலுவானதுணியிற்கொட்டி கிட்டிகட்டிப்புழியையிலேயெண்ணெய்க்கும், விண்டதேயெண்ணெய்தனைவேறே வாங்கி மிக்கசவர்க்காரத்தைத்துணியில்கட்டி, கொண்டுசுன்னக்கல்லில்வைத்துமூடிக்கொண்டு கொடுமைபெறத்தண்ணீரைத்தெளிநேர்ப்பாக, மண்டவிடாதிப்படியேஅன்பத்தொன்று மட்டுமேவைத்தெடுத்துவாங்கிக்கொள்ளே. (௫௧௧)

கொள்ளவேசீனமொருபலத்துக்கப்பா கூட்டுசமன்வெடியுப்புஜெயநீர்தன்னை, தள்ளவேபொடித்திடுநீபொங்கிநீறுந் தூடியானரவிதனிலேயேழுநாள்வை, மெள்ளவேசீனமதுகட்டிநீறு மேலானசப்பியுப்புநீராலாட்டி, வள்ளலேவழலைக்குக்கவசங்கட்டி மைந்தனேபூநீறின்சீலைசுற்றே. (௫௧௨)

சுற்றியேசுன்னநற்றுள்ளேவைத்துச் சொல்லுவேன் தீபம்போல்ஜாமமூட்டு, நற்றியேகமலம்போல்ஜாமமூட்டு நன்றாகக்குளிர்ந்தபின்புயெடுத்துப்பாரு, முற்றியேகடுங்காரசெயநீர்குத்திமுழுரவியில்பட்சமடாகாயப்போடு, சற்றிநீபூசைபண்ணி அஞ்சுசுன்னக்குகையிற்றான் வைத்துமேல்மூடிப் புடைத்தைப்போடே. ()

புடமபோடச்சவர்க்காரங்கொடியசுன்ன புலிபோலேசரக்குகளில்பாயும்பாரு, நடம்போடுமிந்தமுறையொளித்தார்சித்தர் நான்வெளியிற்சொனனேனடாநாடிப்பாரு, வடமபூண்டமுலைபாள்தன்நாதம்வாங்கிற் மைந்தனேவழலையுடச்சுன்னப்போட்டுத், திடமுடையசலமாகுஞ்சிற்குத்தி ஜெபத்துரிசிறூறுதொந்தஞ்சொல்லுந்தானே. (௫௧௪)

### சூதசெந்தூரம்வேதை.

சொல்லுமடாசூதத்தில்நூற்றக்கொன்று சேர்த்தரைக்கக்சாரநீர்விட்டுஆட்டு, அல்லடாஅரிபின்முன்னுனேபோல அலறுமேசூதமதுகசடோயில்லை, நல்லதடாதங்கமுடன்நாகஞ்சேர்த்து நாய

கியாள்பீசமிட்டுச்செந்தூரித்தாற், சொல்லவடாநக்குண்டோவே
தையொக்குந் தொல்லுலகில்நமனில்லைசொல்லுந்தானே. (ருகரு)

சவர்க்காரத்தெண்ணெய்

தானென்றசவர்க்காரத்தெண்ணெய்தன்னில் தனித்தரசக்கற்பூரந்தன்னைவாங்கி, கானென்றஅப்பிரகத்தகட்டின்மேலே கட்டிவைத்தயெண்ணெய்தனைச்சுருக்குத்தாக்கு, வேனென்றயிருசாமம் போட்டாயானல் மேலாகுங்கற்பூரமெடுத்துக்கொண்டு, வானென்றவெள்ளியெட்டுச்செம்புநாலு மாட்டொன்றுபூரமடாவயதுமாறே.

ஆருனபெணணெயுடவழலைவாங்கி அறையுறேன்மாணுக்காஅதிகமாகும், கூருனவழலைக்குச்சமனதாகக் கூட்டியேசீனத்தைச்சேர்த்துஆட்டுச், சேருனபருவத்தேகாய்த்துவைக்க சிவசிவாபெணணெய்துவடியும்பாரு, வேருனயெணணெய்தனைப்பதனம்பணணு வெகுகாரம்யேறுதற்குத்துறைபைக்கேளே. (ருகஎ)

முன்சவர்க்காரச்சுன்னம்.

துறையென்னமுன்செய்தசவர்க்காரந்தான் சொல்லடங்காதுரிசியென்றசுன்னத்தோடு, முறையென்னவீரமொடுசீனந்தானும் முட்டடாவிராகனிடைச்சாரநீரால், நிறையென்னசவரக்காரம்பலந்தான்மூன்று நேர்ப்பாகயுருட்டியதைரவியில்போட்டு, குறையென்னச்சவர்க்காரத்துணடைமேலே கூசாமல்வரைத்து வுன்மேலும்பூசே. (ருகஅ)

பூசியேரவியிலிடுவாரமொன்று புகழானஅமுரியுடச்சாரந்தன்னை, வீசியேவெடியுப்புநீராலாட்டி மேல்பூசிரவியிலிடுக்காய்ந்தபின்பு, பேசியேபூநீறுக்சுன்னம்ரண்டும் பெருவாயால்நீரதனலறைத்துபூசி, வாசியேகற்சுன்னச்சீலைசெய்து மைந்தனேகுக்கிடமாய்ப்புடத்தைப்போடே. (ருகக)

புடம்போடச்சவர்க்காரங்கட்டிநீறும் புகலுவேன்கடுங்காரஜெயநீர்குத்தி, விடம்போன்றரவியிலேபைட்சம்போடுமேலானநாதவிந்துவாங்கிக்கொண்டு, தடம்போன்றவழலையொடுதுரிசிசுன்னம் தானவீரமொடுபுழுகுசீனம், படம்போன்றநாகவிஷஞ்சாரவுப்பாம் பாங்கானகுருவண்டியுமுஞ்சேரே. (ருஉ௦)

சேரப்பாவகைவகைக்குப்பலந்தானைந்து சேர்த்தாட்டிவழலையின்மேற்சிறக்கப்பூசி, காரப்பாஅஞ்சுசுனக்குகையில்வைத்துக் கன

மானசில்விட்டுச்சீலைசெய்து, சாரப்பாயுலையில்வைத்து சிறுசவூதா தின்குகையில்பழுக்கவைத்துஆறிப்பின்பு, நேரப்பாபிப்படி தான் மூன்றுதிரமூது நேரானவழலைகொடுஞ்சுன்னமாச்சே. (௫உக)

ஆச்சடாபீங்காணும்பரணிதன்னில் அப்பனேயடைத்துவைத் துயுறைபக்கேளு, பாச்சடாவழலைபட்டாலெல்லாஞ்சுன்னம் பாங் கானயழிக்கினமோகோடாகோடி, போச்சடாவழிமையொடு நம னுமபோனல் பொல்லாதபிணியெல்லாம் கடலில்போச்சு நீச்சடா சமுத்திரமும்நிலைத்துப்போச்சு நேரானசரக்கெல்லாம் நிலைத்துப் போச்சே. (௫உஉ)

நிலைத்ததடாதேகமதுக்கழிவோயில்லை நேரானநவலோகம் ந வரத்தினங்கள், மலைத்தடங்கள்பூமிபொடுசுன்னம்பற்பம் வாச்சு தடாசெந்தூரம்வழலைப்பட்டால், கலத்திலொன்று மிதற்கீடோ யில்லையில்லைசாற்றினேன்கசடருக்குச் சாற்றெண்ணுது, நலத்தி ஞல் பசப்பியவர்நூலைக்கேட்டால் நவின்றிடுகில்ரவிகோடி நரகந் தானே. (௫உ௩)

நரகமென்னசொற்கமென்னவொன்ருயாகில் நாட்டிலே கோ டிஜென்மம்புழுதானையா, உரகமதுதவிரவிஷஜெந்துவெல்லாம் உ யர்சென்மமல்லவடாநரகசென்மம், பரகெதிகளில்லையடா ஆவியுள் ளமட்டும் பாலகனேயிதையறிந்துயிந்நூலீய்வாய், அரனுடைய வாக்குதப்போயில்லையில்லை ஆறுமுகனறியவுந்தானறைந்திடேனே.

## வீரமெழுகு.

அறைந்ததங்கக்கிண்ணமது விராகனிடைரண்டு யதிற்போடு கொச்சியென்றவீரமதுபலந்தான், நிறைந்தபின்பு யெடுத்தசவர்க் காரத்தெண்ணெய், நீசுருக்கிதாக்கிலுப்பைநெய்யில்தீபங் குறைந் திடாதொருஜாமமட்டுமீய்ந்து, குறைவில்லாதுரிசிசுன்னம் பண விடைதானப்பா, கறைந்திடவேயுமிநீரிலறைத்துப்பூசி கற்பூரதீபத் தில்வாட்டுவாட்டே. (௫உ௫)

வாட்டியேயெடுத்துதங்கரேக்குச்சுற்றி மைந்தனேயுமியோட் டில்வாட்டிவாங்கி, பூட்டியதோரேக்குதனைபுள்ளவாங்கும் போட் டடாமதிபத்துக்மொன்றேவீறம், காற்றையிலேமேலெழும்பி வாங் கிக்கொள்ளுங் கனகமதுபத்தரைதான் காணுங்காணும், காட்டியே தோர்நாதவிந்துசவ்வாதுகாரம் நலமாகசாரத்துக்குருவையீயே.

ஈயவே துரிசிகுருபணவிடைதான்போட்டு மீய்ந்திடவேநில்லா துஇழுத்துவாங்கும், பாயவேகளங்கஞ்செந்தூரஞ்செய்ய பழுக்குமடா நூற்றுக்குவொன்றுபோடு, காயுமேநோயனைத்துங்கடலேபுக்குங்கனமானதேகமதுகாற்றுப்போலாம், வாயுவேவெளிபோடாகுளிகையிட்டால் வாங்குமேகெவுனவழிவலுக்குந்தானே. ()

## சூதக்கட்டி.

வலுவானசூதத்தைதக்கட்டக்கேளு மங்கையர்கள்நாதமொடுவிந்துங்கூட்டி, நலியாமல்வழலையுடசுன்னத்தோடு நலமானவீரமொடுபுனுகுங்கூட்டி, சலியாதகுருவண்டுஉரமுஞ்சூதந் தப்பாமல்பூரமொடுசீனந்தானும், மூலைபாமல்வகையொன்றுபணந்தானொன்றுஊட்டுமுலைப்பால்முரிவாய்நீர்தானே. (௫௨௮)

நீரெல்லாம்பஞ்சபூதத்திடையாய்ச்சேர்த்து நீரறைந்து நீலகண்டன்கழஞ்சிமூன்றில், சேரெல்லாந்தேன்சீலைமேலேசுற்றித் திறமானயிளங்கண்ணின்சாணியப்பி கூரெல்லாஞ்சிலைசுற்றிக் குறட்டிப்பற்றிக்குகைதனிலேவெள் வங்கமுருக்கிக்கொண்டு வீரல்லாமடங்கவேவழுத்தியாற்றி விதமாகயேழுதிறமழுத்திவாங்கே. ()

வாங்குவாய்சூட்டோடேமேற்சீலைவாங்கி மைந்தனேயறைமருந்தைதக்கவசம்போட்டு, தாங்கியேரவிபிலிட்டுக்காய்ந்தபின்பு தப்பாமலஞ்சுசுன்னக்குகையில்வைத்து, பாங்குபெறமேல்மூடிச்சீலைசெய்து பழுக்கவேயூதிபெடுசுன்னமாச்சு, யேங்கியேசாக்கெல்லாஞ்சாகும்பாரு என்மகனே துரிசினிடவேகங்கேளே. (௫௩௦)

## தாரச்சுன்னமிருதாரசிங்கிசுன்னம்.

கேளடா துரிசிதன்னில்வீரங்கூட்டி கெடியாகவாய்நீராலறைத்துக்கொண்டு, வேளடா அரிதாரந்தனக்குப்பூசி மேலான அஞ்சுசுன்னகுகையில்வைத்து, நாளடாமேல்மூடிச்சீலைசெய்து நன்றாகவூதிடவேசுன்னமாகும், கேளடாமிருதாருசிங்கிதன்மேற்கொடி வீர அரிதாரச்சுன்னம்பூசே. (௫௩௧)

## சாரம்நிமளைக்காரச்சுன்னம்.

பூசியேரவிபிலிட்டுக் காய்ந்தபின்பு புகழான அஞ்சுசுன்னக்குகையிலிட்டு,வாசியேமேல்மூடிச்சீலைசெய்து வகையாகயூதியெடுசுன்னமாச்சு, கேசியே நவலோகம் நவரத்தினங்கள் நீறுகுந்தொ

ட்டவிடமெல்லாம்நீரும், கூசவேவேண்டாங்கான்நிமளக்கப்பு கொ யதொருநிமளதனைச் சாரத்திற்கப்பே. (ருரு ரு)

அப்பவேசாரமதுகட்டிநீறும் அரியதொருசாரத்தைக்காரத் தப்பு, செப்புவேன்காரத்துச்சுன்னமாச்சு திறமானதுறைக்கெல் லாம்வீரமுடன், புழுகுதப்பில்லா அஞ்சுன்னக்குகையில்வைத்துச் சரவுலையிலூதிவிடச்சுன்னமாகும், இப்பவேசுன்னமெல்லாங்கழ ஞ்சிவீதம் என்மக்காளெடுத்துப்பின்னியம்புவேனே. (ருரு ச)

சூதசெந்தூரம்.

இயம்புகின்றசூதமது பலந்தானூறு என்மகனேயதிற்போட் டுத்தண்ணீர்வார்த்து, நயம்பெறவேயடுப்பேற்றிக் கொதிக்கும் போது நலமாகவீரிட்டுச்சூதம்சாகும், மயம்பெறவே பின்னெடுத் துத்தங்கம்நாகமாட்டுவாயொருநிறையாய்க்கெந்திரெட்டி, செயம் பெறவேகும்பியிலேசெந்தூரித்தால் தேகமதுக்கழிவில்லை திண்ணந் தானே. (ருரு ரு)

திண்ணந்தானேயனைத்துந்தீர்ந்துபோகுஞ் செப்பினேனிதி லொளிப்பொன்றுமில்லை,எண்ணந்தானினைத்தபடிமுடியுமப்பாஎளி தல்லநாதத்தின்கட்டைக்கேளு, வண்ணந்தான் இலுப்பைநெய்விட் டுருக்கி நாகம் வைத்ததொருசாரநீர்தன்னில்சாய்த்து, மண்ணி னைத்தானைந்துதரஞ்சாய்த்தாயானால் மயங்கியே நாகமது கட்டும் பாரே. (ருரு சா)

நாககட்டு.

கட்டுமேநாகமதையுருக்கிக்கொண்டு கனமானகெந்தகத்தைச் சமனாய்த்தாக்கு, மட்டுமேநவாச்சாரஞ்சமனாய்த்தாக்கி மாட்டியே பொடித்திரண்டுவேறேவைத்து, கொட்டியேயிருபொடியும்ஆறித் தூவிக்குமுறவேயுரிக்கெடுத்துபின்புகேளு, தட்டியே அயக்குகையி லிட்டு வெள்ளைத் தாபேஷரத்தமிட்டுத்தகடுபோடே. (ருரு எ)

தகடிட்டுச்சீலைமண்செய்துலர்த்தித் தணியவேகுழிவெட்டிப் புடத்தைப்போடு, செகமெச்சநாகமது கட்டிப்போகுஞ் செப் பாதேவெகுகோடி திறமீதப்பா, முகடிட்ட வறுமையெங்கே குன்மமெங்கே முழுமோசமாச்சுதென்றுமுடிகியோடும், அகடிட்ட சண்டாளர்க் குறைத்தாயானலருநரகிற்குள்ளாவா யறைந்திட் டேனே. (ருரு அ)

## கெந்தகக்கட்டு.

அறைந்திட்டகெந்தகக்கட்டைக்கேளு அப்பனே வெள்ளாட்டுக் கசப்பை பெலும்பாக, நிறைந்திடவே நொறுக்கியிடிபாண்டத்துள்ளே நினைவாகமேல்மூடிக்குழித்தயிலம் வாங்கி, மறந்திடவே கெந்தகத்தைப்பீங்கானிலிட்டு மண்சட்டி தூரிலேதட்டிக்கொண்டு, குறைந்திடவேபீங்கானிற்பொத்தலில்வைத்துக் கொளுத்திவெளி காணவேயடுப்பிலேற்றே. (ருநக)

ஏற்றிவிட்டுநல்லெண்ணெய்தீபந்தன்னை என்மக்காள்முன்தயிலஞ்சுருக்கேதாக்கு, காற்றதுவேபடாவிடத்திராதுசாமங் கடந்த பின்பாறவிட்டெடுத்துக்கொண்டு, மாற்றிடுமே கெந்தியதுகறுப்பாம்நிற்கும் மகத்தானகட்டதுதான்மைந்தாபாரு, தேற்றிடுமே கறுப்பதனை வாங்கிப்போடு திறமானபாண்டத்திற் சலத்தை வாரே. (சசo)

சலத்திலேவில்வஇலைபிடித்துப்போட்டுத் தனிச்சீலைநனைத்து மேல்வேடுகட்டி, புலத்தியனேமேல் வேட்டின்மல்லியிலைபரப்பிப் புகழாகக்கெந்தியை மேல்பரப்பிபோட்டு, கலத்திலேமேலுமந்த இலையால்மூடிக் கவிழ்சட்டிசீலைமண்செய்தெரியோர்சாமம், நலத்திலேகெந்தகந்தான்வெண்மையாகும் நன்மையுள்ள கட்டப்பா நான் கண்டேனே. (ருசக)

கண்டனடாசெந்தூரக்குறிப்புக்கெல்லாம் கட்டுகின்றநற்கெந்திகருதிச்சேரு, கொண்டபச்சைக்கெந்திதன்னைச்சேர்த்தாயானால் குலாமரேதீப்படவுமோடிப்போகும், பண்டுசொன்ன சாஸ்திரங்கள் பொய்யென்பார்கள் பாவியவர்கைம்முறையைக்காணமாட்டார், தொண்டருக்கு மண்சுமந்தசிவனார்சொன்ன சுருதியாமிந்த கைம்முறையைப்பாரே. (ருசஉ)

## நாகக்கட்டு.

பாருநீயின்னமொருகட்டுக்கேளு பாங்கானநாகமதுபலந்தசனெட்டு, வாருநீயிலுப்பைநெய் விட்டுருக்கியப்பா வளமானசிற்றேடு வைத்தனிச்சாறுக, சேருமேயேழுதரமுருக்கிச்சாய்த்துச் சிறக்குமந்த இலையரைத்துக்கவசங்கட்டி, சாருமேசீலைமண்தான் மூன்று செய்து தப்பாமலஞ்செருவிற் புடத்தைப்போடே. (ருசங)

போட்டபுடமாறியெடுத்திலையையாட்டிப் பொருந்தவேகவசமிட்டுச்சீலைமண்செய், நாட்டுவாய்எருவடுத்திப்புடத்தைப்போடு

நன்றாகவாறினபின்முன்போலப்பா, மாட்டுவாய்பதினைந்து எரு விற்போடு வளமானநாகமதுசட்டிப்போச்சு, கூட்டியேசார மென்றசெயநீர்தன்னில் குகையில்வைத்து நாகத்தை யுருக்கி வாரே. (ருசச)

வாரப்பாகட்டியதுகரியிலாடு மைந்தனே முழுக்கட்டாமுற லில்லை, நேரப்பாதங்கம்போலுருகியாடும் நிசவேதைகாவிக்கு முப்புகோடா, காரப்பாகுருநில்லைபக்காத்துசில்லு களிம்பற்ற செம்பாறுவெள்ளிநாலு, சேரப்பா நாகமொன்றுலிங்கமொன்று சேர்த்திடவேதிசை மாற்றுந் தெளிந்துபாரே. (ருசரு)

அயச்செம்பு.

தெளிந்துதானயச் செம்புசெப்பக்கேளு சித்தோடுவைத்த னிச்சாற்பிழிந்துகொண்டு, குளிர்ந்துவரப் பொடிபத்து அதனி லிட்டுச் குறையாமலேழுதினஞ்சென்றபின்பு, பொளிந்துகட்டு வெண்காரமிரண்டுங்கூட்டிப் பிசகாமற் குகையிலிட்டுச்சில்லு போட்டு, அளிந்திடவேயுருக்கிப்பார்கடிதாய்நிற்கும் அப்பனே புடைத்துவெண்காரங்கூட்டே. (ருசசு)

கூட்டியே முன்சாற்றில் பிசறிக்கொண்டு குகையிலிட்டுச் சில்லிட்டுச்சீலைசெய்து, மாட்டியே குகையிலிட்டுதினைக்கால் வலு குறைந்துருகியதுமணியாய்நிற்கு, நாட்டியேயேழுதரமுருக்கிப்பாரு நல்லசெம்பாம்பின்புவெண்காரங்கூட்டி, ஆட்டியேயேழுதரமுருக்கி னுக்காலப்பவல்லோதங்கம்போலாகுந்தானே. (ருசஎ)

ஆருமேஅயச்செம்புபத்துக் கொன்று அணைந்திடு நீகட்டி வைத்தநாகமொன்று, வேகமாய்மாற்றேழுநிசமாய்க்காணு மேதி னியில்வீள்ளாதேவயித்தியன்மார்க்கம், நாகமேகட்டுவதுகடினஞ் சொன்னேனல்லகட்டிவயச்செம்புசேர்ந்தபோது, பாகமாய்லிங்க மொன்று கொடுத்தாயானற் பத்தரைமாற்றுகுமடா பணிந்து கேளே. (ருசஅ)

வெண்காரக்கட்டு,

பணிந்துநீவெண்காரங்கட்டக்கேளு பருஞ்சட்டிவெண்காரம் பலகையாகும், துணிந்தெருமைகண்சாணிதன்னில் வைத்துத் தெளிந்தநீர்பாண்டத்தடியிலேதான், கணிந்தகுழிதோண்டியதில் புதைத்துப்போடு கசடற்றசுத்தியாமஞ்சாநாளில், தணிந்திட்ட ஆறுநாள்கழுவிப்போடு சார்வானசெந்நாயுருவிச்சாறே. (ருசக)

சாறுரியில்தானனைத்துரவியிற்போடு சாருலார்ந்தாற்பின்னு மந்தப்படியேசெய்து, மாறியேமூன்றுதினஞ்சென்றபின்பு மைந்தனேயீனுதமேதிச்சரணி, தேறியே இப்பாலுங்கள்ளிப்பாலும் திறமான வெடியுப்புச்செயநீர்தானும், ஆறியேசமனுகப்பீங்கானிலிட்டு அமுரியுப்புநாயுருவிச்சாரவுப்பே. (ருடுo)

உப்பெல்லாங்கழஞ்சிரண்டுபொடித்துப்போட்டு உத்தமனேகாரத்தைநனைத்துப்போடு, தப்பல்லபால்செயநீர்படியரைக்கால் தான் சிவக்காய்ந்தபின்புசாற்றகேளு, இப்புவியில்ரவிகாணவேழு நாளு மிடமெடுக்கவெண்காரங்கட்டிப்போச்சு, ஒப்பல்லவுருக்கினத்துக்கெல்லாமாகும் உத்தமனே தாம்பூரத்தின் பற்பங்கேளே.

தாம்பூரற்பம்.

கேளப்பாதாம்பூரத்தைப்பனையிேைலக் கிணையாகத்தட்டிக்கா சகலமாக, தாளடாநறுக்கிபெடுகழஞ்சிபத்துத் தன்னையேயுலையிலிட்டுச்சிலுக்கவூதி, வேளடாரவிபாலிலிட்டுவாவா விசைபத்து மூன்றுமடாவிளங்கச்சொன்னேன், தாளடாபழங்கோணிதன்னை வாங்கிச்சுகமாகரவிபாலையூட்டுவாயே. (ருடுஉ)

ஊட்டடாதாளமாகச்சட்டிவாங்கி யுத்தமனேதாம்பூரத்தைப் பரப்பிக்கொண்டு, தாட்டடாசுருட்டியந்தக்கோணிநாரில்தாட்டியே மண்செய்து உலர்த்திக்கொண்டு, நீட்டடாகுழிவெட்டி பெருவிலிட்டு நேரானபுளியம்பிராணிபொருசாணிட்டு, மாட்டடாமண்செய்தகோணிதன்னை ிவைத்துமேபரணிலிட் டெருவும்போடே.

போடப்பாஅக்கினியைக் கீழேமேலும் போட்டிடவேதாம் பூரமதுபற்பமாச்சு, கூடப்பாவெண்மையது குறைந்துகண்டால் கொடுரவியின்பாலாலே அறைத்துப்போடு, வீடப்பாமுன்போல புடந்தான்போடு வெண்மையதுகுன்றுது விளங்கக்கேளு, ஆடப்பா அனுபானங்கருவாய்பட்டை அழகானசாதிக்காய்கிராம்பு மாமே (ருடுச)

ஆமென்றவாள்மிளகுசாதிபத்திரி அப்பனே சமனிடித்துப் பொடிதான்செய்து, தாமென்றகழஞ்சரைதான்சூரணத்தில் தாம் பரபற்பம்பணமரைதான்தாக்கச்சேர்க்க, நாமென்றநோய்களெல்லாங்கடலேபுங்கும் நமனில்லைமணியில்லைநாடிப்பாரு, கேமென்ற தேகமதுயிறுகிப்போச்சு சிறந்துண்ணில்நெய்வெண்ணெய் விரும்புவாயே. (ருடுரு)

(தங்கச்செம்பு.)

விரும்பியேமுன்கட்டுகெந்தகத்தில் வேண்டியேகாய்ப்பாகாற் சாறுவிட்டு, திரும்பவேயரைத்திடுவாய்பணம்போல்தட்டித் திறமான தங்கத்ில்கழஞ்சிவாங்கி, அரும்பவேகுகையிலிட்டுயுருக்கிக்கொண்டு அறைத்தகெந்தஞ்சமன்சரக்குக்காரம்போடு, சுரும்புபோல் பின்னுறந்தகெந்தியூட்டிச் சுகமாகயோட்டிலிட்டுயூதிடாயே.

ஊதவேதங்கமதுரவிபோலாச்சு யுத்தமனேதாய்பத்துக்கொன்றுதாக்கு, வாதமேதொந்தமதுபத்துக்கேறும் மகத்தானமதிபத்துக்கொன்றும்போடு, நீதமேதசைமாற்றுபிசகிடாது நீகுநவின்பதம்போற்றிநினைவாய்கில்லு, காதமேதூரமில்லாசெய்துபாரு களிம்பற்றவேதையடாகண்டுபாரே. (ருருசு)

(கெந்திபற்பம்.)

கண்டுநீகெந்தகத்தின்பற்பங்கேளு கனமானகெந்தகத்தைகல்வத்திட்டு, மண்டுதான்சிற்றுருடுவைச்சாறுவிட்டு மாட்டியறைபிறுசாமம்வில்லைதட்டி, கொண்டுயிலையறைத்துமேகலசங்கட்டிக் கூறவில்லைசீலைமண்செய்துலர்த்திக்கொண்டு, விண்டிடவேமணவரையில் புடந்தானைந்து வெளியேற்றில்புடமஞ்சிற்பற்பமாச்சே. (ருருஎ)

ஆச்சப்பாயிடைகுறைபிற்பற்பந்தன்னை யப்பனேபணவிடைதான்உண்டுதேறு, வாச்சப்பாகுட்டமொடுகிரந்திசூலை வந்தபுதுப்பிளவையொடுகண்டமாலை, போச்சப்பாகரப்பனொடுவூரலெல்லாம் போகுமடாபார்சீனிநெய்யுங்கூட்டு, பேச்சப்பாயொன்றுமில்லைப் புளியைத்தள்ளு பேரானவாலைரசம்பேசுறேனே. (ருருஅ)

(துரிசிஅயச்சூததாம்பூரம்)

பேசுறேன்அயக்கரண்டிதுலக்கிக்கொண்டு பேரானதுரிசிதன்னைப்பொடித்துப்போடு, மாசறவேகாட்டிதண்ணிநிறபவிட்டு மைந்தனேசுத்தியில்லாதலிங்கத்தில்வைத்து, வீசுறேனைந்துநாள்சென்றபின்பு விட்டுநீகோடியாதைமாத்திப்போடு, மாசறவேகுரியினுல்குத்திப்பார்க்க மகத்தானத்தகடுபேல்தாம்பூரந்தானே. (ருருகூ)

தாம்பூரத்தில்விராகனிடைநிறுத்துக்கொண்டு சாதிலிங்கம்வாலைரசம்பலந்தான்சேர்த்து, ஏம்பிநீதிரியாதேகல்வத்திட்டு யென்மக்காளறைக்கையிலேயிறுகும்பாரு, சாம்பலென்னவீரமதாகழஞ்சி யெட்டு துடியாகப்பனியில்வைக்கசூதமாகும், ஆம்படியில்வீதமிருபத்துநாலு அறைத்திடவேதாம்பூரமாமே. (௫௱0)

சூதத்திற்றங்கமிடச்சூதமாகுந் துறைக்கெல்லாம்வீரமிடுசுத்தியொப்பாம், நாதத்திற்குருவிட்டுச்சுருக்குத்தாக்கு நாகமொடுகெந்தியிட்டுச்செந்தூரித்தாற், காதத்திற்றாரமல்லகைக்கனியேயாகுங் கசடற்றமதியிலிடுகனகமாகும், வாதத்தின்முடிவெல்லாஞ்சூதத்தாலே மைந்தனேகாயசித்திமகிழ்ந்துசெய்யே. (௫௱௧)

(பூவழலை.)

செய்யவேபூவழலைசொல்லக்கேளு செயமானகாரமென்றபூநீரப்பா, நையவேசட்டிதனிலடுப்பிலேற்றி நன்றாகபற்பமாயெரித்துக்கொண்டு, பையவேநெல்சனிபோற்சலத்திலிட்டுக் கடைந்துவைத்துமூன்றுநாளிறுத்துக்காய்ச்சே. (௫௱௨)

காய்ச்சியேநீர்வற்றிக்குழம்பேயானால் கடுரவியிற்போடவேகல்லுப்பாச்சு, நாட்சியொன்றுமில்லையடாவீரஞ்சத்து தான்சுத்திபூநீறுங்கற்சுண்ணாம்பு, பாய்ச்சுகரியுப்பிட்டுசாரநீர்விட்டுப் பாங்காகத்தெளிவிறுத்துக்கலக்கிப்போட்டு, வாய்ச்சுதேயடுப்பில்வைத்துக்கொதிக்கும்போது மருகின்றமெழுகதுபோல் சுத்தியாமே

சுத்திக்கஅமுரியுடச்சாறும் சுருக்கடாகொதியிட்டுஆறவிட்டு, வெத்திக்கியுருட்டியோவியிற்போடு விதமான அமுரிவிட்டுச்சுண்டக்காய்ச்சி, பத்திக்கும்பன்மபாலைவிட்டுக்காய்ச்சி பாங்கானதேசிநீர்தன்னிற்காய்ச்சி, புத்திக்கிமுலர்த்தியதையூதிப்போடு புகழான பிர்மக்கற்சுண்ணமாச்சே. (௫௱௪)

கண்ணத்திற்படியொன்றுஅளந்துகொண்டு சுருதியாஞ்சாரநீர்படிதாநாலு, எண்ணாற்றப்பரும்பீங்கான்தன்னிற்சேர்த்து என்மக்காள் கலக்கியதையிருளாம்வீட்டில், கண்ணொத்தகண்மணியுங் காணொண்ணாது கட்டாகபட்சமொன்றுகார்த்தாயானால், விண்ணொத்தவுப்பதுதான்மேலேயேறும்மேலானதெளிவிறுத்துக்காச்சுவாயே. (௫௱௫)

வாயேதுசிவப்புமைந்தாபாரு வாச்சுதேவாதமடைத்திறந்து போச்சு, நோயேதுசாவேதுகமனேயில்லை நொடிக்குமுன்னேசரக் கெல்லாமடக்கிக்கொல்லும், நீயேதுமழங்காதேவழலைசெய்ய நிமி ஷத்திற்பூவழலைமுடிந்துபோச்சு, தாயானவெடியுப்புப்படியொன் றிற்குத்தண்ணீரேநாலுபடிதாக்கிடாயே. (ருசுசு)

தாக்கியேதெளிவிறுத்துக்காய்ச்சிவாங்கி தப்பாலுசிநீர்ப்படி தாநாலு, தேக்கிநீகாய்ச்சிவற்றித்தேசிநீர்தான் சேரப்பாநாலுபடி சுண்டக்காய்ச்சி, நீக்கியேரவியிலிட்டுயுலர்ந்தபின்பு நீயெடுத்துப் பதனமாய்வைத்துக்கொண்டு, நோக்கியேமலைச்சாரற்பூநீற் தன்னை நுவலுகிறேன்கல்மணல்நோக்கிவாறே. (ருசுஎ)

வாறுவாய்ப்படியொன்றுஅமுரியெட்டு வார்த்துநீதேற்றியே கலக்கிக்கொண்டு, மாறுமேதெளிவித்துக்காய்ச்சிக்காய்ச்சி மைந் தனேகுழம்பானல்ரவியில்போடு, சேறுமேஅமுரிமுன்போற்றேற் றிவாங்கிதிரும்பவேகாய்ச்சிவிட்டுரவியிற்போடு, காறுமேதேசி நீர் தன்னிற்காய்ச்சி ரவியிற்காய்ந்தபின்புயெடுத்துக்கொள்ளே (ருசுஅ)

திடுத்திடுவாய்வகைபொன்றுபலந்தானென்று யிதமானதேசி நீர்தன்னைவிட்டு, கடுத்திடவேரவியிலிட்டுக்காய்ந்தபின்பு கனமான வழலைநீர்விட்டுஆட்டு, பிடித்திடுவாய்வில்லைதனிரவியிற்போடுபோரா கக்காய்ந்தபின்புசொல்லக்கேளு, அடுத்திடவேவட்டோட்டில் பூநீ றிட்டுஅப்பனேவில்லைவைத்துபூநீற்போடே. (ருசுகூ)

போடப்பாமேல்மூடிச்சீலைசெய்து புகழாகமனவரையிற்புடத் தைப்போடு, நாட்டப்பாஆறினபின்னெடுத்துக்கொண்டு நலமான கல்வத்திலிட்டுக்கொண்டு, சூடப்பாவீரமுடன்கடியசாரஞ்சுகமான பூரமொடுநாலுங்கேளு, தேடப்பாவகையொன்று விராகனென்று சேரடாபுழுகதுவுமரைதான்கூட்டே. (ருஎ0)

கூட்டியேவெடியுப்புநிசெயநீர்விட்டுக் கூட்டியறைஜாமமொன் றுவில்லைபண்ணி, காட்டியேரவியிலிட்டுக்காய்ந்தபின்பு கனத்தசட் டிதன்னிலேசுன்னநீற்றை, மாட்டியேபூநீறுமேலேயிட்டு வளமான வில்லைவைத்துமேற்பூவிட்டு, நாட்டுவாய்சுண்ணாம்புமேலுமிட்டு நல மானசட்டிகொண்டுகவிழ்த்துமூடே. )ருஎக)

மூடியேமண்சீலையேழுஞ்செய்து முன்னவனைத்தான்பணிந் து யடுப்பிலேற்றி, நாடியேவாலையுடனிர்வாணிக்கும் நலமாகப்பூசை ப ண்ணியெரிநேர்ப்பாக, சாடியேநாற்சாமம்நாலுந்தீயும் தானெறித்

துமேல்சடத்திறந்துபோடு, கூடியே ஆறவிட்டுயெடுத்துப்பாரு குரு வாச்சுகர்மவிணைக்குடிபோம்பாரே. (ருளஉ)

போமப்பாகடுங்சாரமேற்றிப்பாரு புரையாமற்சரக்கையெல்லாமடக்கிக்கொள்ளும், நாமப்பாவொளிக்கவில்லைசிவனறியச் சொன்னேன் தாதாக்களுடகருவைமறைத்துச்சொன்னார், தாமடாயிக் குருவில்வீரங்கூட்டிச் சாரித்துதுரிசிக்குப்பூசிப்போடு, ஆமப்பா ரவியிலிடுகாய்ந்தபின்பு அப்பனேசுணங்கன்மலமறைத்திடாயே. ()

துருசிகுவுரு.

அறைத்தந்ததுரிசியின்மேலப்பிப்போடு அதுரவியிற்காய்ந்த பின்புஅப்பாகேளு, நரிவிரட்டிவேற்கள்ளிவேறுமாக நாடியேசரமனிறுத்துவாய்நீராலே, விரவிபறையதன்மேலேகவசங்கட்டி வெயிலுலர்த்திச்சீலைமண்செய்வெடித்திடாமற், கிருபையுடன்கணபதியுந்தாயைப்போற்றிக் கேள்காடைப்புடம்போடக்குருவுமாமே. ()

குருவெடுத்துப்பதனமதாய்வைத்துக்கொண்டு கூட்டடாக் கூட்டுகிறயினத்திற்கெல்லாம், தருவெடுத்துப்பால்களிற் குன்றியிட்டாற் சலமாகும்பாஷாணமெல்லாங்கட்டும், கருவெடுத்து நாதவிந்து லிட்டாயானற் சுடிகைக்குட்சலமாகுஞ்சூதங்கட்டுந், திருவெடுத்த யிச்சலத்திற்றுவைத்துவாட்டச் சிணத்திலேமெழுகாகும் வேதையாகும். (ருளரு)

காசுகிறமெழுகு.

ஆமப்பாகாய்ச்சுகின்றவழலைதன்னை அறையுறேன்நீபடி தாறு, தாமப்பாகல்லுப்புப்படிதான்முக்கால் தன்னோடுகெற்சுன்னம் படியொன்றரையாம், நாமப்பாயூசிநீர்படிதானெட்டு நன்றாகக்கலக்கிவைத்துதெளிவைவாங்கி, வேமப்பாவெள்ளையொன்றுவீரமொன்றுமிகுந்தபச்சைக்கற்பூரங் காலுங்கூட்டே. (ருளசு)

காலானரெண்டேசாற்பலமுஞ்சேர்த்துக் கல்வத்திற்பொடி பண்ணிக்கலக்கிப்போடு, நாலானநாளப்பாசிறுநீரிட்டு நன்றாகத்திறட்டியேயுலர்த்திக்கொண்டு, மாலானபலமூன்றுகல்வத்திட்டு மைந்தனேவெடியுப்புக்செயநீராலே, பாலானசாரமொன்று அறைத்தபின்பு பரிவானசாரநீற்தன்னிலாட்டே. (ருளஎ)

ஆட்டுவதுசாமமொன்று வில்லைதட்டி அடர்ந்த ரவிதனிற்போடு வாறவிட்டு, நாட்டுவதுமணவரையிற் புடத்தைப்போடு

நன்றாகக்கடுங்காரசெயநீர்விட்டு நீட்டுவதுசாமமொன்றரைத்து வாங்கி, நன்றாகவில்லைபண்ணிரவியிற்போடு காட்டுவதுகடுங்காரச்சயநீர்குத்து கனமானபடசமொன்றுகடந்துவாங்கே. (௫௭௮)

கடந்தபின்படிகனத்தபாண்டத்திட்டுக் கற்சுன்னநீறிட்டுப்பூநீறிட்டுப், படர்ந்தவில்லைமேல்வைத்துப்பூநீறிட்டுப் பாலகனே கற்சுன்னநீறுமிட்டு, தொடர்ந்தவாய்சட்டியிட்டுச்சீலை மண்செய்து துடியானவாலுகையின்மேலேயேற்றி, அடர்ந்தவன்னிகாற் சாமமெரித்து ஆறியாதி யாமுப்பூவின்குருவுமாச்சே. (௫௭௯)

குருவென்ற வழலைதனைவைத்துக்கொண்டு குடிலமதுபாஷாணங்கூறக்கேளு, கருவென்றகட்டுச்செந்தூரக்குளிகை கனகமென்றபற்பங்கள்தயிலமெண்ணெய், வருமென்றகிருதமொடு சூரணங்கள் மைந்தனேகுருகழஞ்சிகருவசித்தி, தருவென்றமுப்பூவின் குருவில்லாவிட்டாற் சாராதுகண்ணில்லான்தானேப்பாயே. (௫௮௦)

ஒப்பேதுவுன்னைவிட்டால்வேறொன்றில்லை யுத்தமனேயூர்தோறுமலையவேண்டாம், அப்பேதுசாரநீரப்பேயாகும் தைச்சித்தஞ்சொன்னாக்கால்குருவாகாது, தப்பேதுநல்லைவிட்டாற்றப்பிப் போகும் தாயில்லாசூதமணியொப்போகாது, கொப்பேதுயுன்னுக்குள் மூன்றுமுப்புக் கூட்டினாற்சகலசித்துங்கூடுந்தானே. (௫௮௧)

முப்பூவின் விபரம்.

கூடுகிறவினமென்னவென குருவேசொல்லும் கொல்லுகிற மூன்றுஞ்சொன்னீரையா, ஆடுகிறவழிகாட்டியருளேகாட்டி அடங்காதவழலையிடஇடையுங்காட்டி, நாடுகிறயுன்னுக்குள்மூன்றுப் பென்றீர்நற்குருவெயெந்தனுக்கு நல்குந்தேவா, வாடுகிலமனந்தேறவருளிச்செய்து வழிகாட்டவேணுமென்று வணங்கினேனே. ()

வணங்கிநின்றஎன் மகனேசொல்லக்கேளு மாறுட்டமில்லை யடாமனதிற்காணு, உணங்கிநின்றசமாதியிலே யுப்பென்பார்களுனக்குளப்புக் கையூறலுப்பென்பார்களிணங்கி, நின்றசடற்பாறையுப்பென்பார்களிந்துப்பு கரியுப்புபூநீறென்பார்கள், குணங்கள் தனைச்சரிபார்க்கில்முப்பாமென்று கூறினார்பெரியோர்கள் குணத்தைப்பார்த்தே. (௫௮௩)

பார்த்தல்லோமுக்கருவைமறைக்கவேண்டிப் பாடினார்வெகுகோடிநூல்களாகச், சேர்த்தல்லோவொன்றிலொன்றுசரியில்லாமற்

சேர்த்திட்டார்தெரிந்தாலுமுறைகாணாது, கார்த்தல்லோ பிறந்திடத்தைமறைத்துப்பாடிக், கரைகாணு சாத்திரங்க ளனந்தங் கோடி, மாத்தல்லோபிறந்திடந்தானறியவேண்டி மைந்தனேயுலகத்தோர்வசனங்கேளே. ()

வசனமென்னஎன்குருவேதஞ்சமென்று மலரடியைத்தான் பிடித்துவணங்கினன்பார், வசனமென்னஎண் சாணுடம்புக்கெல்லா மைந்தனே சிரசல்லோபிரதானமென்பார், வசனமென்னநீயுண்ட அன்னசாரமாகியது அளவாகவான்மேற்சென்று, வசனமென்ன புகையூறலுப்புமாச்சு மகத்தானரவிமதியால்பூநீரூச்சே. (ருஅரு)

கல்லுப்பு.

ஆச்சப்பாசமாதியினற்கல்லுப்பாச்சு ஆதியென்றவுப்பாச்சுஇந்துப்பாச்சு, நீச்சப்பாபாழிடத்திற்பிறந்தமுப்பு நீயறிந்தாற்காயசித்தும்வாதமாச்சு, போச்சப்பாகலியுடனே நமனேவெல்லாம் பொல்லாதசண்டாளர்கிகழ்தம்பேசி, ஏச்சப்பாபணம்பறித் தோடிப்போவார்என்மகனேதெளிவாக இயம்பினேனே. (ருஅசு)

கதியுப்பு.

இயம்பிடவேமாணுக்காளினியதொன்று மென்மக்காள் வேறென்றுங்கொடிதானென்றும், நயம்பிடவேசல்லியென்று மாத்தானென்று நஞ்சென்றுமிலையென்றும்பைதானென்றும், பயன்படவே புடன்பிறந்தாரென்றுஞ்சொல்வார், பஞ்சபூதப்பொருளாம் பாருபாரு, மயம்படவேதானெடுத்து மதற்குநேராய் வாங்குவாய் கம்பியுப்பைமைந்தாகேளே. (ருஅஎ)

மூப்புகுரு.

கேளடாஅபச்சட்டிதன்னிலிட்டுக் கெடியாகவுலையில்வைத்துருகும்போது, வாளடாதுண்டுதுண்டாயறுத்துத்தாக்கி வாங்கியது கொடியசுன்னமாகும்பாரு, நாளடாஎட்டிலொன்றுசாரங்கூட்டி நன்றாகத்தானரைத்துப்பீங்கானுள்ளே, தாளடாகுழிவெட்டிப் பாண்டம்வைத்துச் சாணியிட்டுமேற்பீங்கான்தன்னில்வையே. ()

வையப்பாமேல்மூடிச்சீலைசெய்து மண்ணிட்டுமூடியே வீரம்போடு பையப்பாபட்சத்திற்செய்நீராகும் பாலகனேசெயநீரைப் பதனம்பண்ணு, அய்யப்பாசமாதிதன்கல்லைவாங்கி யறுத்துமே வழலைதனைவாங்கிக்கொண்டு, செய்யப்பாதீட்சை செய்தகம்பியுப்புத் திறமாகப்பலம்பத்து நிறுத்திடாயே. (ருஅசூ)

நிறுத்துநீ அபச்சட்டிதன்னிற்போடு நீயடுப்பின்மேல்வைத்து நெருப்புமூட்டு, மறுத்துமேவமழலையதுபலந்தானெட்டு மாட்டுவாய் சிறுகவதில்வாங்கிக்கொண்டு, நிறுத்திடாய்ப்படிவழலைபுப்புகாலு நே ரடாகற்சுன்னமதுதான்ரண்டு, திறத்துடனேபொடிபண்ணிக்கூடச் சேரு சேர்த்தெல்லாங்கட்டியது செயமுமாமே. (ருகூ०)

ஜெயமானவுப்பெல்லாமுருகும்போதுதிறமானவீரமொடுசூட ன்வெள்ளை, நபமாகப்பலமொன்றுபொடித்துத்தூவி நன்றாகவிர விரவிநீயிறக்கிப்போடுபுயலாகக்குளிர்ந்தபின்புவாங்கியப்பாபோட் டடாகல்வத்திலரைக்கக்கேளு, மயமானதேசிநீர்தன்னைவாங்கி மா ட்டியே தெளிவிறுத்து வார்த்திடாயே. (ருகூக)

வார்த்துநீயரைக்கையிலேபூவிநீறு மைந்தனேதீட்சைசெய்து பலந்தான்மூன்று, சேர்த்துமேசாமமொன்றரைத்துலர்த்திச்செய் துவைத்தவெடியுப்புச்செயநீர்வார்த்து, நேர்த்தியாய்சாமமொன்ற ரைத்துவாங்கி நேராகவில்லைகட்டியுலரபபோடு, காத்திடுவாய்பட் சமொன்றுரவியிற்காய்ந்தாற் கட்டாகமணவரையிற் புடைத்துப் போட்டே. (ருகூஉ)

போடப்பாவோட்டிலிட்டோடுமூடிப் புத்தியுடன்சீலைசெய்து போட்டுவாநீ, ஆடப்பாவிப்படியேயைந்துபுடம்போடு அப்பனே பின்புநீகல்வத்திட்டு, தேடப்பாகடுங்காரச்செயநீர்விட்டுச் சேர்த் துநீசாமமொன்றுதிறமாயாட்டி, நாடப்பாவில்லைதட்டிரவியிற்போ டுநன்றானகடுங்காரச்செயநீர்குத்தே. (ருகூங)

குத்தியேரவியிலிட்டுப்பட்சமொன்று குறையாமலடிக்கடியே செயநீர்குத்து, பத்தியேயுலர்ந்தபின்பு சட்டியொன்றிற் பாங்கான சுன்னத்தைப்பரப்பிக்கொண்டு, நத்தியேபூநீறுமேலேயிட்டு நடுவி லேவில்லைவைத்துமேலும்போடு, சுத்தியேமேல்மூடிச்சீலைசெய்து துடியாகவாலுகையின்மேலேயேற்றே (ருகூச)

ஏற்றியேகணபதிக்கும்வயிரவல்லிம் என்தாயார்தங்களிடபூ சைசெய்து, நேர்த்தியடாநாற்சாமமணலைமூடி நெருப்பாறிக்குளிர் ந்தபின்பு எடுத்துப்பாரு, பார்த்திபனேகுருவென்னகொடியவே கம்படுமுன்னேயண்டரணடநீறாய்ப்போகும், காத்திருந்தவமுன க்குச்சுத்தியாச்சு கைதொட்டசரக்கெல்லாங்கட்டுந்தானே. (ருகூரு)

திருமூலர்கொங்கணர்பேசியது

கட்டினார்திருமூலர்கொங்கணருமையா கருவென்னமூத்தானு ப்பென்றேசொன்னார், ரெட்டிகழச்சுன்னமென்றுஞ்சொல்வார்

சொல்வாரிதமானபோகருமேழுப்பாழென்றார், தட்டினார்பிர்மமுனிகொடிமாவென்பார் தாளனரோமரிஷிநஞ்சாமென்றார், முட்டினாரவரவர்கள் வெவ்வேறாக மொழிந்திட்டார்கருவையெல்லாமுழுக்குந்தானே. (ருசுசு)

சாபம்

காணன ஆணவத்தால்விரித்துச்சொன்னேன் சண்டாளர்க்கிந்நூலையீந்தாயானால், வானன தவங்குறைந்துநாகில்வீழ்ந்து வானிலிடிதான்விழுந்துமாண்டபின்னும், காணனபர்வதங்கள்செடிபூடாகிக் கண்கெட்டுவெகுகோடிகாலமட்டும், வேனனவிரண்டுதலைசர்ப்பமாகி விழுந்திடுவாய்சத்தியமாய்விளம்பினேனே. (ருசுஎ)

விளம்பினேன் தாய்சொன்னபடியேயானும் வேறுமினிக்கருவில்லைவிரைந்துபாரு, குளப்பிமனம்போகாமற்றிடமாய்நில்லு கூறுவார்வெவ்வேறுகொளுகிச்சொல்வார், உடம்பிலத்துப்பலநூலுமுய்த்துப்பாரு உன்னைவிட்டதொன்றுமில்லையுண்மையுண்மை, தளம்பினாலென்மனந்தனித்துப்பாருதாய்யநீமறவாதேசாற்றினேனே.()

பாஷாணக்கட்டு

சாற்றுவாருலதத்தில்வசனங்கேளீர் தாயானமலம்போனால் வாதமபோச்சு, ஆற்றினார்பணமென்னபாஷாணந்தானுகுமென்று சொல்வார்களறிந்துபாரு, மாற்றுவார்பிரிதீவின்பெருமாளைச்சேவி வசனமிதுவறிந்து கொண்டுதாயைப்பூசி, கூற்றுவனும்பாஷாணந்தன்னைக்கட்டகூறுகிறேன்மாணுக்காள்குறியில்நில்லே. (ருசுகூ)

குறியென்னசாரநீர்தன்னில்வைத்துக்குடிலமற்றதுரிசிலொருபலந்தானப்பா, நெறியென்னகல்வத்திலிட்டபின்பு நீரோடுவழலையிலோர்காசுதூக்கி, அறிலென்னவீரமொடுசூதம்பூர மழகானஉரப்புழுகுகுருவண்டோடு, முறையெனனவகைவகைக்குக்காசுபோடு முன்வைத்தகடுங்காரநீரிலிட்டே (சுOO)

நீரிலேயிட்டுமதுசாமமொன்று நெறியானநாதவிந்தில்வழலையிட்டு, பாரிலிதுநீராகுமந்நீர்விட்டுப் பதராமற்கடிகையொன்றரைத்துப்போடு, சீரிலதைதவில்லைதட்டியுலரப்போடு திறமானபூநீறுக்குள்ளேவைத்து, வீரியமாயஞ்செருவிற்புடத்தைப்போடு வேகமெத்ததுரிசினிடசுன்னந்தானே (சுOக)

சுன்னத்தைப்பிங்காணுஞ்சிமிளில்வைத்துச் சுத்தமாய்திருகுகள் ளிப்பாலைவாங்கி, எணனொத்ததிருகுகள்ளியுப்பினேடு யிதமான துரிசிலொருகாசிபோடு, தன்னொத்தசலமாகுமிறுத்துக்கொண்டு தான்வெள்ளைப்பாஷாணம்பலந்தான்வாங்கி, மன்னொத்தக்கச்சுன் னத்துள்ளேவைத்து வாரடாபனம்பாலைவிட்டுநீற்றே. (௩0௨)

நீற்றுவதுயேழுதிறங்கழுவிப்போடு நினைவாகரவியிலிட்டுயுலர் ந்தபின்பு, ஏற்றுவது வழலையுடச்சுன்னந்தன்னில் எடுத்திடுவாயக் காசிடைதான்வாய்நீர்விட்டு, சாற்றுவது பாஷாணந்தன்னிற்பூசி தப்பாமல்ரவியிலிட்டுக்காய்ந்தபின்பு, கூற்றுவனும்பிரேகத்தகட் டில்வைத்துக் குறிப்பானமால்நீரைச்சுருக்குத்தாக்கே. (௩0௩)

தாக்கப்பாசாமமொன்றுயெடுத்துக்கொண்டு தனித்தேனைக்க டிகைரண்டுசுருக்குத்தாக்கு, நோக்குதற்குப்பாஷாணங்கட்டிப்போ கும்நொடிக்குமுன்னேவாதவீத்தைக்குள்ளாச்சு, வீக்குவதுவெள் வங்கஞ்சுத்திசெய்து மேலானகுகையில்வைத்துருகும்போது, ஆக் குவதுதிரைகொண்டுபாஷாணத்தை யதுவாங்கிவங்கமதுகட்டிப் போச்சே. (௩0௪)

கட்டினவெள்வங்கத்திலொன்றுவாங்கி கசடற்றவெள்ளியதிலீ ய்ந்தாயானற், பட்டுதடாவெள்ளியடிநொருங்கிப்போக்சுபலனிறுத் துவெள்வங்கங்கல்வத்திட்டு, கொட்டப்பாயாஷாணம்பலந்தானொ ன்று கூடவிட்டுச்சூதமொன்றுவீரமொன்று, தட்டியறைதிருகு கள்ளிப்பால்நீர்விட்டு ஜாமமொன்று அறைத்துவில்லைக்கட்டிப் போடே. (௩0௫)

(லிங்கமெழுகு.)

போடப்பாரவியிலிட்டுகாய்ந்தபின்பு புகழானதிருகுகள்ளிச் சாம்பலோடு, கூட்டப்பா பூநீறுஞ்சமனுச்சேர்த்துக் குப்புறவே யோட்டிலிட்டுலிங்லைவைத்து, மூடப்பாமேலுமிட்டுச்சீலைமண்செ ய்து முறையோடேகுக்கிடமாய்ப்புடத்தைப்போடு, காட்டப்பாதிரி வானேன்குருவுமாச்சு கையில்லாக்கிரிவசமாய்க்காணுங்காணே. ()

காணவேசெம்பெருத்தம்பூவேவாங்கிக் கசக்கியேதுரிசிபென் றசுன்னம்போட்டு, பூணவேபிசந்தழுத்திக்கடிகைசென்று புழிந்து டவே தண்ணீரும்புனலைவாங்கி, நாணவேவழலையிட்டுவைத்துக்

கொண்டு நலமானவிம்பிவைப்புலிங்கம்வாங்கி, தோணவேபொடி பண்ணிஅயக்கரண்டிதன்னிற் றுலக்கியதுயிட்டுநீசொல்லக்கேளே.

கேளடாசெம்பருத்தம்பூச்சாறோடு கொடியானமுலைப்பாலுந் தேனுங்கூட்டி, தாளடாயெலுமிச்சம்பழச்சாறோடு சமன்சேர்த்து வெண்காரஞ்சத்தேயிட்டு, நாளடாநீர்வற்றிவரும்போதப்பா நன் றுகக்கிண்டிவரில்மெழுகாம்பாரு, வேளடாயெரித்தசிவன்சொன் ஞரிந்தமேலானமெழுதனிற்றங்கஞ்சேரே. (சு0அ)

தக்கமதுரேக்கடித்துப்பத்துக்கொன்று தான்சேர்த்துவீர மிட்டுவாட்டிப்போடு, பங்கமில்லாமற்பிசைந்துநவலோகத்திலீயந் தாற் பத்தரைமாற்றுகுமடாபரிந்துபாரு, சிங்கமதுக்கெதிர்பட்ட யானைபோல செயமான துரிசிகண்டாற்சூதஞ்சாகும், வங்கமதுக் கோடாதுவேதைதானு மைந்தனேசவாதுசற்றேமாட்டிப்போடே.

மாட்டுகிறதுறைக்கெல்லாஞ்சவாதுவேணடு மகத்தானகன்ன மெல்லாம்தேவையாகும், கூட்டுகின்றயினமெல்லாஞ்சுத்ததங்கஞ் கொன்றதொருநாகமுடனயத்திஞகம், பூட்டியேதொந்தித்துகெந்தி தன்னைப் போடுவாய்ச்சமனுய்க்கல்வத்திட்டு, ஆட்டுவாய்க்காசம் பூச்சாறுவிட்டு அப்பனேயுலர்த்தியதைக்குப்பிக்கேற்றே. (சுக0)

(குப்பிவைப்புச்செந்தூரம்)

ஏற்றியேபனிரண்டுசாமந்தானு மெடுத்தாறியெடுத்துப்பார் செந்தூரந்தான், சாற்றியேபணவிடைதானவலோகத்திற் றுக்கடா ரசந்தன்னிற்றசைமாற்றமாகும், தேற்றியேகுன்றியிடத் தேனிற் கொள்ள தேகத்திற்கழிவில்லைதேவியைநீபூசி, கூற்றுவனுற்வரும் போதுகற்றதெல்லாங்குறுங்கநின்று தடுக்குமே, கூறினேனே. ()

(பூபதி)

கூறினேன்மூன்றுநூறுமுப்பத்தாறு கொடியதொருபூபதிதா னென்றுசொன்னேன், நூற்றிலேநீற்றுமுறை நன்றுய்ச்சொன் னேம் நுவலுவேன்பூபதிதானென்றுகேளு, தேறியேஅயசத்துக் காந்தச்சத்துத் திறமானஅபிரேகச்சத்துதங்கம், வீறுமேதிருவெ ள்ளிசெம்பு வெண்கலம்முபித்தளையும்திராவுயாமே. (சுகஉ)

ஆமென்றமுலைசசங்குநண்டுநத்தை ஆமையோடானையின்பல்லுங்கூட்டு, தானென்றகழுதைப்பல்மாட்டுக்கொம்பு கந்தமொடுமானஸ்திஅஞ்சனக்கல், தானென்றநல்நாறுபுலிப்பால்தானும் நல்லசிப்பிக்கரும்பூனைநாயினஸ்தி,கோனென்றமுதலைப்பல்பன்றிக்கொம்புகொடியதொருகாண்டாமிருகக்கொம்புதானே. (கூகங)

கொம்புடனேகாடியுடத்தந்தமெல்லாங் கொடியசத்துவாங்குதற்கு திராவகமெண்ணூற்றிற்,றெம்புடன்சொன்னேனீ வழலைக்கூட்டித்திராவகத்தின்முறைப்படியேசத்தைவாங்கி,நம்பியேயிந்தவகைசத்தையெல்லாம் நன்றாகயொருநிறையாய்க்குகையிலிட்டு, அன்புடையகுருவுடனேகுடோரிகார மணைத்தூதசத்தெல்லாம்மாடுந்தா.

ஆடையிலேதசையண்டச்சத்தைத்தாக்கு அதின்பிறகுநவரத்தினச்சத்தைநீட்டு, நாடையிலேகுகையாற்றிமசத்தைவாங்கிநாட்டியேகல்வத்தில்நொறுக்கிக்கொண்டு, சாடையிலேஅரிதாரஞ்சிலையும்வீரம் ஜாதிலிக்கம்கெவுரிவெள்ளைநிமளைத்தானும், தேடையிலேகுதிரைப்பல்யுருக்குதொட்டிசிங்கிகருநாபியுடன்செயநூதந்தானே.

சூலமொடுராசவற்கமிவையெல்லாந்தான் றாக்கடாநவரத்தினமிடைக்குநேராய், நாதமுடன்காசாம்பூச்சாறுமல்லாமல் நாட்டிஉள்ளமிருக்கங்கற்றாழம்பாலு, நாதமுதன் பொற்றலையின்வகையொன்றிற்கு நவிலவேஒருசாமம்விலைதட்டி, சேதமென்னயிரவிதன்னிலுலர்த்திப்போடு செப்பினேனிடைக் கிடைதான்கெந்திகூட்டே. (கூகசு)

கூட்டியேபோட்டாற்றி டுவாய்வழலைசேர்த்துக் குறையாமல்முன்னிடையாய்க்குப்பிக்கேற்றி, நாட்டியேயறைமண்ணாற் சீலைசெய்துநன்றான வாரலுகையிற்பாண்டம்வைத்து, காட்டியேகாலுவிரல்ண்மதாளியிட்டுக் காசியென்றமேருவைத்தா னடுவேவைத்து, தீட்டியேகுப்பியுடக்கழுத்துமட்டுஞ் சிறுமணலையிட்டுமேற் செப்பிடாயே. (கூகஎ)

செப்பிடுவாய்குப்பிவாயிற் பலப்பக்கல்லாற் செம்மிநீவண்கட்டியனலைமூட்டி, பம்மிடுவாய்வாலையொடுநிருவாணிகரும் பரமசிவன்கணபதிக்குந்திருமாலுக்கும் நம்முடனே அறுமுகர்க்குத் தியானபூசை நாதாக்களபூசைபண்ணிசாபந்தீர்த்து, உம்முடனேமந்திரங்களுச்சரித்து யொருவிறகால்மூன்றுநாளெரித்திடாயே. ()

எறித்திடுவாய்நாற்றீயுமெறிக்கும்போது யென்மகனேகெந்தி யிற்றீயெழும்புமாகிற், றரித்தகுப்பிவாய்திறந்துசலாக்கையிட்டுத் தான்கிண்டிறசலாகுமுனைகருகருக்குமாகிற், பெறுத்ததொருசெந் தூரமாச்சுதென்று போரானஅக்கினியைநிறுத்துப்போடு, உருத் துடனேதீயாறியெடுத்துப்பாருஉசராதுதளத்திற்செந்தூரந்தானே

தானென்னசெந்தூரமொருமாவீதம் தாறுமண்டலங்கொள் ளசட்டைபோகும், வேனென்றநோய்களெல்லாங்கதலேபுக்கும் வேதைக்குயணுபட்டால்மேருவாகும், நானென்றஆணுவத்தைவி ட்டலையா நமனொருநாளில்லையடாநாடிக்காணும், ஊனென்றதே கத்தில்வாசிதானு முள்ளடக்குவெடியோடாதுற்றுப்பாரே. (௬௨௦)

உற்றுற்றுப்பர்க்கைபிலேஞானமாற்கம்; யொளிகாணுங்கர்ம மெல்லாமோடிப்போகுஞ், சுற்றமனந்தளராதேபலநூலபாரு சற்கு ருவின்பதம்போற்றிநிலைபில்நில்லு, மற்றுமிந்தபெய்தும்குற்றமற்று நிலையில்நின்றுற்சாபமேதுகூடாதே பலகூட்டங்கூறினேனே. ()

கூறினசொல்மறவாதேதாயைப்போற்று குணமானவயித்தி யத்தைக்கூர்ந்துபாரு, வேறுமொருளில்லைப்படி முடிதானப்பா விங்கிநின்றகாவிடத்தில்விளங்கும்பாரு, மாறிநின்றுதிருடாதேமதம் பேசாதேமற்றநூல்பொய்யென்றுவசனிக்காதே, ஆறுமுகன்பதம் போற்றிக்கையில்நெல்லி அருங்கனிபோற்சொன்னதிந்தஅறுநூறு முற்றே. (௬௨௨)

அகஸ்தியமகாமுனிவ-ரருளிச்செய்த,

## வயித்தியபெருவல்லாதி-௬௱

முற்றிற்று.